

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்.2.

மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடமும் கிடைக்கும்:

மெஸர்ஸ். குப்தா கார்ப்பொரேஷன்

தபால் பெட்டி நெ. 35, 17-A/428, அருணாசல ஆச்சாரி தெரு, சேலம்

குப்தா ஏஜன்ஸீஸ் திருவல்லிக்கேணி ஹைரோடு, மதராஸ்

சூபர் & ஸெண்ட்ரல்-பெங்களூர் 2-வது வாரம்

12-3-48 முதல் கோவை ராயல் தியேட்டரில் மகத்தான ஆரம்பம்!

★

உங்களூர் தியேட்டரில் விரைவில் எதிர்பாருங்கள்

இது நிஜமா
(TWINS)



தமிழ்ப்பட உலகில்
ஒரு நவீனம்!

★

கலை, கற்பனை, காதல்,
வீரம், சோகம், பயங்கரம்
ஆகியவை நிறைந்தது

★

டைரக்ஷன் :
கிருஷ்ணகோபால்

★

அஸோஸியேட் டைரக்ஷன்
& பாட்டு :
பாலசந்திரன்

★

ஸ்டுடியோ :
ரஞ்ஜித், பம்பாய்


★

TNT
ரிலீஸ்

பாலசந்திரன் : சரோஜினி : சீதாராமன்
ராஜம் : கடக்கர் மற்றும் பலர் நடிப்பது

தமிழ்நாடு டாக்கீஸ்.,
161, மவுண்ட் ரோட்., மதராஸ்.

டால்டாவில்
வறுத்த பூரிகள்



எப்பொழுதும்
நன்ருக
வாய்க்கின்றன

கோதுமைமாவிலோ, மைதா மாவிலோ அல்லது இரண்டையும் கலந்தோ பூரிகள் செய்யலாம். ருசியான பூரிகள் செய்ய, மாவில் சிறிது டால்டாவை கலந்து வேண்டிய ஜலம் சேர்த்துக் கொண்டு பதமாவதுவரை நன்ருக பிசையவும். மூட்டியால் மாவை அமுக்கி சிறிது ஜலம் தெளித்து ஒருமணி நேரம் மூடிவைக்கவும். பிறகு சிறிய பந்துகளாக உருட்டி அப்பளக்குழவியால் பரத்தி சூடான டால்டாவில் போடவும். வறுக்கும்போது சட்டுவத்தால் சுற்றிலும் பூரிகளை மெதுவாக அமர்த்திக்கொண்டிருக்கவும். உப்பினதும் பூரிகளை மறுபக்கம் திருப்பவும். [illegible] சிவந்ததும் வாணலியிலிருந்து எடுத்து, காகிதத்தில் எண்ணெயை வடித்து சூடாக பரிமாறுங்கள். டால்டாவில் வறுத்த பூரிகள் சத்துள்ளவை.

சமையல் சம்பந்தமான பிரச்னைகளைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமா? எங்களுக்கு எழுதுங்கள் :

தி டால்டா அட்வைஸரி ஸர்விஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1



HVM. 75-23 TM


அவளுக்கு
வியாதிக்குப் பிறகு
அவனுக்கு
பலங்குன்றிய சமயத்தில்
அவர்களுக்கு
வளரும் போது
விடோபெரின்
ஒரு
I·T·L
தயாரிப்பு.
தயாரிப்பவர்கள் :
மதராஸ்


வாழ்க்கையில்
புதிய ஒளி
பண்டிட் டி. கோபாலாசார்லுவின்
ஜீவாம்ருதம்
ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட் மதராஸ் 17

கல்கி

பொருளடக்கம்

மலர் 7 இதழ் 33 | மார்ச் 14 | சர்வஜித்து ௵ பங்குனி 1

"கல்கி" நேயர்களுக்கு

உபயகுசலோபரி. இந்த இதழில் "அலை ஓசை" என்னும் தொடர் நாவலைத் தொடங்கலாம் என்று எண்ணியிருந்தோம். ஏற்கெனவே இரண்டு தொடர் விஷயங்கள் வெளியாகி வருவதை முன்னிட்டு இரண்டு வாரம் தள்ளிப்போட வேண்டியதாயிற்று. மார்ச் 28உ "கல்கி" இதழில் "அலை ஓசை" நிச்சயமாக ஆரம்பமாகும். அதற்குள், பிரேம் சந்த் அவர்களின் "சந்திர ஹாரம்" என்னும் தொடர் கதை ஏறக்குறைய முடியும் கட்டத்துக்கு வந்துவிடும்.



"அலை ஓசை" என்னும் தொடர் கதையில் சீதா, லலிதா, தாரிணி என்னும் மூன்று கதாநாயகிகள் வருகிறார்கள். இவர்களில் யார் பிரதம கதாநாயகி, யார் இரண்டாவது மூன்றாவது கதாநாயகிகள் என்று சொல்வது எளிய காரியமல்ல. நேயர்கள் தங்களுடைய உசிதம் போல் நிர்மாணித்துக் கொள்ள வேண்டியது.

கதையில் வரும் ஒரு முக்கிய நிகழ்ச்சி இந்த இதழின் அட்டைச் சித்திரமாக அமைந்திருக்கிறது. படகிலே இரண்டு கதாநாயகிகள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவரின் உள்ளத்தைப் பிரதிபலிக்கும் முகபாவம் மேலே தனியாக எடுத்துக்காட்டப்படுகிறது. வெளியிலே காற்று வீசுகிறது; அலையின் வேகத்தினால் படகு ஆடுகிறது. உள்ளத்திலும் புயல் அடித்து அலை எழுந்து ஒரே கொந்தளிப்பாயிருக்கிறது. இப்போது இவ்வளவுதான். மற்ற விவரங்கள் பின்னால். சிரமத்துக்கு மன்னிக்கவும். இப்படிக்குத் தங்கள்..............

கல்கி

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 33

என்ன சேதி?

புதுக்கோட்டைக்கு ஜே!

ஒரு சமயம் பண்டித ஜவாஹர்லால்ஜி தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தார். அப்போது புதுக்கோட்டைக்கும் அவர் விஜயம் செய்வதாக ஏற்பாடாகியிருந்தது. ஆனால் "புதுக்கோட்டைக்குள் அவர் புகுதல் கூடாது" என்று சமஸ்தானத்தின் உத்தரவு பிறந்தது! புதுக்கோட்டை எல்லைக்கு வந்தபோது சமஸ்தானப் போலீஸார் ஜவாஹரின் மோட்டாரைத் தடை செய்தார்கள். ஜவாஹர் சமஸ்தானத்தின் பரப்பைக் குறித்து விசாரித்தார். "ஆஹா! இவ்வளவு விரிந்து பரந்த சாம்ராஜ்யத்திலே தானா இவ்வளவு தடபுடலும் தடை உத்தரவும்? மோட்டாரைத் தடை செய்தால் செய்யட்டும். எனக்கு மோட்டார் வேண்டாம். காலால் நடந்தே இந்தச் சமஸ்தானத்தைக் கடந்து விடுகிறேன்!" என்று சொல்லிக் காரிலிருந்து இறங்கி விடு விடு என்று நடக்கத் தொடங்கினார்!

இப்படியாகப் பாரதத் தாயின் தவப் புதல்வர் பாதம்பட்ட புதுக்கோட்டை சமஸ்தானம் சென்ற வாரத்தில் இந்தியாவோடு ஐக்யப்பட்டு விட்டது! ஜவாஹரைத் தலைவராகப் பெற்ற அரசாங்கத்தின் கீழ் நேரடியாக வந்துவிட்டது. புதுக்கோட்டை என்று ஒரு தனிப்பட்ட ராஜ்யமோ, தனி அரசாங்கமோ இனிக் கிடையாது. புதுக்கோட்டைக்கு ஜே!

வாழ்க மகாராஜா!

தேசமெங்கும் பரவி வந்த சுதந்திர ஆவேசம் சில காலமாகப் புதுக்கோட்டையிலும் புகுந்து மக்களின் உள்ளத்தில் கிளர்ச்சியை உண்டு பண்ணி வந்தது. பொது ஜனத் தலைவர்கள் பொறுப்பாட்சி வேண்டுமென்று கிளர்ச்சி நடத்தினார்கள். சில சமயம் இக் கிளர்ச்சி விரும்பத்தகாத நிலைமை



அடைந்தது. தலைவர்களுக்குள் வேற்றுமை தலை எடுத்தது: சமஸ்தான காங்கிரஸில் பிளவு ஏற்பட்டது: "நான்தான் தலைவன்" "நான்தான் தலைவன்" என்ற போட்டிக் கூச்சல் எழுந்தது. போட்டிக் கூட்டங்களும் அவற்றில் சச்சரவுகளும் நடந்தன. இவ்வளவுக்கும் இடையில் மகாராஜாவின் மண்டையை எல்லாருமாகச் சேர்ந்து உருட்டி வந்தார்கள். இல்லாத பொல்லாத பழிகளையெல்லாம் அவர் தலைமேல் சுமத்தியதாகத் தெரிகிறது. பார்த்தார் புதுக்கோட்டை மகாராஜா! புறப்பட்டார் நேரே டில்லிக்கு! சர்தார் வல்லபாயிடம் கேட்டார் யோசனை! சர்தாருக்கும் இவ்விடத்து நிலைமை தெரிந்திருந்தது போலும்! சரியான யோசனையைக் கூறினார். அதை மகாராஜாவும் ஏற்றுக் கொண்டார். "போட்டி வேண்டாம்; பொறுமை வேண்டாம்; புதுக்கோட்டைத் தனியரசும் இனிமேல் வேண்டாம். சுதந்திர இந்தியாவுடன் புதுக்கோட்டையை இரண்டறக் கலக்குமாறு ஐக்யமாக்கி விடுகிறேன்!" என்று அறிவித்தார். அறிவித்ததுதான் தாமதம்; சென்னை சர்க்கார் தங்கள் உத்தியோகஸ்தரை அனுப்பினார்கள்; புதுக்கோட்டை நிர்வாகத்தை எடுத்துக் கொண்டார்கள். புதுக்கோட்டை மகாராஜா சரியான சமயத்தில் சரியான காரியத்தைச் செய்தார். அவர் மகாராஜாவாயிருக்கட்டும்!

(புதுக்கோட்டைக்கு அல்ல; பொதுப்படையாக வாழ்த்தினோம்.)

வெல்க தமிழகம்!

தமிழகத்தின் எல்லையைப் பற்றி சில நாளாகப் பேசப்பட்டு வருகிறது. தமிழ்நாடு தனி மாகாணம் ஆகவேண்டும் என்று தமிழ் மக்கள் ஒரு முகமாகக் கோருகிறார்கள். தமிழ்நாடு தனி மாகாணம் ஆகி, தனி அரசாங்கம் பெறும்போது,

தமிழகம் முழுவதுமே அதில் அடங்கியிருக்க வேண்டும். புதுக்கோட்டை வழி காட்டியிருக்கிறது. அடுத்தபடி புதுச்சேரியும் காரைக்காலும் பிரஞ்சு ஆட்சியிலிருந்து விடுபட்டுத் தமிழகத்தில் சேர வேண்டும். வடவேங்கடம் வரையில் தமிழகம் என்பது ஐயமற ஏற்படவேண்டும். இதெல்லாம் போதுமா? நீலத்திரைக் கடல் ஓரத்திலே நின்று தவம் செய்யும் குமரி அம்மன் கோயில் உள்பட, திருவாங்கூரில் தமிழர் வாழும் பகுதிகள் தமிழ் மாகாணத்தோடு சேர்ந்து விடவேண்டும்.

திருவாங்கூர்த் தமிழர்

சில காலமாகத் திருவாங்கூரில் வாழும் தமிழ் மக்களிடையே பெரும் கிளர்ச்சி ஏற்பட்டு வளர்ந்து வருகிறது. திருவாங்கூரில் சமஸ்தான காங்கிரஸ் அதிகாரத்துக்கு வந்த பிறகு அங்குள்ள தமிழரின் உணர்ச்சி மிகப் பொங்கிப் பெருகியிருக்கிறது. சமீபத்தில் திருவாங்கூர் சட்டசபைத் தேர்தலுக்கு நடந்த தேர்தலில் தமிழ்நாடு காங்கிரஸைச் சேர்ந்த அபேட்சகர்கள் மகத்தான வெற்றியடைந்திருக்கிறார்கள். இந்தப் புத்துணர்ச்சி காரணமாகத் திருவாங்கூர்த் தமிழர்கள் பல கொடுமைகளுக்கும் இன்னல்களுக்கும் உள்ளாகி வருவதாக அறிகிறோம். "இது தர்மம் அன்று; நியாயமன்று!" என்பதாகத் திருவாங்கூர் சர்க்காருக்கும் சமஸ்தான காங்கிரஸ் தலைவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

திருவாங்கூரிலுள்ள தமிழர்களும் அவர்கள் வாழும் நிலப்பகுதியும் சீக்கிரத்தில் ஒருநாள் தமிழ் மாகாணத்தோடு சேர்ந்தேயாகவேண்டும். அப்படியிருக்கும்போது, திருவாங்கூர் அரசாங்கமும் சமஸ்தான காங்கிரஸும் அங்குள்ள தமிழர்களைக் கொடுமைப்படுத்தி அவர்களுடைய மனக் கசப்பை அதிகமாக்குவதில் என்ன பிரயோஜனம்? திருவாங்கூர் சர்க்கார் காலப்போக்கை உணர்ந்து நடந்து கொள்ளட்டும்; திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் வாதிகள் தாங்கள் கோரிப் பெற்ற ஜனநாயகத்தையும் சுயநிர்ணயத்தையும் தமிழ்ச் சகோதரர்களுக்கும் அளிக்கத் தயாராகட்டும்.

கொள்ளையோ கொள்ளை

சில நாளைக்கு முன்னால் காப்பிக் கொட்டை விஷயம் ஒரு பெருந்தொல்லையாக இருந்து வந்தது. இப்போது அது கொள்ளையாக மாறிப்போயிருக்கிறது! இரண்டு வாரத்துக்கு முன்னால் காப்பிக் கொட்டை விலை வீசை மூன்று ரூபாய்! இன்று வீசை ஆறு ரூபாய்! பைசாவுக்குப் பைசா விலை அதிகமாகியிருக்கிறது! அவ்வளவுதான். அதிக விலைக்காவது கிடைக்கிறதா என்றால், கிடையாது! அரை வீசை காப்பிக் கொட்டைக்காக ஆனரபிள் ஹைக்கோர்ட் ஜட்ஜ்......... அவர்கள் ஆள்மேல் ஆள்விட்டு சிபார்சு மேல் சிபார்சு செய்து 'போன்' மேல் 'போன்' பேசிச் சம்பாதிக்க வேண்டியிருக்கிறது என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்!

தென்னிந்தியாவிலுள்ள மத்திய வகுப்பார் ஏற்கெனவே எத்தனையோ கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இந்தக் காப்பிக் கொட்டைக் கொள்ளையும் இப்போது சேர்ந்து அவர்களை மேலும் வதைக்கத் தொடங்கியிருக்கிறது.

இந்தக் காப்பிக் கொள்ளைக்குக் காரணம் நமது இந்திய சர்க்காரின் அரைகுறைத் திட்டம் என்பதை நினைக்கும்போது வேதனை அதிகமாகிறது.

பாதிக் கிணறு தாண்டினால்?

காப்பிக் கொட்டை விஷயமாகப் பாதிக் கிணறு தாண்டுவது போன்ற காரியத்தை இந்திய சர்க்கார் செய்திருக்கிறார்கள். விலைக் கட்டுப்பாட்டை மட்டும் எடுத்து விட்டார்கள். ஆனால் காப்பிக் கொட்டை உற்பத்தி செய்யும் தோட்டக்காரர்களும் காப்பிக்கொட்டை வியாபாரிகளும் எப்படியோ போகட்டும் சும்மா என்று விட்டுவிடுகிறார்களா என்றால், அதுதான் கிடையாது.

இந்தியக் காப்பி போர்டு என்று ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. அது இந்திய அரசாங்கத்தின் அதிகாரம் பெற்ற காப்பிக் கொட்டை முதலாளிகள் ஸ்தாபனம்.

இந்தியக் காப்பி போர்டார் எல்லாக் காப்பிக் கொட்டைகளையும் திரட்டிச் சேகரித்துக் கொள்ளுகிறார்கள். எங்கேயாவது ஒரு மூலை முடுக்கில் ஏலம் போடுகிறார்கள். அந்தந்த இடத்துக்கு வேண்டிய அளவு ஏலம் போடுகிறார்களா என்றால் அதுவும் இல்லை. சென்னை நகருக்கு 150 டன் காப்பிக் கொட்டை தேவை. நூற்றைம்பது டன்னுக்குப் பதிலாகப் பதினேழு டன் சமீபத்தில் ஏலம் போட்டார்கள். இப்படிக் குறைவாக ஏலம் போடும் இடங்களில் கொள்ளை லாபம் பெற விரும்பும் கள்ள வியாபாரிகள் திரண்டு வந்து ஏலம் எடுக்கிறார்கள். சென்ற மாதம் 120 ரூபாய்க்கு விற்ற ஒரு 'அந்தர்' காப்பிக்கொட்டை இந்த மாதம் 250 ரூபாய்க்கு ஏலம் போயிருக்கிறது. இப்படி அதிக விலைக்கு ஏலம் எடுக்கிறவர்கள் வாங்கிய காப்பிக் கொட்டையை

இன்னும் அதிக விலைக்கு விற்பதற்காக அமுக்கி வைத்துக் கொள்கிறார்கள்! ஆகவே, வழக்கமாகக் காப்பிக்கொட்டை வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்குக் காப்பிக் கொட்டை கிடைப்பதில்லை.

இந்தியாவில் காப்பிப் பழக்கம் உள்ளவர்கள் எல்லாருக்கும் தேவையான அளவு காப்பிக் கொட்டை இந்நாட்டிலேயே விளைகிறது. நியாயமான விலைக்குக் காப்பிக் கொட்டையை விற்றுத் தோட்டக்காரர்கள், வியாபாரிகள் அனைவரும் நியாயமான லாபத்தை அடையக்கூடும். அப்படியிருந்தும் இந்தக் கொள்ளையும் அநியாயமும் நடைபெறுவதற்குக் காரணம் இந்தியக் காப்பி போர்டு என்னும் அரசாங்க முத்திரை பெற்ற ஸ்தாபனம் தான். இப்படிக் கொள்ளையில் வருகிற பணம் இந்திய சர்க்காருக்குப் போனால், ஒருவாறு திருப்தியடைய இடம் உண்டு. "ஏதோ, நம் தலைவர்களின் சர்க்கார் நடக்கிறது; பணத்தட்டு இல்லாமல் ராஜ்யம் நன்றாய் நடக்கட்டும்; நாம் கஷ்டப்பட்டாலும் பாதகமில்லை!" என்று பல்லைக் கடித்துக் கொண்டிருக்கலாம். அப்படியும் இல்லாமல் கொள்ளை லாபப் பணம் எல்லாம் காப்பித் தோட்ட முதலாளிகளுக்கே போய்ச் சேருகிறது.

ஒன்று, இந்திய சர்க்கார் இந்தியக் காப்பி போர்டைக் கலைத்து விட்டு, "தோட்ட முதலாளி ஆயிற்று; காப்பிக் கொட்டை வியாபாரி ஆயிற்று; பொது ஜனம் ஆயிற்று" என விட்டு விட வேண்டும். இல்லாவிடில், காப்பிக் கொட்டையைக் கட்டுப்படுத்தி, எல்லா இடங்களுக்கும் போதிய அளவு காப்பிக் கொட்டை அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும்

இல்லாவிடில், பெரிய 'காப்பிக் கலகம்' நாட்டில் ஏற்படும் என்று எச்சரிக்கிறோம். ஒவ்வொரு நடுத்தர வகுப்பினர் வீட்டிலும் பொழுது விடிந்த உடனே ஏற்படக் கூடிய 'கலக'த்தைத் தான் குறிப்பிடுகிறோம்! அமெரிக்காவில் பாஸ்டன் துறைமுகத்தில் முன்னொரு சமயம் நடந்த டீ கலகத்தைப் போல் இங்கே நடக்குமென்று தோன்றவில்லை. "பிரிட்டிஷ் கப்பலில் வரும் டீ எங்களுக்கு வேண்டாம்" என்று அமெரிக்கர் துறைமுகத்தில் நின்ற கப்பலில் ஏறி அதிலிருந்த தேயிலையை யெல்லாம் கடலில் கொட்டி விட்டார்களாம்! அந்த விதமெல்லாம் இந்த நாட்டில் உள்ள நடுத்தர வகுப்பினர் செய்யச் சக்தி அற்றவர்கள். இந்திய சர்க்கார் அதிகாரிகளைப் பார்த்து, மேற்படி அநியாயக் கொள்ளையை நிறுத்தினால்தான் காப்பி குடிப்பவர்களுக்கு விமோசனம்.

நிகழ்ச்சிச் சித்திரம்



மலைச்சாதியார் பாகிஸ்தானிலுள்ள சில கிராமங்களை ஆக்கிரமித்ததுடன் பாகிஸ்தான் விமான நிலையத்தையும் தங்கள் வசப்படுத்திக் கொண்டனர். — பத்திரிகைச் செய்தி

சாஸ்திரி


காஷ்மீர் விஷயமாக மீண்டும் ஆரம்பமாகியுள்ள ஐ.நா. சபைக் கூட்டத்தில் முன்னர் வாரக் கணக்கில் பேசிய ஸர். ஜபருல்லாகான் இப்போது மாதக் கணக்கில் பேச ஆரம்பித்து விடலாம் என்று அஞ்சப்படுகிறது. அப்படியானால்.....
ஐ.நா. சபை
..... க்ஷவரத் தொழிலாளி ஒருவரை கூட ஐ.நா. சபையின் நிரந்தர அங்கத்தினராக நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படலாம்!
வாருங்கள்! வாருங்கள்! நெருக்கடியைத் தீருங்கள்!
ஐ.நா. சபை

மீண்டும் குமுறுகிறது!

புலி வருகிறது, புலி வருகிறது என்ற கூற்று கதையிலே பொய்த்துப் போகவில்லை!

யுத்தம் வருகிறது, யுத்தம் வருகிறது என்ற கூற்றும் சரித்திரத்திலே பொய்த்துப் போகவில்லை!

1914-ம் வருஷத்துக்கு முன்பே யுத்தம் ஏற்படப் போகிறது என்ற வதந்தி மும்முரமாக இருந்து வந்தது. அந்த வதந்தி சிறிதும் ஆதாரமற்றதென நினைத்தவர்களும் உண்டு.

ஆனால் யூகோஸ்லேவியாவில் நிகழ்ந்த ஆர்ச்டியூக் தம்பதிகளின் கொலை, மருந்துக் குவியலில் தெறித்த தீப்பொறி போன்று திடீரென்று மகா யுத்தத்தை மூட்டிவிட்டது.

மேற்படி முதலாவது உலக மகா யுத்தம் ஆரம்பமாவதற்கு எந்தப் பிரதேசம் காரணமாக இருந்ததோ,— 1939-ம் வருஷத்தில் இரண்டாவது மகா யுத்தம் ஆரம்பமாவதற்கும் எந்தப் பிரதேசம் காரணமாக இருந்ததோ அதே பிரதேசம்தான் இப்போது மீண்டும் மூன்றாவது முறையாகக் குமுறிக்கொண்டிருக்கிறது!

அதற்கு முக்கிய காரணம் பிரிட்டன், அமெரிக்காவுக்கும் ருஷ்யாவுக்கும் ஏற்பட்டுள்ள அபிப்பிராய பேதம்தான்.

சென்ற மகா யுத்தம் நடந்துகொண்டிருந்த காலத்திலேகூட அந்த நாடுகளுக்குள் அடிக்கடி அபிப்பிராய பேதம் ஏற்படுவதும், பிறகு சர்ச்சில், ரூஸ்வெல்ட், ஸ்டாலின் இந்த மூன்று தலைவர்களும் ஒன்று கூடி வேற்றுமைகளைத் தீர்த்துக்கொள்வதும் வழக்கமாக இருந்துவந்தது.

ஆனால், அந்த மூன்று நாடுகளையும் நோக்கி யிருந்த பொதுவான யுத்த ஆபத்து தீர்ந்து, அவைகள் வெற்றி பெற்ற பின் நிலைமை முற்றிலும் மாறி விட்டது.

• • •

அவைகளுக்குள் புகைந்துகொண்டிருந்த வேற்றுமைகள் யுத்தம் முடிந்த பின் நாளுக்குநாள் அதிகமாகி, இன்று ஒன்றையொன்று நேரடியாகத் தாக்கும் நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டிருக்கின்றன!

பிரிட்டிஷ் தலைவர்களும், அமெரிக்கத் தலைவர்களும் ருஷ்யாவையும் பொது உடைமைக் கொள்கையையும் தாக்குவதையே தங்களுடைய தினசரி கைங்கர்யமாகக் கொண்டிருக்கிறார்கள்.

ஐரோப்பாவில், குறிப்பாக பால்கன் நாடுகளில் தன்னுடைய ஆதிக்கத்தை ஸ்தாபிக்க அமெரிக்கா பெரு முயற்சி செய்து வருவதுபோல், ருஷ்யாவும் முயற்சி செய்து வருகிறது.

ஐரோப்பிய நாடுகளுக்கு, நான் கோடிக் கணக்கான தொகை கொடுத்து உதவி புரிவதன் மூலம், அந்த நாடுகளை ருஷ்யாவின் ஆதிக்க வலையில் விழாமல் தடுக்க வேண்டுமென்பது அமெரிக்காவின் நோக்கம். ஐரோப்பாவில் ஆங்கிலோ அமெரிக்காவின் செல்வாக்கை அடியோடு தகர்த்து விட வேண்டுமென்பது ருஷியாவின் சங்கல்பம்.

யுத்தத்தை ஒற்றுமையுடன் வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டு வந்த வல்லரசுகள், உலக அமைதியை வெற்றிகரமாக ஸ்தாபிக்க முடியாமைக்குக் காரணம் மேற்படி போட்டா போட்டி மனப்பான்மையே என்பதில் சந்தேகமில்லை.

• • •

பாரசீக எண்ணெய் சம்பந்தமாக ஆங்கிலோ அமெரிக்காவுக்கும் ருஷ்யாவுக்கும் ஏற்பட்ட போட்டி முற்றி கொண்டு. இப்போது செக்கோஸ்லவேகியாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடிவரையில் ஒவ்வொரு சம்பவத்துக்கும் எந்தெந்த வல்லரசு எவ்வளவு தூரம் பொறுப்பாளி என்பது பற்றி நிச்சயமாக எதுவும் சொல்லுவதற்கில்லை.

இப்போது செக் நாட்டில் ஏற்பட்டுள்ள மந்திரி சபையில் பொது உடைமைக் கட்சியே அதிக ஆதிக்கம் பெற்றிருக்கிறதென்றும், அதாவது ருஷ்யாவின் முயற்சியினாலேயே பழைய மந்திரி சபை வீழ்ச்சியடைந்து புதிய மந்திரி சபை ஏற்பட்டிருக்கிறதென்

றும், எனவே 1939-ம் வருஷத்தில் அந்த நாட்டில் ஏற்பட்ட ஹிட்லரின் ஆதிக்கத்துக்கும் இப்போது ஏற்பட்டுள்ள ருஷ்யாவின் ஆதிக்கத்துக்கும் அதிக வேற்றுமை யில்லை யென்றும் பிரிட்டிஷாரும் அமெரிக்கர்களும் கூறுகின்றனர்.

ஆனால் 1939-ம் வருஷத்திலே செக் நாட்டை ஹிட்லரிடம் காட்டிக் கொடுத்தவர்களுக்கு இப்போது செக் நாட்டிற்காகப் பரிந்து பேச என்ன உரிமை இருக்கிறது என்று அந்த நாட்டின் புதிய பிரதம மந்திரி கேட்கிறார்.

இவ்வாறாக ஐரோப்பாவின் அரசியல் நிலைமை ஒரே குழப்பமாக இருந்து வருகிறது.

ருஷ்யாவின் ஒவ்வொரு ஆக்கிரமிப்பும் மூன்றாவது மகா யுத்தத்தை வெகு சமீபத்தில் உந்திக் கொண்டு வருகிறதென்று சர்ச்சில் போன்றவர்கள் ஓலமிட ஆரம்பித்திருக்கிறார்கள்.

* * *

இன்றைய உலகில் ஒரு வல்லரசின் கொள்கையும் சத்தியத்தையோ, சர்வதேச தர்மத்தையோ அடிப்படையாகக் கொண்டிருக்க வில்லை யென்பதும் சுய நலத்தையே முக்கியமாகக் கொண்டிருக்கிறதென்பதும் பகிரங்க ரகசியமாகும்.

எனவே, இந் நிலைமையில் எந்த வல்லரசின் கூற்று நியாயமானது என்று சொல்ல முடியும்?

இந்தோனேஷ்யாவில் டச்சுக்காரர்களின் பொம்மை ராஜ்யத்தைச் சகிக்கும் ஆங்கிலோ அமெரிக்க வல்லரசுகள், செக்கோஸ்லவேகியாவில் ருஷ்யாவின் பொம்மை ராஜ்யத்தைக் கண்டு துடிதுடிக்கின்றன; மூன்றாவது மகா யுத்தம் சமீபித்து விட்டதென்று அலறுகின்றன!

பாலஸ்தீனப் பிரிவினை தீர்ந்து போன விஷயம் என்று ஆர்ப்பாட்டம் செய்த பிரிட்டனும் அமெரிக்காவும், ஐரோப்பாவில் ருஷ்யாவின் ஆதிக்கம் பரவி வருவதைக் கண்டு திகிலடைந்து, தீர்ந்துபோன அந்தப் பிரச்னையை மீண்டும் எடுத்துக் கொண்டு ஆலோசிக்க ஆரம்பித்திருக்கின்றன!

முஸ்லிம் நாடுகளின் மனம் கோணாமல் நடக்கவேண்டும் என்பதே பாலஸ்தீன விஷயமாக அமெரிக்காவின் மனமாற்றத்துக்குக் காரணமாகும்.

இந்தியா - பாகிஸ்தான் தகராறையொட்டி பிரிட்டனும் அமெரிக்காவும் பாகிஸ்தானுக்குச் சாதகமாகவும் பாரபட்சமாகவும் நடந்து கொள்வதற்கும் காரணம் அதுதான்.

எனினும் மேலே குறிப்பிட்ட குழப்படியான நிலைமையில் ஒரு விஷயம் மாத்திரம் நிச்சயமாகத் தெரிகிறது.

அதாவது வல்லரசுகளுக்குள் ஆதிக்கப் போட்டி உச்ச நிலையை அடைந்து வருகிறது என்பதும், அந்தப் போட்டியின் விளைவாக மகத்தான யுத்தம்கூட ஏற்படலாம் என்பதும் தெளிவாகி வருகின்றன.

* * *

நெருக்கடியான இந்தக் கட்டத்தில் இந்தியாவின் நிலைமை என்ன? இந்தியா அனுஷ்டிக்க வேண்டிய கொள்கை என்ன? ஒரு வேளை யுத்தம் ஏற்பட்டால் இந்தியா எத்தகைய முறையைக் கையாள வேண்டும்?

இவை போன்ற கேள்விகள் ஒவ்வொரு இந்தியருடைய மனதிலும் எழுமென்பது நிச்சயம்.

மேற்படி கேள்விகளுக்குப் பதில் என்னவென்பதை. இந்தியா பார்லிமெண்டில் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால்நேரு விடுத்துள்ள அறிக்கையிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

வருங் காலத்தில் இந்தியா எந்த வல்லரசின் தயவுக்கும் உட்படாத பூரண சுதந்திர நாடாகவே இருந்து வரும் என்பதை ஜவாஹர்லால்ஜி தெளிவுபடுத்தி யிருக்கிறார்.

பிரிட்டிஷ் பத்திரிகைகளும் அமெரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் பிரசார காரியாலயமும் பாகிஸ்தானுக்குச் சாதகமாகவும் இந்தியாவுக்கு விரோதமாகவும் பித்தலாட்டப் பிரசாரம் செய்து வருவதையும் நமது தலைவர் எடுத்துக் கூறி யிருக்கிறார்.

உலக நாடுகளிடையே இந்தியாவுக்குள்ள செல்வாக்கைப் பற்றி ஜவாஹர்லால்ஜி குறிப்பிட்டுள்ள விஷயங்கள் மிகவும் முக்கியமானவை:

“இந்தியா மகத்தான ராணுவ பலம் பொருந்திய வல்லரசல்ல. இந்தியா கைத்தொழில்களிலும் முன்னேற்றமடைந்த நாடல்ல. அப்படியிருந்தும் உலக விவகாரங்களில் நமது நாடு முக்கிய ஸ்தானம் வகித்து வருவதைச் சகலரும் கவனிக்கவேண்டும்.

"அதனுல்தான் இந்தியாவின் செல்வாக்கை விரும்பாத நாடுகள் நம் தேசத்தில் நிகழும் அற்ப சம்பவங்களையும் பற்றி பிரமாதமாக வியாக்கியானம் செய்ய முற்படுகின்றன.

"எவ்வளவு பெரிய வல்லரசாயினும் அதன் ராணுவ பலத்தைக் கண்டு நாம் சிறிதும் அஞ்சவில்லை.

"மகத்தான ராணுவ பலம் பொருந்திய ஒரு வல்லரசு நமக்கு விரோதமாகக் கிளம்புமாயின், நமது நிலைமை என்னவாகும் என்பதை நான் அறியாமல் இல்லை.

"எனினும் முன்னர் மகா வல்லமை பொருந்திய உலக அரசுகளில் ஒன்றை எதிர்த்து நாம் தேசியப் போரை நடத்தவில்லையா?

"பெரும் வல்லரசு நம்மை எதிர்க்குமாயின், அதை எதிர்த்துப் போராட ராணுவ தளவாடங்களைத் தவிர இதர ஆயுதங்கள் நம்மிடம் இருக்கின்றன.

"அவற்றைக் கொண்டு போராடுவோமேயன்றி, வல்லரசுகளிடம் அடிபணிந்து ஆத்மாவை இழக்க ஒருபோதும் சம்மதியோம்.

"அற்ப ஆசைகொண்டு இந்த வல்லரசின் தயவையோ அல்லது அந்த வல்லரசின் தயவையோ நாடி வயிறு பிழைக்க உடன்படோம். உயர்ந்த தர்ம மார்க்கத்திலிருந்து வழுவோம்."

எவரும் குற்றமோ குறையோ காண முடியாதவாறு ஜவாஹர்லால்ஜி இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையை அவ்வாறு உலகமறிய விளக்கியிருக்கிறார்.

ஆதிக்க ஆசையை அடிப்படையாகக் கொண்ட வல்லரசுகளின் உருப்படாத வெளிநாட்டுக் கொள்கை, முப்பது வருஷங்களுக்குள் இரண்டு மகா யுத்தங்களை உண்டு பண்ணி, மூன்றாவது மகா யுத்தமும் குமுறும்படி செய்திருப்பதையும் நமது மாபெருந் தலைவர் சுட்டிக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அதிலிருந்து வல்லரசுகளின் வெளிநாட்டுக் கொள்கை உலக அமைதியை உருக்குலைத்து, மீண்டும் மீண்டும் உலகத்தை மகத்தான யுத்தப் பிரளயத்தில் ஆழ்த்துவதாக இருக்கிறது என்பது தெளிவாகவில்லையா?

ஐயர்வாள் ஞாபகார்த்தம்

பெரியவர்கள், மகான்கள், தேசத்துக்கும் மொழிக்கும் அரிய தொண்டு செய்தவர்களுக்கு ஞாபகச் சின்னங்கள் நிலை நாட்டுவது தொன்றுதொட்டு மனித குலத்தில் வந்திருக்கும் வழக்கம்.

ஆனால் சமீபகாலத்தில் சில அதிசயமான பேச்சுக்களை இந்த நாட்டில் சிலர் பேசி வருகிறார்கள். ஞாபகார்த்த முயற்சிகளைப் பற்றி வாய்க்கு வந்ததைப் பேசுகிறார்கள்.

"அந்தத் தலைவருக்கு ஞாபகார்த்தமா? அவருடைய போதனைகளைப் பின்பற்றுவது தான் சரியான ஞாபகார்த்தம். கல்லும் கட்டிடமும் எதற்கு?" என்கிறார்கள்.

"இந்தக் கவிஞருக்கு ஞாபகார்த்தமா? அவருடைய கவிகளை எல்லாரும் படித்தால் அதுவே பெரிய ஞாபகார்த்தம்!" என்று கூறுகிறார்கள்.

"அந்தப் பெரியவர் இருக்கும்போது ஒன்றும் செய்யவில்லை; இறந்த பிறகு ஞாபகார்த்தம் எதற்கு?" என்று கேள்வி போடுகிறார்கள்.

இப்படி யெல்லாம் பேசுவது அதிகப் பிரசங்கித்தனம் அல்லது அதிமேதாவித்தனம் அல்லது வீண் குதர்க்கம் என்ற மூன்று தலைப்புகளின் கீழே வரும் என்று நாம் கருதுகிறோம்.

ஒரு தலைவருக்குத் தக்க ஞாபகச் சின்னம் எழுப்பினால், அவருடைய போதனைகளைப் பரப்புவதற்கும் பின்பற்றுவதற்கும் அது உதவியாயிருக்குமே தவிரத் தடையாக இராது.

ஒரு கவிஞருக்கு ஞாபகச் சின்னம் கட்டினால், அது அவருடைய கவிதைகளை அதிகமாகப் படிக்கும்படி தூண்டுமே யல்லாமல் இடையூறு செய்யாது.

ஒரு பெரியவர் உயிரோடிருக்கும்போது அவருக்குச் சமூகம் தக்க மரியாதை செய்யவில்லை யென்றால் அதற்குப் பிராயச்சித்தமாகப் பின் வரும் சந்ததிகள் அதிகமான மரியாதையும் பக்தியும் செலுத்துவதுதான் நியாயமாகும்.

"இருக்கும்போது ஒன்றும் செய்யவில்லை; ஆகையால் இறந்த பிறகும் ஒன்றும் செய்ய வேண்டாம்" என்பது அர்த்தமற்ற மடமை அல்லது குதர்க்கம்.

இந்த மாதிரியான அதிகப் பிரசங்கித்தனத்துக்கோ அல்லது அதி மேதாவித்தனத்துக்கோ அல்லது வெறும் குதர்க்கத்துக்கோ தமிழ் மக்கள் செவி சாய்க்கவில்லை யென்பது மகிழ்ச்சி தரும் விஷயம்.

மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் செய்திருக்கும் தொண்டு நிறை போட்டு அளவு கட்ட முடியாதது. அவருடைய தொண்டுக்கு இணை அவருடைய தொண்டுதான். உவமை சொல்வதற்கு வேறு கிடையாது.

பத்துப் பாட்டு, புறநானூறு முதலிய சங்க நூல்களையும், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காவிய நூல்களையும், இன்னும் எண்ணற்ற தமிழ் நூல்களையும் கரையான் வாயிலிருந்து ஐயர் அவர்கள் தப்புவித்தார்கள். இராவெல்லாம் தூங்கா விளக்கு வைத்துத் தூங்காமல் கண் விழித்துப் பாட பேதம் பார்த்துப் பிழை திருத்தி மிகச் சிறந்த முறையில் அச்சிட்டுப் பதிப்பித்தார்கள்.

இந்த அரும்பெரும் தொண்டைக் காட்டிலும் ஐயர்வாள் செய்த மிகப் பெரும் தொண்டு என்னவென்றால், தற்காலத்துக்குரிய தமிழ் வசன நடை எப்படியிருக்க வேண்டும் என்பதை ஐயமறக் காட்டியது தான். சங்க நூல்களைப் பதிப்பித்த ஐயர்வாள் இறையனார் அகப்பொருள் உரையின் வசன நடையைப் பின்பற்றி எழுதவில்லை. சங்கப் புலவர்கள் கையாண்ட சொற்களை யெல்லாம் தமது தமிழ் வசன நடையில் அவர் புகுத்தவில்லை. தற்காலத் தமிழ் மக்களின் வாயில் நடமாடும் சொற்களைக் கையாண்டு எளிமையான வசன நடை எழுதினார்.

இவ்விதமாகத் தமிழும் தமிழகமும் ஐயர் அவர்களுக்கு எத்தனையோ விதத்தில் கடமைப்பட் டிருக்கின்றன.

• • •

நம்முடைய காலத்தில் தமிழுக்குச் சிறந்த தொண்டு செய்தவர்களுக்குள்ளே ஐயர்வாள் தலைசிறந்தவர். அது மட்டுமல்ல; தமிழுக்குத் தொண்டு செய்தவர்களுக்குள்ளே அவர் அதிர்ஷ்டசாலி.

'தமிழ்' என்றும் 'தமிழன் சிறப்பு' என்றும் வெறும் வாயை மென்றுகொண்டிருந்தவர்களுக்கு ஐயர் அவர்கள் ஒரு பிடி அவலைக் கொடுத்தார். அந்தப் பிடி அவல், குசேலருக்குக் கிடைத்த சம்பத்தைப்போல் ஐயர்வாளுக்கு எதிர்பாராத சிறப்புக்களை யெல்லாம் அளித்தது.

வெள்ளைக்கார அரசாங்கத்தார் அவருக்கு 'மகா மகோபாத்தியாயர்' என்னும் பட்டத்தை அளித்தார்கள்.

டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியார் அவர்கள் அப்பட்டமாக ஒப்புக்கொண்டது போல், பிற்போக்குக்குப் பெயர் போன மதராஸ் யுனிவர்ஸிடி கூட, தைரியத்தை இரு கையிலும் பிடித்துக்கொண்டு, அய்யர்வாளுக்கு 'டாக்டர்' என்னும் இலக்கியப் பட்டத்தை அளித்தது.

இன்னும் கற்றோர் பலரும், இதர பட்டம் பதவியாளரும் அய்யர்வாளுடைய இருப்பிடமான தியாகராஜ விலாசத்தைத் தேடிவந்து அவரைப் பேட்டி கண்டார்கள். "அய்யர்வாளைப் பார்த்துப் பேசினோம்" என்ற பெருமை உணர்ச்சியுடன் திரும்பிச் சென்றார்கள். ஒரு சிலர் அய்யர்வாள் அரும்பாடுபட்டுத் தேடி வைத்திருந்த ஓலைச் சுவடிகளை அபகரித்துக் கொண்டு போகும் எண்ணத்துடன் வந்து ஏமாந்து திரும்பினார்கள். ஓலைச் சுவடி என்றால் அய்யர்வாளுக்கு உயிர்; அதிலும் கரையான் வாய் வைத்த சுவடியாயிருந்தால் அதற்காகப் பிராணனையே கொடுத்து விடுவார். அப்படிப்பட்டவர் ஓலைச் சுவடியை இலேசில் பறிகொடுத்து விடுவாரா?

* * *

அய்யர்வாள் அதிர்ஷ்டசாலி என்று சொன்னோம். அவர் உயிர் வாழ்ந்திருந்த போதும் அவரைப் பல சிறப்புக்கள் தேடி வந்தன; காலமான பிற்பாடும் சிறப்புக்கள் அவரைத் தேடி வருகின்றன.

சென்ற வாரத்தில் சென்னைக் கடற்கரைச் சாலை ஓரத்தில் அய்யர்வாளின் உருவச்சிலை நமது மாகாணப் பிரதம மந்திரியால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த உருவச்சிலைத் திறப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. கற்றோரும் மற்றோரும் சபையில் திரளாகக் கூடியிருந்தார்கள். சென்னைச் சர்வ கலாசாலை 'வைஸ் சான்ஸலர்' தலைமை வகித்தார். கற்பீடத்தின்மீது கம்பீரமாக நின்ற சிலையைக் கல்வி மந்திரி தம் கையில் வாங்கிக் கொண்டதாகப் பாவனை செய்தார்.

அய்யர்வாள் அவர்களின் உருவச்சிலைத் திறப்பு விழாவில் நிகழ்ந்த சொற்பொழிவுகள் சில ஒருவிதமாயிருந்தன.

ஸ்ரீமதி ருக்மிணி தேவி அவர்கள் தமிழை இங்கிலீஷில் பேசித் தீர்த்தார்.

டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார் இங்கிலீஷை இங்கிலீஷிலேயே பேசினார். (சென்னைச் சர்வ கலாசாலையின் பிற்போக்குக்கு இதைக்காட்டிலும் வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?) ஆயினும் அந்தப் புண்ணிய தினத்தில் அவர் "இன்னும் இரண்டு வருஷத்திற்குள்ளே தமிழ் கற்றுக்கொண்டு விடுவேன்" என்று வாக்களித்தது பெரிய விசேஷமாகும்.

இன்னும் தமிழைத் தமிழில் பேசியவர்களில் ஒருவர், "ஆதாரமான" என்று சொல்லுவதற்கு 'ஆதாரதாரமான' என்று மிகக் குளறிக் கஷ்டப்பட்டார். இன்னொருவர் "குண்டலகேசி" என்பதற்குக் "குண்டாலகேசி" "குண்டலகேசரி" என்றெல்லாம் சொல்லித் திண்டாடினார். வேறு ஒருவர் ஆரம்பித்த வாக்கியத்தை எப்படி முடிப்பது என்று தெரியாமல் திணறி மூச்சு முட்டிப் போனார்.

மொத்தத்தில் எல்லாரும் தமிழில் அபார அன்பு காட்டினார்கள் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

* * *

சென்னைக் கடற்கரையிலும் மவுண்ட் ரோட்டிலும் மற்றும் பல இடங்களிலும் எவ்வளவோ உருவச்சிலைகள் நாட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த உருவச் சிலையாளர் எல்லாரிலும் உண்மையாக உருவச்சிலை நாட்டுவதற்குரிய பெருமை வாய்ந்தவர் டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் என்று சொல்லவேண்டும்.

அய்யர் அவர்களுக்கு உருவச் சிலை நாட்டும் திருப்பணியில் பெரு முயற்சி செய்த இருவரை இங்கே குறிப்பிட்டு நன்றி செலுத்த விரும்புகிறோம். ஒருவர் பிரஸிடென்ஸி கலாசாலையில் அய்யர் அவர்களின் பீடத்தை இன்று ஏற்றிருக்கும் ஸ்ரீ விசுவநாதய்யர் எம். ஏ. அவர்கள். இன்னொருவர் நமது மாஜி ஷெரிப் ஸ்ரீ எஸ். ராமசாமி நாயுடு காரு. தமிழ் முதுகுரவரின் சிலை நாட்டும் பணியில் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவர் தீவிரமாக ஈடுபட்டு நிறைவேற்றியது குறிப்பாகப் பாராட்டப்பட வேண்டியதாகும். இதிலிருந்து வெளியாகும் நீதி தமிழன்புக்கு யாரும் வரம்பு கட்ட முடியாது என்பதே.


கடற்கரையில் கம்பீரமாக நிற்கும் அய்யர்வாளின் உருவச் சிலை அவருக்கு ஞாபகச் சின்னமாக விளங்குவதோடு, தமிழ்ப் பணியைத் தமிழர்கள் மறக்கமாட்டார்கள் என்பதற்கும் ஞாபகச் சின்னமாயிருக்கும் என்று நம்புகிறோம்.


அடைந்தோம் சுதந்திரம்
இனி
என்ன?
தேச
முன்னேற்றமே!
நாஷனல்
ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை
வாங்குங்கள்.
இவைகளை தபாலாபீஸுகளில் பெறலாம்.
P.N.S.O. MADRAS
N.C.7.

பில்கோ

எக்காலத்திலும் சிறந்த ரெப்ரிஜிரேடர்

ஒப்பிட்டுப் பார்த்து உண்மையை அறியுங்கள்



சுதேச சமஸ்தானங்கள் உள்பட சென்னை மாகாணத்திற்கு விநியோகஸ்தர்கள் :

மஹமத் இப்ருஹிம் அண்ட் கோ.,

"விஜய மாளிகை" 7-8, மவுண்ட் ரோடு, மதராஸ்-2

"பிரதம மந்திரி பண்டித நேருவின் தேசிய உதவி நிதிக்கு
உங்களது பங்கை அனுப்பி விட்டீர்களா?"



ரா. கி.

13. அதிர்ஷ்டப் பிரயாணம்

இங்கிலாந்துக்குப் பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்கப் போனபோது மோகன் தாஸ் ஒரு பக்கம் உற்சாகம் கொண்டிருந்தாலும் மற்றொரு பக்கம் அன்னையைப் பிரிந்து செல்லும்படி நேர்ந்தது பற்றி வருத்தப்பட்டார். தென்னாப்பிரிக்காவுக்குப் புறப்பட்டபோதோ கஸ்தூரிபாயைப் பிரிய நேர்ந்தது பற்றி வருந்தினார். இங்கிலாந்திலிருந்து மோகன் தாஸ் திரும்பி வந்த பிறகு அந்தத் தம்பதிகளுக்கு இரண்டாவது குழந்தை பிறந்திருந்தது. கஸ்தூரிபாய்க்குக் கல்வி கற்பிக்கவும் மற்றும் வாழ்வு முறையில் சில சீர்திருத்தங்களைக் கற்பிக்கவும் மோகன் தாஸ் முயன்று வந்தார். ஆகவே, இம்முறை அவர்களுடைய பிரிவு இருவருக்கும் அதிக வருத்தம் அளித்தது. எனினும் மோகன் தாஸ் மனதைத் திடப்படுத்திக் கொண்டு, "இன்னும் ஒரு வருஷத்துக்குள் எப்படியும் சந்திப்போம்" என்று கஸ்தூரிபாய்க்குத் தைரியம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

பம்பாய்க்கு வந்ததும் பிரயாணத்துக்கு ஒரு இடையூறு ஏற்பட்டது. குறிப்பிட்ட கப்பலில் முதல் வகுப்பு டிக்கட் கிடைக்கவில்லை யென்று தாதா அப்துல்லா கம்பெனியின் பம்பாய்க் காரியஸ்தர் கூறினார். 'டெக்'கில் அதாவது கப்பலின் மேல் தளத்தில் பிரயாணத்துக்கு ஏற்பாடு செய்யலாம் என்றும் தெரிவித்தார். பாரிஸ்டராகிய தாம் முதல் வகுப்புக்குக் கீழ் பிரயாணம் செய்வது கௌரவக் குறைவு என்று மோகன் தாஸ் எண்ணினார். (பிற்காலத்தில் மூன்றாம் வகுப்பிலேயே பிரயாணம் செய்வேன் என்று பிடிவாதம் செய்த காந்திஜிதான் அப்போது அவ்விதம் கருதினார்.) காரியஸ்தர் கூறியதில் அவருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. "நானே போய் விசாரித்துப் பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனார். கப்பல் தலைவரைச் சந்தித்து, "எப்படியாவது நெருக்கிப் பிடித்து எனக்கு ஓர் இடம் கண்டு பிடித்துக் கொடுக்கக்கூடாதா?" என்று கேட்டார். கப்பலின் தலைவர் மோகன் தாஸைத் தலை முதல் கால் வரையில் ஒரு தடவை உற்றுப் பார்த்தார். மோகன் தாஸின் தோற்றம் எதனாலேயோ அவருடைய மனதைக் கவர்ந்தது. "என்னுடைய சொந்த அறையில் இன்னொருவரும் பிரயாணம் செய்ய இடம் இருக்கிறது. அந்த இடத்தை மற்றவர்களுக்குச் சாதாரணமாய்க் கொடுப்பதில்லை. வேண்டுமானால் உமக்குத் தருகிறேன்" என்று கப்பல் தலைவர் கூறினார்.

மோகன் தாஸ் மிக்க மகிழ்ச்சியுடன் அதை ஏற்றுக்கொண்டு நன்றி கூறினார். காரியஸ்தரிடம் சொல்லி முதல் வகுப்பு டிக்கட் வாங்கச் செய்தார். தென்னாப்பிரிக்காவில் தமக்கு அதிர்ஷ்டம் காத்திருக்கிறது என்ற நம்பிக்கையுடன் 1893-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் பாரிஸ்டர் மோகன் தாஸ் காந்தி உற்சாகமாகக் கப்பல் ஏறிப் பிரயாணமானார்.

பாரிஸ்டர் மோகன் தாஸுக்கு மட்டும் தானா தென்னாப்பிரிக்காவில் அதிர்ஷ்டம் காத்திருந்தது? இந்தியாவுக்கும் உலகத்துக்குமே அதிர்ஷ்டம் காத்திருந்தது. அநீதியையும் கொடுமையையும் எதிர்த்துப் போராடுவதற்குச் சத்தியாக்கிரஹம் என்னும் அஹிம்சா தர்ம ஆயுதத்தைத் தென்னாப்பிரிக்காவிலே யல்லவா காந்திஜி கண்டு பிடித்துத் தயாரித்தார்!

• • •

பாரிஸ்டர் மோகன் தாஸ் காந்தியின் முகவெட்டு அந்தக் கப்பல் தலைவரின் மனதைக் கவர்ந்துவிட்டது என்று சொன்னேனல்லவா? எந்தவிதமான நன்மையிலும் ஏதேனும் ஒரு கெடுதலும்கூட இருந்தே தீரும் போலிருக்கிறது. கப்பல் தலைவரின் சிநேகிதம் மோகன் தாஸுக்கு உதவியாகவும் இருந்தது; ஒரு பெரும் அபாயத்துக்கும் அவரை உள்ளாக்கியது.

பிரயாணத்தின்போது பொழுது போக்காக மோகன் தாஸுக்குக் கப்பல் தலைவர் சதுரங்கம் ஆடக் கற்றுக்கொடுத்தார். மோகன் தாஸும் பிரியத்துடன் கற்றுக் கொண்டார். ஆனால் இலேசில் ஆட்டம் பிடிபடவில்லை. எனினும் மோகன் தாஸுக்கு ஆட்டம் சொல்லிக் கொடுப்பதில் கப்பல் தலைவரின் ஊக்கம் தளரவில்லை.

வழியில் கப்பல் நின்ற முதல் துறைமுகப் பட்டினம் லாமு. பதின்மூன்று நாள் தொடர்ந்து கடற் பிரயாணம் செய்த பிறகு கரையில் இறங்குவதற்கு ஆசை உண்டாவது இயல்புதானே? கப்பலில் பிரயாணம் செய்தவர்களில் பலர் துறைமுகத்தில் இறங்கிப் பட்டணம் பார்த்துவரச் சென்றார்கள். காந்திஜியும் போக விரும்பினார். லாமு துறைமுகம் அபாயகரமான கொந்தளிப்பு உள்ளது என்றும், கப்பல் நாலு மணி நேரத்தில் புறப்பட்டு விடுமென்றும், அதற்குள் திரும்பி வந்துவிடும்படியும் கப்பல் தலைவர் எச்சரிக்கை செய்தார்.

மோகன் தாஸ் லாமு நகரைச் சுற்றிப் பார்த்தார். தபால் ஆபீஸில் வேலை செய்த இந்திய குமாஸ்தாக்களுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார். ஆப்பிரிக்க சுதேசிகள் சிலரையும் சந்தித்து அவர்களுடைய வாழ்க்கை முறையைப் பற்றிக் கேட்டுத் தெரிந்துகொண்டார். இதற்குள் நேரமாகிவிட்டபடியால் துறைமுகத்துக்கு அவசரமாகத் திரும்பினார்.

அதே கப்பலின் மேல் தளத்தில் பிரயாணம் செய்த இன்னும் சில இந்தியப் பிரயாணிகள் ஒரு வேளையாவது அமைதியாகச் சமைத்துச் சாப்பிடலாம் என்று லாமு துறைமுகத்தில் இறங்கியிருந்தார்கள். அவர்கள் தங்களுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொண்டு கப்பலுக்குப் போவதற்காகப் படகில் ஏறினார்கள். அந்தப் படகிலேயே மோகன் தாஸும் ஏறினார். கப்பல் தலைவர் எச்சரித்தது போலவே கடல் அப்போது கொந்தளிக்கத் தொடங்கியிருந்தது. படகிலோ கூட்டம் அதிகம். ஆகையால் கப்பலில் ஏறுவதற்கான ஏணிக்கு அருகில் படகை நிறுத்த முடியவில்லை. ஏணியின் அருகில் படகு போகும்; ஆனால் யாரும் ஏணியில் ஏறுவதற்குமுன் அங்கிருந்து நகர்ந்துவிடும். கப்பல் புறப்படுவதற்கான முதல் சங்கு ஊதியாகிவிட்டது. மோகன் தாஸ் பெரிதும் கவலையடைந்தார். இதையெல்லாம் கப்பலின் மேல் தளத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த கப்பல் தலைவர் குறிப்பிட்ட கால அளவுக்குமேல் ஐந்து நிமிஷம் கப்பலை நிறுத்தி வைத்தார். கப்பலுக்கு அருகில் மிதந்த இன்னொரு படகில் மோகன் தாஸ் பத்து ரூபாய் கொடுத்து ஏறிக்கொண்டார். அந்தப் படகில் கூட்டம் இல்லாதபடியால் சற்று இலகுவாக ஏணியின் அருகில் அதைச் செலுத்த முடிந்தது. ஆனால் படகு ஏணியருகில் வந்தபோது, ஏணி தூக்கப்பட்டு விட்டது. கப்பல் தலைவர் மோகன்தாஸின் நிலைமையைப் பார்த்து இரக்கம் கொண்டார். மேலேயிருந்து ஒரு கயிற்றைத் தொங்க விடச் செய்தார். அதைப் பிடித்துக் கொண்டு மோகன் தாஸ் ஏறிக் கப்பலின் தளத்தில் அடிவைத்தாரோ, இல்லையோ, கப்பலும் புறப்பட்டு விட்டது. மற்றப் பிரயாணிகள் பின் தங்கும்படி நேர்ந்தது.

இவ்விதமாக, கப்பல் தலைவரின் நட்பு லாமுவில் மோகன் தாஸுக்கு மிகவும் உதவியாக இருந்தது. வழியிலிருந்த ஸான்ஸிபார் என்னும் மற்றொரு துறைமுகத்தில் அந்த நட்பினால் பெரும் அபாயம் நேர்ந்தது. கப்பல் தலைவர் மோகன் தாஸையும் மற்றொரு ஆங்கில நண்பரையும் "குஷாலாகக் கரைக்குப் போய்வரலாம்" என்று சொல்லி அழைத்துச் சென்றார். 'குஷால்' என்றால் என்ன என்பது முதலில் மோகன் தாஸுக்குத் தெரியவில்லை. கரையிலே இறங்கிப் பட்டணத்துக்குள் போனபிறகு, 'குஷால்' என்றால் 'விபசார விடுதி' என்று தெரிந்தது. அத்தகைய விடுதி ஒன்றுக்கு ஒரு மனிதன் அவர்களை அழைத்துச் சென்றான். ஒவ்வொருவரையும் ஒரு தனி அறைக்

குள் போகச் செய்தான். மோகன்தாஸ் புகுந்த அறையில் ஒரு நீக்ரோ ஸ்திரீ இருந்தாள். அப்போதுதான் தாம் வந்திருந்த இடம் இப்படிப் பட்டதென்பது மோகன்தாஸுக்குத் தெரிந்தது. வெட்கமும் அருவருப்பும் அவரைப் பிடுங்கித்தின்றன. சிறிது நேரம் ஊமையைப்போல் மௌனமாக நின்றார்; பிறகு வெளியே வந்தார்.

கப்பல் தலைவர் வெளிவந்ததும் மோகன்தாஸின் மனோ நிலையைத் தெரிந்து கொண்டு அவரைப் பரிகசித்தார். ஆனால் மோகன்தாஸோ அந்தப் பரிகாசத்தைப் பொருட் படுத்தவில்லை. இந்த மட்டும் பாவக் குழியில் விழாமல் தப்பினோமே என்று கடவுளுக்கு நன்றி செலுத்தினார். கருணைக் கடலான பகவானுடைய அருளே அச்சமயம் தம்மைத் தடுத்து ஆட்கொண்டது என்ற எண்ணத்தினால் இறைவனிடம் அவருடைய நம்பிக்கை வலுபெற்றது.

ஸான்ஸிபாருக்குப் பிறகு மொஸாம்பிக் துறைமுகத்தில் கப்பல் சில நாள் நின்று விட்டு அடுத்தபடியாக டர்பன் துறைமுகத்தை அடைந்தது.

* * *

தென்னாப்பிரிக்காவில் நேட்டால், டிரான்ஸ்வால், ஆரஞ்சு பிரீஸ்டேட் என்னும் மாகாணங்கள் உண்டு. நேட்டால் மாகாணத்தின் துறைமுகப் பட்டினம் டர்பன். இந்தியாவிலிருந்து தென்னாப்பிரிக்கா செல்லும் பிரயாணிகள் சாதாரணமாய் டர்பன் துறைமுகத்திலே தான் இறங்குவது வழக்கம்.

மோகன்தாஸை வரவேற்பதற்காகத் தாதா அப்துல்லா சேத் துறைமுகத்துக்கு வந்திருந்தார். அப்துல்லா சேத்துக்கு அறிமுகமான வெள்ளைக்காரர் பலர் துறைமுகத்தில் இருந்ததையும், அவர்கள் அப்துல்லா சேத்தை அவ்வளவு மரியாதையாக நடத்தவில்லையென்பதையும் மோகன்தாஸ் கவனிக்கும்படி நேர்ந்தது. இது அவருக்கு வியப்பையும் வருத்தத்தையும் அளித்தது. அதோடு மேற்படி வெள்ளைக்காரர்கள் மோகன்தாஸை ஏதோ ஒரு விநோதப் பிராணியைப் பார்ப்பதுபோல் உற்றுப் பார்ப்பதையும் கவனிக்க நேர்ந்தது.

மோகன்தாஸ் இங்கிலாந்திலிருந்த போது அங்கிருந்த ஆங்கிலேயர் இப்படியெல்லாம் நடந்து கொள்ளவில்லை. இந்தியாவில் ஆங்கில உத்தியோகஸ்தர் அகம்பாவத்துடனும் முரட்டுத்தனமாகவும் நடந்து கொண்ட அநுபவம் அவருடைய மனதில் ஆழ்ந்து பதிந்திருந்தது. டர்பன் துறை முகத்தில் இறங்கினவுடனேயே இங்கே வெள்ளைக்காரரின் அகம்பாவம் அபரிமிதம் என்பதை மோகன்தாஸ் அறிந்து கொள்ளலாயிற்று. இரண்டு நாளைக்குப் பிறகு டர்பன் நகரின் கோர்ட்டுக்குச் சென்றபோது அதை இன்னும் நன்றாய் அவர் தெரிந்து கொள்ள நேர்ந்தது

துறைமுகத்திலிருந்து மோகன்தாஸை அப்துல்லா சேத் தமது வியாபாரக் கம்பெனியின் கட்டிடத்துக்கு அழைத்துச் சென்றார். அவர் முக்கியமாக எதற்காக வந்தாரோ அந்த வழக்கு டிரான்ஸ்வால் மாகாணத்தில் பிரிட்டோரியா நகரில் நடந்து வருகிறதென்று மோகன்தாஸ் தெரிந்து கொண்டார்.

தாதா அப்துல்லா சேத்துக்கு மோகன்தாஸைப் பற்றி அவ்வளவு நல்ல அபிப்பிராயம் ஏற்படவில்லை. "இவரைப் பிடித்து எதற்காக அனுப்பினார்கள்? இவரால் என்ன உபயோகம்? வீண் பணச் செலவுதான்!" என்று அவர் நினைப்பது போலக் காணப்பட்டது.

அப்துல்லா சேத் அவ்வளவாகப் படித்த மனிதர் அல்ல. ஆனால் அறிவுக் கூர்மையும் உலக அநுபவமும் பெற்றவர். தென்னாப்பிரிக்காவில் வியாபாரம் நடத்திய பெரிய இந்தியக் கம்பெனிகளுக்குள் அப்துல்லா கம்பெனிதான் மிகப் பெரியது. சொற்ப ஆங்கில பாஷா ஞானம் அவருக்கு இருந்தது. அதைக் கொண்டு ஐரோப்பியக் கம்பெனிகளுடன் அவர் வர்த்தகமும் விவகாரமும் நடத்தி வந்தார். வக்கீல்களுக்கு வேண்டிய சட்ட 'பாயிண்டு'களை யெல்லாம் அவர் எடுத்துச் சொல்லி விடுவார். தென்னாப்பிரிக்காவில் இருந்த இந்தியர்கள் அனைவரும் அப்துல்லா சேத்திடம் பெரு மதிப்பு வைத்திருந்தார்கள்.

இவ்வளவு உயர்ந்த மனிதராயிருந்தாலும் அவரிடத்தில் ஒரு குறை இருந்தது. பெரிய சந்தேகப் பிராணி! இலேசில் யாரையும் அவர் நம்பிவிட மாட்டார்.

கேள், தம்பி! பாரிஸ்டர் எம். கே. காந்தியைத் தனியாகப் பிரிட்டோரியாவுக்கு அனுப்ப அவர் தயங்கினார். ஏன் தெரியுமா? பிரிட்டோரியாவிலேதான் அவர் தொடுத்திருந்த வழக்கின் பிரதிவாதிகள் இருந்தார்கள். இந்த இளம்பிள்ளை பாரிஸ்டரை மேற்படி பிரதிவாதிகள் தங்கள் வசப்படுத்திக் கொண்டு விட்டால் என்ன

செய்கிறது என்று சந்தேகப்பட்டார். அதாவது தம்முடைய கம்பெனியில் பாரிஸ்டர் காந்தி சம்பளம் வாங்கிக்கொண்டு எதிர்க் கட்சிக்காரர்களுடன் சேர்ந்து தமக்குத் துரோகம் செய்துவிடக் கூடும் என்று நினைத்தார்! எப்படி யிருக்கிறது கதை? பின்னால், அந்த இளம் பாரிஸ்டரைப் பற்றி தாதா அப்துல்லா மிக நன்றாய்த் தெரிந்து கொண்டார். தாம் அவரைப் பற்றி அவ் விதம் சந்தேகித்தது எவ்வளவு பெரிய தவறு என்பதையும் உணர்ந்தார்.

தாதா அப்துல்லா இஸ்லாமிய மதத்தினர் அல்லவா? அதே மதத்தைச் சேர்ந்தவர்களான இந்திய முஸ்லிம்கள் சென்ற சில வருஷங்களாக நம் அருமைத் தலைவர் மகாத்மா காந்தியைப் பற்றிச் சந்தேகப் பட்டார்கள். மகாத்மா பட்சபாதம் செய்யக் கூடியவர் என்றும், ஹிந்துக்களுக்கு அநுகூலம் செய்து முஸ்லிம்களுக்குப் பிரதிகூலம் செய்து விடுவார் என்றும் எண்ணினார்கள். முஸ்லிம் அரசியல் தலைவர்கள் இடைவிடாமல் செய்த துவேஷப் பிரசாரம் காரணமாக முஸ்லிம் மக்களில் பலர் அவ் வாறு சத்தியசந்தரான மகாத்மா காந்தியைச் சந்தேகிக்க நேர்ந்தது.

முஸ்லிம் சமூகத்தின் சந்தேகம் இப்போது தீர்ந்து போய்விட்டது, தம்பி! மகாத்மா காந்தி தமது உயிரைப் பலியாகக் கொடுத்து அவர்களுடைய சந்தேகத்தைத் தீர்த்து வைத்து விட்டார்!

14. தலைப்பாகைத் தகராறு

பாரிஸ்டர் மோகன் தாஸ் காந்தி டர்பனுக்கு வந்த மூன்றாம் நாள் அவரைத் தாதா அப்துல்லா டர்பன் கோர்ட்டுக்கு அழைத்துச் சென்றார். அங்கே பலருக்கும் புது பாரிஸ்டரை அறிமுகம்செய்து வைத்ததுடன் தம்முடைய வக்கீலுக்குப் பக்கத்தில் அவரை உட்கார வைத்தார்.

அதுவரையில் பாரிஸ்டர் காந்திக்கு உற்சாகமாகவே இருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் தம்மை மாஜிஸ்ட்ரேட் உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பது அவருடைய கவனத்துக்கு வந்தது. “இது என்ன? ஏன் இப்படி நம்மைப் பார்க்கிறார்? துறைமுகத்தில் இருந்த வெள்ளைக்காரர்கள் ஏதோ விசித்திரப் பிராணி என்று எண்ணி, நம்மைப் பார்த்தார்களே, அதுபோல் அல்லவா இந்த மாஜிஸ்ட்ரேட்டும் பார்க்கிறார்?” என்று காந்திஜி எண்ணமிட்டுக் கொண்டிருக்கும்போதே மாஜிஸ்ட்ரேட் அவரை நோக்கி ஓர் உத்தரவு போட்டார். “உம்முடைய தலையில் வைத்திருக்கும் தலைப்பாகையை எடுத்துவிடும்!” என்பது தான் அந்த உத்தரவு.

தம்பி! பாரிஸ்டர் காந்தி தென்னாப்பிரிக்கா சென்றபோது நீளமான சொக்காயும் தலைப்பாகையும் தரித்துக் கொண்டிருந்தார். இங்கிலாந்தில் வசித்த காலத்தில் சில மாதம் அவர் நாகரிக உடை தரித்துப் பார்த்துப் பின்னால் அதைக் கைவிட்டு விட்டார் என்பது நினைவிருக்கிறதல்லவா? எனவே, தென்னாப்பிரிக்கா சென்றபோது அவர் தொப்பி வைத்துக் கொள்ளவில்லை. ‘காந்தி குல்லா’ என்று சொல்கிறோமே, அந்த மாதிரி குல்லாவும் வைத்துக் கொள்ளவில்லை. கௌரவமான இந்தியர்கள் அந்தக் காலத்தில் தலைப்பாகை அணிந்து கொள்வதே வழக்கமா யிருந்தபடியால் அதன்படி காந்திஜியும் தலைப்பாகை வைத்துக் கொண்டிருந்தார்.

ஆகவே மாஜிஸ்ட்ரேட் பகிரங்கக் கோர்ட்டில் அத்தனை பேருக்கு முன்னால் “தலைப்பாகையை எடும்!” என்று உத்தரவு போட்டதும் காந்திஜிக்கு ஒரே திகைப்பாய்ப் போய்விட்டது. அந்த உத்தரவின் காரணம் அவருக்கு நன்றாய் விளங்கவில்லை. ஆனால் அது தம்மை அகௌரவப் படுத்துவது என்று மட்டும் தெரிந்து கொண்டார். ஆகையால் உத்தரவை நிறைவேற்ற அவர் விரும்பவில்லை. விவரங்களை நன்றாய்த் தெரிந்து கொள்வதற்கு முன்னால் “எடுக்க மாட்டேன்” என்று சொல்லிக் கோர்ட்டில் ‘கலாட்டா’ செய்யவும் அவர் விரும்பவில்லை. சட்டென்று எழுந்து கோர்ட்டுக்கு வெளியே வந்துவிட்டார்.

பிற்பாடு சேத் அப்துல்லாவும் வெளியே வந்ததும் அவரிடம் விவரம் கேட்டார். முக்கியமாக, தாதா அப்துல்லா சேத் தலைப்பாகை அணிந்திருந்தும் அதை எடுக்கும்படி மாஜிஸ்ட்ரேட் சொல்லாமல் தமக்கு மட்டும் உத்தரவு போட்டது காந்திஜிக்கு வியப்பா யிருந்தது. இதன் காரணத்தைத் தாதா அப்துல்லா விளக்கிச் சொன்னார்.



தென்னுப்பிரிக்காவில் இருந்த இந்தியர்கள் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். முதற் பகுதியார் முஸ்லிம் வியாபாரிகள்; இரண்டாவது பகுதியார் ஹிந்து குமாஸ்தாக்கள்; மூன்றாவது பிரிவினர் பார்ஸிகள். முஸ்லிம் வர்த்தகர்கள் தங்களை 'அராபியர்' என்றும், பார்ஸிகள் தங்களைப் 'பாரஸிகர்' என்றும் சொல்லிக் கொண்டார்கள். ஆகையால் அவர்கள் தலைப்பாகை வைத்துக் கொள்ள அனுமதிக்கப் பட்டனர். ஆனால் ஹிந்து குமாஸ்தாக்களோ தங்களை "இந்தியர்கள்" என்றுதான் சொல்லிக் கொள்ள வேண்டியிருந்தது. வேறு நாட்டின் பெயரை அவர்கள் சொல்லிக் கொள்வதற்கில்லையல்லவா?

அரேபியாவும், பாரஸீகமும் சுதந்திர தேசங்கள். ஆகையால் அராபியர் என்றும் பாரஸிகர் என்றும் சொல்லிக்கொண்டவர்களுக்குத் தென்னுப்பிரிக்கா வெள்ளைக்காரர்கள் கொஞ்சம் மரியாதை அளித்தார்கள். அவர்கள் இஷ்டம்போல் உடை தரிக்கும் உரிமையும் அளித்தார்கள். ஆனால் இந்தியா அடிமை இந்தியாதானே? அடிமை இந்தியர்களுக்குத் தலையிலே தலைப்பாகை என்ன வேண்டிக் கிடக்குது? — இவ்விதம் தென்னுப்பிரிக்கா வெள்ளைக்காரர்கள் கருதினார்கள்.

இந்தியர்களில் மேற்சொன்ன மூன்று பகுதியாரைத் தவிர நாலாவது ஒரு பகுதியினரும் இருந்தனர். இவர்கள் இந்தியாவிலிருந்து வந்திருந்த ஒப்பந்தக் கூலிகளும் மாஜி ஒப்பந்தக்கூலிகளும்தான். இவர்களே தொகையில் அதிகமானவர்கள். பெரும்பாலும் தமிழ் நாட்டிலிருந்தும் ஆந்திர தேசத்திலிருந்தும் ஓரளவு வடநாட்டிலிருந்தும் இவர்கள் வந்திருந்தார்கள். ஐந்து வருஷம் தோட்ட வேலையோ வேறு வேலையோ செய்வதாக ஒப்பந்தம் செய்து கொண்டு வந்தவர்களாகையால் 'ஒப்பந்தக் கூலிகள்' என்று இவர்கள் சொல்லப் பட்டனர். இது காரணமாகத் தென்னுப்பிரிக்காவின் வெள்ளைக்காரர்கள் இந்தியர்கள் அனைவரையுமே பொதுவாகக் 'கூலி'கள் என்று அழைத்தார்கள்.

இந்தியர்களுக்குக் 'கூலி' என்ற பெயரோடு, 'ஸாமி' என்ற பெயரும் தென்னுப்பிரிக்காவில் வழங்கிற்று. 'ஸாமி' எப்படி வந்தது தெரியுமா? பெரும்பாலான ஒப்பந்தத் தொழிலாளர் தென்னிந்தியாவிலிருந்து போனவர்கள் அல்லவா? தென்னிந்தியர்களின் பெயர்கள் பெரும்பாலும் ராமஸாமி, கிருஷ்ணஸாமி, கோவிந்தஸாமி, நாராயணஸாமி, சிவஸாமி என்று ஒரே ஸாமி மயமாக இருக்கும். என்பது உனக்குத் தெரியுமே? எனவே, தென்னுப்பிரிக்கா வெள்ளைக்காரர்கள் இந்தியர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது 'கூலி' என்று சொல்லாவிடில், 'ஸாமி' என்பார்கள். அவர்களுடைய மனதில், 'ஸாமி' என்பது 'கூலி'க்கு மாற்றுப் பெயர்! இந்தியர்களில் கொஞ்சம் வாசாலகர்களாயிருப்பவர்கள் வெள்ளைக்காரர் தங்களைச் 'ஸாமி' என்று அழைக்கும் போது, "ஸாமி என்றால் எஜமானன் என்று அர்த்தம்; நான் உனக்கு எஜமானனு?" என்று கேட்பார்களாம். ஆனால் அவ்விதம் கேட்பவர்கள் வெள்ளைக்காரர்களிடம் அடிபடவும் தயாராயிருக்க வேண்டுமாம்! ஆம், தம்பி! அந்தக் காலத்தில் தென்னுப்பிரிக்கா வெள்ளைக்காரர்கள் இந்தியர்களை அடிப்பது சர்வ சாதாரணம். இதைப் பற்றி மேலே அதிகமாக நீ தெரிந்து கொள்ள நேரிடும்.

இப்போது தலைப்பாகை விஷயத்துக்குத் திரும்பிவருவோம். தாதா அப்துல்லாவிடம் தம்முடைய தலைப்பாகையைப் பற்றி மாஜிஸ்ட்ரேட்டுக்கு என்ன ஆட்சேபம் என்று காந்திஜி கேட்டு மேற்கூறிய விவரத்தைத் தெரிந்துகொண்டார்.

உடனே, அன்று கோர்ட்டில் நடந்த சம்பவத்தைப் பற்றிப் பத்திரிகைகளுக்கு ஒரு கடிதம் எழுதினார். தாம் தலைப்பாகை அணிந்திருந்தது நியாயம் என்றும், மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவு தவறானது என்றும்

* *

வயது விஷயம்

கவி ரவீந்திரநாத் டாகூருக்கு எழுபதாவது பிறந்த நாள் வந்தபோது காந்திஜி அவருக்கு ஒரு வாழ்த்து அனுப்பியிருந்தார். அதில் காந்திஜி குருதேவரை வாழ்த்திவிட்டு, "தாங்கள் இன்னும் இருபது ஆண்டுகள் உலகில் வாழ்ந்திருக்க வேண்டும்!" என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்குக் கவிஞர் டாகூர் "பாபுஜி, எழுபது ஆண்டுகள் வாழ்ந்ததே அதிகப் பிரசங்கித்தனம். இன்னும் இருபது ஆண்டுகள் உயிர் வாழ்ந்தால் அது மன்னிக்க முடியாத குற்றமாகும்!" என்று பதில் அனுப்பினார்.

காந்திஜி சொர்க்கத்தில் கவிஞரைச் சந்தித்ததும், "எழுபத்தொன்பதாவது வயதிலேயே நான் புறப்பட்டு வந்துவிட்டேன், பார்த்தீர்களா?" என்று சொல்லிச் சிரித்திருக்கலாம்.

* *

அந்தக் கடிதத்தில் வாதமிட்டிருந்தார். இந்தக் கடிதத்தைச் சில பத்திரிகைகள் பிரசுரித்தன. பிரசுரித்ததோடு "வேண்டாத விருந்தாளி" என்று காந்திஜிக்குப் பட்டம் சூட்டி அவருடைய பிடிவாதப் போக்கைக் கண்டித்து எழுதின. ஒரு சிலர் காந்திஜியை ஆதரித்துப் பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதினார்கள். ஆகக்கூடி, காந்திஜி தென்னாப்பிரிக்காவுக்கு வந்து சில நாளைக்குள்ளேயே அவருடைய பெயர் மிகவும் பிரபலமடைந்தது.

* * *

டர்பன் நகரில் பாரிஸ்டர் காந்தி சில நாள் தங்கினார். அந்நகரில் வசித்த மிஸ்டர் பால், மிஸ்டர் சுபான் காட்பிரே, பார்ஸி ரஸ்டம்ஜி, ஆதம்ஜி மியாகான் முதலிய இந்தியப் பிரமுகர்களை அறிமுகம் செய்து கொண்டார்.

இந்த நிலையில் பிரிட்டோரியாவிலிருந்து தாதா அப்துல்லாவுக்குக் கடிதம் வந்தது. "வழக்கு ஆரம்பமாகப் போகிறது. நீங்களாவது உங்களுடைய பிரதிநிதியாவது உடனே வந்து சேரவேண்டியது" என்று அதில் எழுதியிருந்தது.

இந்தக் கடிதத்தை அப்துல்லா சேத் காந்திஜியிடம் காட்டி, "பிரிட்டோரியாவுக்குப் போகிறீரா?" என்று கேட்டார். "முதலில் வழக்கைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்கிறேன்" என்றார் காந்திஜி. அவருக்கு விவரங்களைத் தெரியப்படுத்தும்படி தாதா அப்துல்லா தம் குமாஸ்தாக்களுக்குச் சொன்னார்.

அந்த வழக்கு, பெரும்பாலும் கணக்குகளைப் பற்றியது. ஆகவே ஆரம்பத்தில் காந்திஜிக்குத் தலைகால் ஒன்றும் தெரியவில்லை. பற்று வரவு நுணுக்கங்களைப் பற்றிக் குமாஸ்தாக்கள் சொன்னது ஒன்றும் அவருக்குப் பிடிபடவில்லை. குழப்பம்தான் அதிகமாயிற்று. குமாஸ்தாக்கள் அடிக்கடி 'பி. நோட்' என்று குறிப்பிட்டார்கள், 'பி. நோட்' என்றால் என்ன என்பதே இவருக்குத் தெரியவில்லை. கடைசியாகக் குமாஸ்தாக்களைக் கேட்டார். அவர்கள் சிரித்துவிட்டு, 'பிராமிஸரி நோட்' என்று சொன்னார்கள். இதன்பேரில் காந்திஜி கணக்கு முறையைப் பற்றி விவரிக்கும் புத்தகம் ஒன்றை வாங்கிப் படித்தார். அதற்குப் பிறகு ஒருவாறு விஷயம் தெளிவாயிற்று; வழக்கும் புரிந்தது.

பிறகு, மோகன் தாஸ் "பிரிட்டோரியாவுக்குப் புறப்பட நான் தயார்!" என்று அப்துல்லாவிடம் தெரிவித்தார்.

* * *

தம்பி! ஆதி காலத்திலிருந்து மகான்களும் மகரிஷிகளும் மதத் தலைவர்களும் அன்பையும் அஹிம்சையையும் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது "எல்லாரிடமும் அன்பாயிருக்க வேண்டும்; யாரையும் ஹிம்சிக்கக்கூடாது!" என்று உபதேசம் செய்திருக்கிறார்கள். "அஹிம்சா பரமோ தர்ம:" என்னும் அருமையான வாக்கியத்தையும் நீ கேள்விப்பட்டிருப்பாய். ஆகவே, அன்பும் அஹிம்சையும் உலகத்துக்குப் புதிய விஷயங்கள் அல்ல.

ஆனால் அன்பையும் அஹிம்சையையும் முற்காலத்தில் உபதேசித்த பெரியோர்கள் அவற்றை மனிதனுடைய நல்வாழ்வுக்குரிய மேலான குணங்களாகவும் மோட்ச சாதனங்களாகவும் உபதேசித்தார்களே தவிர, அந்த குணங்களை உலகிலுள்ள தீமைகளை எதிர்த்துப் போராடுவதற்குரிய ஆயுதங்களாக உபயோகிக்கலாம் என்று சொல்லவில்லை. அன்பையும் அஹிம்சையையும் சமூகத் தீமைகளை ஒழிப்பதற்கு ஆயுதங்களாகச் செய்து காட்டிய அவதார புருஷர் மகாத்மா காந்திதான். அன்பும் அஹிம்சையும் எப்படிக் காந்திஜியின் கையில் சிறந்த வலிமையுள்ள ஆயுதங்களாயின என்பதை நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். அந்த ஆயுதங்கள் எப்படிக் காந்தி மகானின் உள்ளத்தில் உருவாக ஆரம்பித்தன என்பதை இப்போது நீ பார்க்கப் போகிறாய். (தொடரும்)



அக்ஷயம்

அந்த ஊர்க் கிராமப் பஞ்சாயத்துக்கு ஓர் அதிசய வழக்கு வந்திருந்தது. கிராமத்துப் பெண் ஒருத்தி ஒரு வாலிபன்மீது குற்றம் சுமத்தியிருந்தாள்.

அந்தி மயங்கும் சந்தி வேளையில் அந்தப் பெண் கிராமத்துப் பூந்தோட்டத்தில் உட்கார்ந்து மலர் மாலை தொடுத்துக்கொண்டிருந்தாளாம். அந்தச் சமயம் தோட்டத்தில் அவளைத் தவிர வேறு யாருமே இல்லையாம். அதுதான் சரியான தருணம் என்று எண்ணி, ஒரு வாலிபன் 'விடுவிடு'வென்று வந்து அவள் கையிலிருந்த மலர் மாலையைப் பிடுங்கிக்கொள்ள முயன்றானாம்.

இதுதான் அந்தப் பெண் வாலிபன் மீது சுமத்தியிருந்த குற்றம்!

கிராமத்துப் பஞ்சாயத்தார் வழக்கைத் தீர விசாரித்த பின், அந்த வாலிபனுக்கு ஐந்து மோகராக்கள் அபராதமும், கிராமத்தை விட்டு ஐந்து மாதங்கள் வெளியேறி வசிக்க வேண்டும் என்று தண்டனையும் விதித்தார்கள்.

வாலிபன் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டான். ஆனால் தனக்கு விதிக்கப்பட்டிருக்கும் தண்டனை மிக மிக அதிகம்; ஆகவே தான் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவன் வெகு துணிச்சலுடன் மறுத்துவிட்டான்.

இதைக் கண்ட அந்தப் பூங்கோதை 'என்ன துணிச்சல் இவனுக்கு! இருக்கட்டும், ஒரு கை பார்த்துவிடுகிறேன்' என்று தனக்குள் முணுமுணுத்துக்கொண்டாள்.

அந்த அரசாங்கத்தின் நீதிமுறைப்படி, வழக்கு கிராம சமுதாயத்தின் நியாயஸ்தலத்துக்கு மாற்றப்பட்டது.

வாலிபன் அங்கே தன் வாக்குமூலத்தில், "நான் மாலையைப் பிடுங்கிக்கொள்ள விரும்பவில்லை; ஒரே ஒரு தடவை அதைத் தொட்டு முகர்ந்து பார்க்கத்தான் விரும்பினேன். ஆகையால் அந்தப் பெண் சொல்லுவது அவ்வளவும் அபாண்டம்! உண்மையைச் சொன்னால், அவள் தன் கை விரலில் அணிந்திருந்த மோதிரத்தைத்தான் நான் எடுத்துக்கொள்ள விரும்பினேன். ஆகவே கிராமத்துப் பஞ்சாயத்தார் எனக்கு அளித்த தண்டனை மிகவும் அதிகம்" என்று சொன்னான்.

'ரொம்ப நெஞ்சழுத்தக்காரனாக இருப்பான் போலிருக்கிறதே! என்னைத் தொட்டு என் கையிலிருந்த மோதிரத்தை எடுத்துக்கொள்ளப் பார்த்தானாமே! என்ன ஆனாலும் சரி, இவனை விடக்கூடாது!' என்று அந்தப் பெண் பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டு அந்த வாலிபனை விழுங்கி விடுபவள் போலப் பார்த்தாள்.

கிராம சமுதாயத்து நியாயஸ்தலத்தார் தீர யோசித்த பிறகு, "நீ சொல்வதிலிருந்து, இது முன்னைக் காட்டிலும் இன்னும் பெரிய குற்றம் செய்ததாகிறது. ஆகவே உனக்குப் பத்து மோகராக்கள் அபராதமும் ஒரு வருஷ காலம் நம் கிராமத்தை விட்டு வெளியே போய்விட வேண்டும் என்று தண்டனையும் விதிக்கிறோம்" என்று தீர்ப்பளித்தார்கள்.

வாலிபன் அந்தத் தீர்ப்பையும் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டான். ஆகவே வழக்கு அந்த அரசாங்கத்தின் சட்டதிட்டப்படி தேசத்து நியாயஸ்தலத்துக்கே அனுப்பப்பட்டது.

"நான் அந்தப் பெண்ணின் மோதிரத்தை அபகரித்துக்கொண்டு போய்விட

விரும்பவில்லை. ஒரே ஒரு தடவை பார்த்துவிட்டுத் திருப்பிக் கொடுத்து விடலாம் என்றுதான் எண்ணினேன். உண்மை யென்னவெனில், மோதிரத்தைக் கழற்றும் வியாஜத்தில் அவளுடைய மென்மையான தளிர்க் கரங்களை ஸ்பரிசிக்கும் பாக்கியம் கிடைக்குமே என்ற ஒரே ஒரு சபலம்தான்! இது ஒரு குற்றமா?'' என்று வாலிபன் அழுத்தமாகத் தன் கட்சியை எடுத்துரைத்தான்.

இதைக் கேட்டதும் 'ஓர் ஆண் மகன் பெண் மகள் கையைப் பிடிப்பதாவது!' என்ற எண்ணம் எழவே, அந்தப் பெண்ணுக்குக் கோபத்துடன் வெட்கமும் சேர்ந்துகொண்டது. ஆகவே அவள் முகத்தைக் கடுவன் பூனைபோல் வைத்துக்கொண்டு வெட்கித் தலை குனிந்து நின்றாள்.

இந்த வழக்கை விசாரித்த அந்தத் தேசத்து நியாயஸ்தலத்தார், ''இது அதைவிடப் பெரிய குற்றம். இப்பொழுது அளிக்கப்பட்டிருக்கும் தண்டனை மிகமிகக் குறைவு. ஆகவே இருபத்தைந்து மோகராக்கள் அபராதமும் ஐந்து வருஷ காலம் இந்த தேசத்தை விட்டே வெளியேறிவிட வேண்டும் என்று தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கிறது!'' என்றனர்.

வாலிபன் தளரவில்லை; ''இந்தத் தீர்ப்பு எனக்கு இன்னும் அதிக அதிருப்தியை அளிக்கிறது!'' என்று அஞ்சா நெஞ்சத்துடன் சொல்லிவிட்டான். ஆகவே வழக்கு பிரதான நியாயஸ்தலத்தில் விசாரணைக்கு வந்தது.

வாலிபன் பிரதம நீதிபதிக்கெதிரே, ''நான் அவளுடைய தளிர்க்கரங்களைத் தொடுவதால் ஏற்படும் ஸ்பரிச சுகத்தைக்கூட அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. அவளுடைய கரங்களைத் தீண்டும் போது அவள் சிவந்த இதழ்களில் நாணங் கலந்த முல்லை முறுவல் மலரும் அல்லவா? நான் விரும்பியது அது ஒன்றைத்தான்! இது ஒரு குற்றமாகுமா?'' என்று எதிர்வழக்காடினான்.

''ஊஹும்.........என் முல்லை முறுவலையா விரும்பினாய், முல்லை முறுவலை!'' என்று அந்தப் பெண் எரிச்சலுடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அதே சமயத்தில் அவனும் அந்தப் பெண்ணைப் பார்த்துக் கொண்டிருக்கவே பாழும்வெட்கம் எங்கிருந்தோ வந்து அவளைப் பற்றிக் கொண்டது!

வழக்கைச் சாங்கோபாங்கமாக விசாரித்த பிரதம நீதிபதி, ''இது மன்னிக்கவே முடியாத பெருங் குற்றமாகும். உனக்கு ஐம்பது மோகராக்கள் அபராதமும், பத்து வருஷம் நாட்டை விட்டே வெளியேற வேண்டும் என்று தண்டனையும் விதிக்கிறேன்'' என்றார்.

அந்தத் தீர்ப்பும் வாலிபனுக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. ஆகவே வழக்கு அரச சபைக்கே அனுப்பி வைக்கப்பட்டது.

வாலிபன் அரசர் அவையில் கூறியதாவது:—''நான் அந்தப் பெண்ணின் புன்னகையை விரும்பியதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. அவளுடைய அன்பையும் அறிமுகத்தையும் பெறுவதற்கு அதுதான் உகந்த வழி என்று நான் கருதினேன். அவளுடைய அன்பும் அறிமுகமும் எனக்குக் கிட்டிவிட்டால், நான் அவளை மணம் புரிந்து கொள்ளலாம் அல்லவா? இம்முறையில் வாழ்க்கைத் துணையைத் தேடிக் கொள்ளுவதில் தவறு ஒன்றும் இல்லை யென்றே நான் நினைக்கிறேன். ஆகவே பிரதம நீதிபதி எனக்கு அளித்திருக்கும் தண்டனை அநீதியானது; அக்கிரமமானது! மன்னர் முன்னிலையில் எனக்குச் சரியான நியாயம் கிடைக்கும் என்று நம்புகிறேன்.''

இதைக் கேட்டதும், 'முன்பின் பரிச்சயமில்லாத இவன் என்னை வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொள்ள விரும்புகிறானே! ஆள் பலே பேர்வழியாக இருப்பான்போலிருக்கிறது!' என்று எண்ணி அந்தப் பெண் தன் வேல் விழிகளால் வாலிபனின் கட்டழகான சரீரத்தை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தாள்





"ஒரு பெண்ணின் இச்சைக்கும் எண்ணத்துக்கும் மாறாகப் பலவந்தப்படுத்தி அவளை மணந்து கொள்ள விரும்புவது, நம் நாட்டுக் குடிகளுக்கு மிகவும் மானக்கேடான விஷயம். அம்மாதிரி செய்வது நம் நாட்டு நீதி நெறிக்கு அநீதி இழைப்பதாக ஆகும். ஆகவே உனக்கு நூறு மோகராக்கள் அபராதமும், இருபத்தைந்து வருஷங்களுக்கு ஏகாந்த சிறைத் தண்டனையும் அளிக்கிறோம்" என்று மன்னர் தம் தீர்ப்பைத் தெரிவித்தார்.

மன்னர் தீர்ப்புச் சொல்லி முடிந்ததும் வாலிபன் எழுந்து, "மன்னரின் ஆணைக்கு வணங்குகிறேன். ஆனால் ஒரே ஒரு விஷயம். இந்தத் தீர்ப்பிலும் நியாயம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஆகவே மன்னர் மறுபடியும் புனராலோசனை செய்து தீர்ப்பைத் தெரிவித்தால் நன்றாயிருக்கும்" என்று அடக்கத்துடன் சொன்னான்.

"நாம் நமது தீர்ப்பை மாற்றிக் கொள்ளுவதற்கில்லை. நமது தீர்ப்பு உனக்குப் பிடிக்கவில்லை என்றால் தர்ம குருவின் சபையில் உன் வழக்கை வைக்கச் சித்தமாயிருக்கிறோம்" என்றார் மன்னர்.

"எனக்கு அதில் பூர்ண திருப்தி. தர்ம குருவின் தீர்ப்பு நியாயமானதாக இருக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை" என்று வாலிபன் தன் சம்மதத்தைத் தெரிவித்தான்.

தர்மகுருவின் சபையில் வாலிபன் தன்னடக்கத்துடன், "நான் அந்தப் பெண்ணை பலவந்தப்படுத்தி மணம் புரிந்து கொள்ள விரும்பவில்லை. என்னையே அவளுடைய கையில் ஒப்படைத்து விடும் நோக்கத்துடன் தான் மணம் புரிந்து கொள்ள விரும்பினேன். அப்படிச் செய்வதில் யாருக்கும் ஆட்சேபம் இருக்க முடியாது; அந்தப் பெண் கூட அதற்கு மறுதளிக்க மாட்டாள் என்றே நம்புகிறேன்!" என்று சொல்லிவிட்டு, அந்தப் பெண்ணின் பக்கம் பார்வையைத் திருப்பினான்.

அவனையே பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பெண்ணின் கண்களும், அவனுடைய கண்களும் சந்தித்தன. அதன் பயனாக அந்தக் கண்கள் ஒரு விநாடி தங்கள் மௌன பாஷையில் ஏதோ பேசிக் கொண்டன.

சிறிது நேரத்துக்குப் பிறகுதான் யுவதிக்கு நிறைந்த சபையில் இருக்கிறோம் என்ற நினைவு வந்தது. உடனே அவள் முகம் வெட்கத்தினால் சிவந்தது. அவள் நாணிக் கண் புதைத்தாள்!

அதைக் கண்ணுற்ற தர்ம குரு தம் ஆசனத்திலிருந்து இறங்கி வந்து, அந்த வாலிபனுடைய மேதையை மெச்சியவாறே அவனை இறுகத் தழுவிக் கொண்டார்.

தர்ம குருவின் முன்னிலையிலேயே வாலிபனின் கைகள், காலைக் கோணிக் கொண்டு நின்ற அந்த யுவதியின் தளிர்க் கரங்களைப் பற்றின. அந்தப் பிடியிலிருந்து தன் கரங்களை விடுவித்துக் கொள்ள அவள் விரும்பவில்லை!

காந்திமகான் திருவாக்கு—9

நான் கடவுளைப் பிரத்தியட்சமாக - நேருக்கு நேராகப் பார்க்க விரும்புகிறேன். நான் கண்ட கடவுள் சத்தியமேயாகும். சத்தியமாகிய கடவுளை நிச்சயமாகக் காண்பதற்கு உரிய ஒரே வழி அஹிம்சைதான்.

இந்தியா சுதந்திரம் அடைய வேண்டும் என்பதற்காகவே நான் வாழ்கிறேன்; அதற்காகவே சாகவும் சாவேன். ஏனெனில், இந்தியாவின் சுதந்திரம் சத்தியத்தின் ஒரு பகுதி. சுதந்திர இந்தியாதான் உண்மைக் கடவுளை வணங்க முடியும்.

நான் இந்தியாவிலேயே பிறந்தவன்; இந்தியக் கலையையும் பண்பையும் பிதிரார்ஜிதமாகப் பெற்றவன். ஆகையால், நான் இந்தியாவுக்குச் சேவை செய்யத் தகுதி வாய்ந்தவன்.

ஆனால், என்னுடைய தேச பக்தி ஒரு குறிப்பிட்ட வரம்புக்கு உட்பட்டதல்ல; எந்த தேசத்துக்காவது கஷ்டமோ நஷ்டமோ உண்டாக்குவது அதன் நோக்கம் அல்ல; உலக முழுவதற்கும் நன்மை உண்டாக்குவது தான் அதன் நோக்கம். இந்திய சுதந்திரத்தால் உலகத்துக்கு ஒருபோதும் ஆபத்து உண்டாகாது.

— யங் இந்தியா 3—4—1924.

E. W. I.

PRESENTS FOR THE

SUMMER SEASON

★

THE MODERN FAN
FOR
THE MODERN AGE

★



PHOENIX
Fans
MODEL - 1948

A. C. & D. C.
36". 48". 58" & 60" SWEEP

For Economy and Efficiency

SAVING 70% IN CONSUMPTION

Guaranteed for two years for good Performance

SPECIAL FEATURES

TOTALLY ENCLOSED, BOTH ENDS HAVING BALL - BEARINGS

Approved by I. S. D., RAILWAYS, MUNICIPALITIES & GOVT. DEPARTMENTS
and tested by GOVERNMENT ALIPORE TEST HOUSE

CONTACT Sole Distributors for Southern Madras including States and Madras City

Phone :
4060

RM. S. & CO. LTD.

Grams :
AREMESCO

16, BROADWAY — MADRAS-1

Sub-Distributors :

1. **S. M. T. VELU & CO.**, SALEM (Coimbatore & Salem Districts)
2. **ELECTRICAL MACHINERY SYNDICATE**, TIRUPATTUR (N. A.) (North Arcot District).
3. **RAJU ELECTRIC STORES**, SOUTH MAIN ST., TANJORE & BIG BAZAAR ST., NEGAPATAM (Tanjore District).
4. **HARRY SONS & CO. LTD.**, CANTONMENT. TRIVANDRUM (Travancore State).
5. **GOODMAN CO.**, 39. DUPLEIX ST., PONDICHERRY (South Arcot District inclusive of Karikal & Pondicherry)

Stockist :

1. WEST COAST TRADING CO., ERNAKULAM
2. RADIO HOUSE, SINGARATHOPE. TRICHINOPOLY
3. SHUNMUGAM & CO. 8/7, JAIL ROAD, COIMBATORE

Factory Representative :


K. RAGHAVACHARI, 310/11, LINGHI CHETTY ST., MADRAS - 1

மூட்டைகளை நிர்மூலநாசம் செய்வது எப்படி?



ஒரு உழைப்பாளிக்கு சுக நித்திரையைவிட மேலானது வேறொன்றுமில்லையென்றே கூறலாம். ஆனால் மூட்டைப் பூச்சிகள் இலக்ஷக்கணக்காக பெற்றுப் பெருகுமோர் நாட்டில் மிக்க ஜனங்களுக்கும் சுகநிம்மதியான நித்திரை எங்கிருந்து கிடைக்கும்? ஏன் இப்படி தவியாய்த் தவிக்க வேண்டும்? விசேஷ சக்தி வாய்ந்த கீடநாசினி நீர் தாவியாகிய டார்ச் பிராண்டை வாங்கி இன்றிரவே உங்கள் படுக்கையில் உபயோகியுங்கள்! பாயின் அடிபுறமும், படுக்கையறை தரை, சுவர்கள்மீதும் தூவுங்கள். டார்ச் பிராண்ட் சரியானபடி உபயோகிப்பதாயின் இரவு உங்களுக்கு பூர்ண சுக நிம்மதியுடன் தூங்கலாம். அசங்கியமான ரோக பீஜவாஹிகளாகிய ஈ, கொசு, தெள்ளுப் பூச்சி, கரப்பு, முதலிய வீட்டுச் சனியன்களுக்கெதிராக அதை எப்படி உபயோகிப்பதென்று உங்கள் மனைவிக்கும் காட்டிக் கொடுங்கள்.

டார்ச் பிராண்ட் உபயோகித்து உங்கள் வீட்டினின்று அசங்கியமும் அபாயகரமுமான பூச்சிகளை ஒழியுங்கள்



நிஜத்த பயன்!

டார்ச் பிராண்ட்

சக்திவாய்ந்த கீடநாசினி நீர்தாவி

(5% பூர்ண வீரியமுடைய DDT அடங்கியது)


தயாரிப்பவர்கள்: பிரோக்ரெஸ்ஸிவ் கெமிகல்ஸ் கார்ப்பொரேஷன் லிட்.

விசேஷ விற்பனை ஏஜெண்டுகள்: தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிட்.

D. D. T. 1395



குப்பையில் கிடந்த மாணிக்கம்



ஜெயமணி ஸா. சுப்பிரமணியம்

அரகான் பிரதேசத்தைச் சேர்ந்த பலவிடங்களும் வெகுசீக்கிரத்தில் தேசியத் துருப்புகளின் வசமாயின. அவ்வாறு வெற்றிமேல் வெற்றி கிடைத்து வந்ததால், ராணுவ முகாம் முழுதும் ஒரே சந்தோஷ ஆரவாரமாக இருந்தது!

எதிரிகள் பின்வாங்கி ஓடியதைக் குறித்தும் அவர்கள் செய்த தவறுகளைப் பற்றியும் ஐ. என். ஏ. அதிகாரிகள் ஏளனமாகவும் உற்சாகத்துடனும் பேசிக் கொண்டிருந்தனர். பிரிட்டிஷ் ராணுவ முகாமிலிருந்து கைப்பற்றப்பட்ட ஏராளமான உயர்ந்த ரக ரொட்டிகளையும் சிகரெட்டுகளையும் ஐ. என். ஏ. சிப்பாய்கள் தமாஷாகப் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டார்கள். ஒரு புறத்தில் குட்டி சங்கீதக் கச்சேரி யொன்றும் நடந்து கொண்டிருந்தது!

ஆனால், சிறிது தூரத்துக்கு அப்பாலிருந்த ஒரு பெரிய கூடாரத்தில் மாத்திரம் நிசப்தம் நிலவியது. கூடாரத்தினுள்ளே நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உட்கார்ந்து, தீர்க்க சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். அவரது முகம் வாட்டமுற்றிருந்தது. எனவே, மெய் காவலர்களைப் போன்று நேதாஜியை நிழல்போல் தொடர்ந்து வரும் அந்த இரண்டு உயர்தர ராணுவ அதிகாரிகளும் வெளியே வந்துவிட்டார்கள்.

போர்முனையில் ஆயிரக் கணக்கிலும் பதினாயிரக் கணக்கிலும் சிப்பாய்கள் மடிவது சர்வ சகஜம். அப்படியிருக்க அன்று நிகழ்ந்த ஓர் அற்ப சம்பவத்தைக் குறித்து மகாதீர புருஷரான நேதாஜியின் முகம் வாடியது அவ்விரு அதிகாரிகளுக்கும் ஆச்சரியமாக இருந்தது.

உயர்தர ராணுவ அதிகாரிகளின் கோரிக்கையைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் நேதாஜி, சாதாரண சிப்பாயைப் போல் உணவு உட்கொண்டார். போர் நடக்கும் கேந்திர ஸ்தானத்துக்கு நேரில் வந்து பல கஷ்டங்களையும் அனுபவித்தார். அப்போது கூட அவரது சரீரமோ, முகமோ, மனமோ வாடவில்லை! அவரது இணையற்ற காம்பீர்யம் அணுவளவும் குன்றவில்லை!

ஒரு சமயம் நேதாஜி மற்றும் சில உயர்தர ராணுவ அதிகாரிகளுடன் டோக்கியோவுக்குச் சென்றிருந்தார். அலுவல்கள் முடிந்து அவர்கள் திரும்பும் நாள் வந்தது. வழியில் கடுமையான சுழல் காற்று அடிப்பதால், விமானம் செல்லுவது ஆபத்தாகும் என்று விமான நிலையத்தார் எச்சரித்தனர். ஆனால், நேதாஜி குறிப்பிட்ட நேரத்தில் தாம் பாங்காக் செல்ல வேண்டுமென்றும் எனவே உடனே விமானம் தயாராக வேண்டுமென்றும் கட்டளையிட்டார். அந்தக் கட்டளையை மீறும் தைரியம் எவருக்கு உண்டு? ஆகையால் நேதாஜியின் பிரத்தியேக விமானம் உடனே தயாராகியது.

ஜப்பானை யடுத்து பசிபிக் மகா சமுத்திரத்தில் திடீரென்று ஒருவித பயங்கரமான சுழல் காற்று அடிப்பது வழக்கம். அந்தக் காற்றுக்குப் பலியான விமானங்கள் பல. அதில் விமானம் அகப்பட்டுக் கொண்டால் ஒரு பெரும் காற்றில் சிறிய காகிதம் அகப்பட்டுக் கொண்டால் எப்படியோ அப்படித்தான்! கிழக்கு ஆசியாவில் இந்திய சுதந்திர இயக்கம் ஆரம்பமானபோது விமானத்தில் சென்ற நான்கு முக்கிய இந்தியப் பிரதிநிதிகளைப் பலிகொண்ட சுழல் காற்று அதுதான்.

எனினும், மேலே குறிப்பிட்ட விதம் டோக்கியோவிலிருந்து நேதாஜியும் மற்றவர்களும் விமானத்தில் புறப்பட்டார்கள். "போர் முனையில் உயிரை அர்ப்பணம் செய்யலாம் என்றிருந்தோம். சுழல் காற்றில் அகப்பட்டுக்கொண்டு சாகவேண்டும் என்று எங்கள் தலையில் எழுதியிருந்தால்,

அதை யார் தடுக்க முடியும்?" என்று ஒரு ராணுவ அதிகாரி விளையாட்டாகவோ வினயாகவோ கூறிய போது நேதாஜி உள்பட எல்லோரும் உரக்கச் சிரித்துக் கொண்டே விமானத்தில் ஏறினர். நல்ல வேளையாக அதற்குள் சுழல் காற்றின் உக்ரம் சிறிது தணிந்து விட்டதால் விமானம் அசம்பாவிதம் எதுவுமின்றிக் குறிப்பிட்ட இடத்துக்கு வந்து சேர்ந்தது.

* * *

நேதாஜி போர் முனையில் இருந்த போது அவருடைய கூடாரத்துக்குச் சமீபத்தில் ஒரு நாள் பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளை வீசின. அவைகளிலிருந்து சிதறிய சிதல்கள் நேதாஜியின் கூடாரத்தை ஊடுருவிப் பாய்ந்தன. அச் சமயத்திலும் அந்த மகா புருஷர் சிறிதும் கலங்கவில்லை.

அந்தச் சம்பவம் நிகழ்ந்தபின், பல உயர்தர ராணுவ அதிகாரிகளும் நேதாஜியை வற்புறுத்த ஆரம்பித்தார்கள். எந்த யுத்தத்திலும் பிரதம தளபதி போர் முனைக்கு வரும் வழக்கமே இல்லையென்றும், அப்படியிருக்க, நேதாஜி போர்முனையில் தமது உயிரை [illegible] பணயம் வைத்துக் கொண்டிருப்பது தங்களுடைய உற்சாகத்தை மிகவும் குறைத்து வருவதாகவும் அவர்கள் முறையிட்டுக் கொண்டனர்.

ஆனால் அவர்களுக்கு நேதாஜி அளித்த பதில் இது தான்:

"பிரிட்டிஷ் ரகசியப் போலீசாரின் கழுகுப் பார்வைக்குத் தப்பி இந்தியாவிலிருந்து வெளியேறவும், பின்னர் பலவித ஆபத்துகளிலிருந்தும் மீண்டு கிழக்கு ஆசியாவுக்கு வந்து இந்த யுத்தத்தை நடத்தவும் எனக்கு அருள் புரிந்த கடவுள், இந்த யுத்தத்தில் வெற்றி காணவும் அருள் புரிவார். பதினாயிரக் கணக்கான இளம் வீரர்களையும் வீராங்கனைகளையும் போர்முனையில் கொண்டுவந்து நிறுத்திவிட்டு, ஆபத்தில்லாத அமைதியான ஓரிடத்தில் நான் போய் உட்கார்ந்திருக்க என் மனச்சாட்சி இடங் கொடுக்கவில்லை."

நேதாஜி போஸ் அவ்வாறு கூறியதைக் கேட்டதும், எல்லா அதிகாரிகளும் வாளா விருந்தனர். ராணுவ அதிகாரிகளுக்கெல்லாம் முதல்வரான ஒருவர் மட்டும் நேதாஜி கூறியவைகளையெல்லாம் ஒப்புக் கொண்டதற்கு அறிகுறியாக, "எங்களை



"மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லித் தலை வணங்கினர்.

அவ்விதம் வீர தீர பராக்கிரமமே உருவெடுத்தாற் போன்ற நேதாஜி போல், ஓர் அற்ப சம்பவத்தைக் குறித்து வெகு நேரம் வாட்டத்துடன் உட்காருவதென்றால்,—அதிலும் வெற்றி கிடைத்துள்ள அச்சமயத்தில் வருந்துவதென்றால், அதிகாரிகளுக்கு ஆச்சரியமாகத்தானே இருக்கும்?

நேதாஜியின் உள்ளத்தை அவ்வளவு தூரம் கிளறிய அந்தச் சம்பவம் என்ன?

* * *

1942-ம் வருஷ ஆரம்பத்திலே ஜப்பானியர் மலாயாவையும் மற்றும் பல பிரதேசங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டார்கள் அல்லவா! அப்போது மலாயாவில்



ரப்பர்த் தோட்ட சம்பந்தமான வேலைகள் எல்லாம் அடியோடு நின்று விட்டன. எனவே, அந்தத் தோட்ட வேலைகளையே நம்பிக் கொண்டிருந்த லட்சக்கணக்கான இந்தியத் தொழிலாளர்களைத் திடீரென்று பஞ்சம் வந்து சூழ்ந்து கொண்டது.

நகரங்களுக்கு ஓடிவிட்டால் பஞ்சப் பேய் தங்களை விட்டுவிடும் என்ற எண்ணத்துடன் தொழிலாளர்கள் தங்கள் தங்கள் குடும்பங்களுடன் நகரங்களுக்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால் அவர்கள் வருவதற்கு முன்பே நகரங்களுக்கும் பஞ்சப் பேய் வந்து விட்டது! எனவே, பஞ்சத்தில் அடிபட்டுத் தெருக்களில் இந்தியர்களின் பிரேதங்கள் கிடக்கலாயின. பிரேதங்களை அப்புறப்படுத்தும் பொறுப்பைக்கூட ஜப்பானிய அதிகாரிகள் சமாளிக்க முடியாமல் இந்திய சுதந்திர சங்கத்தின் தலையிலே சுமத்தி விட்டார்கள்.

இந்தியர்களின் பிரேதங்கள் மாத்திரம் அவ்வாறு தெருக்களிலே கிடப்பது இந்திய சமூகத்துக்குப் பெருத்த அவமானமாக இருந்தது. அத்தகைய நிலைமைக்குப் பரிகாரம் செய்யும் நோக்கத்துடன் சில பிரமுகர்கள் சேர்ந்து மலாயாவிலுள்ள முக்கிய பட்டணங்களில் ஏழை இந்தியர்களுக்காக அநாதைகள் கஞ்சி நிவாரண முகாம்களை ஆரம்பித்தார்கள்.

மேற்படி முகாம்களைப் பராமரிப்பதற்கு மலாயா வாழ் இந்திய மகாஜனங்கள் மனமுவந்து லட்சம் லட்சமாக அளித்த நன்கொடை சரித்திரத்திலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

* * *

நேதாஜியின் பிரசங்கத்தைக் கேட்பதற்காக அந்த நகர் மைதானத்தில் பதினுயிரக்கணக்கான சிப்பாய்களும் ஆடவர்களும் பெண்களும் அநாதை முகாமைச் சேர்ந்தவர்களும் கூடியிருந்தார்கள். அப்போது வந்த பெருமழையையும் யாரும் லட்சியம் செய்யவில்லை. மழை பெய்கிறதே என்பதற்காக நேதாஜி தமது பிரசங்கத்தை உடனே முடிக்கவுமில்லை. நேதாஜி நனையாமல் இருப்பதற்காக ஒரு பிரமுகர் குடையைக் கொண்டுவந்து பிடித்தபோது, நேதாஜி அதை அப்பால் தள்ளிவிட்டார்.

"அக்கினி மாரியில் அஞ்சா நெஞ்சத்துடன் ஸ்நானம் செய்ய வேண்டிய நாம் தண்ணீர் மாரிக்கு ஏன் பயப்பட வேண்டும்?" என்று நேதாஜி கேட்டபோது, அத்தனை ஜனங்களும் "அஞ்சோம்"

என்று கூறுவதற்கு அறிகுறியாக வானளாவ தேசிய கோஷங்கள் செய்தனர். அந்த கோஷங்களுக்கு இடையே இடியின் சப்தமும் மழையின் சப்தமும் மறைந்தது!

அன்று அவ்விடத்தில் மழைப் பிரவாகத்துக்கும் உணர்ச்சிப் பிரவாகத்துக்கும் நடந்த போட்டியில் உணர்ச்சிப் பிரவாகமே வெற்றி பெற்றது! நேதாஜியினுடைய பிரசங்கத்தின் முடிவில், அதைக் கேட்டு விட்டுச் செல்லுவது போல் மழையும் நின்றுவிட்டது!

பச்சைக் குழந்தையை எடுத்து வந்திருந்த பல பெண்மணிகள் சொட்டச் சொட்ட நனைந்திருந்தனர். ஏக காலத்தில் பதினாயிரக் கணக்கான ஜனங்கள் நனைந்து நின்றது, நேதாஜியின் பிரசங்க மாரியால் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் போன்றிருந்தது!

பிரசங்கம் முடிந்து எல்லோரும் திரும்பிச் செல்லும் சமயத்தில், திடீரென்று யாரோ வீறிட்ட சப்தமொன்று கேட்டது. எல்லா ஜனங்களும் திகைத்து நின்றனர். ஓர் ஏழைப் பெண், கந்தல் ஆடையுடன் சொட்ட நனைந்து நடுக்கம் எடுத்த ஒரு பெண், 'நேதாஜி, நேதாஜி!' என்று அலறிக் கொண்டு மேடைக்கு அருகில் ஓடி வந்தாள். அவளுக்குச் சுமார் இருபது வயதிருக்கும். அவள் அவ்வாறு கூக்குரலிட்டு ஓடி வந்ததைக் கண்டு அவளை ஒரு பைத்தியக்காரியென்றே எல்லோரும் கருதினர். மேடைக்கு அருகிலிருந்த சில பிரமுகர்கள், "ஷ்...... பேசாமல் திரும்பிப் போ!" என்று அந்தப் பெண்ணைப் பிடித்துத் தள்ளியபோது, நேதாஜி மேடையிலிருந்து கீழே இறங்கி வரவே அவர்கள் அப்பால் சென்றனர்.

நேதாஜி அந்தப் பெண்ணை இரக்கத்துடன் பார்த்து, "குழந்தாய்!" என்று கூறினார். அந்த ஒரே வார்த்தை சமீபத்திலிருந்த சகலருடைய மனதையும் உருக்கி விட்டது. அந்தப் பெண் நேதாஜியின் காலில் விழுந்து விம்மி விம்மிக் கதறத் தொடங்கினாள். அவளால் பேச முடியவில்லை. அவளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து மறுநாள் காலையில் தம்முடைய ஜாகைக்கு அழைத்து வரும்படி இந்திய சுதந்திர சங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு நேதாஜி கட்டளையிட்டார்.

மறு நாள் நேதாஜி அந்தப் பெண்ணின் வரலாற்றை பரிவுடன் விசாரித்தபோது கீழ்க்கண்ட விவரங்கள் தெரியலாயின:

அவளுடைய பெயர் மாணிக்கம். ஏதோ ஒரு ரப்பர்த் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தாள். யுத்தம் ஏற்பட்ட பிறகு சேர்ந்த பஞ்சம் அவளுடைய தாய், தந்தை, சகோதரர்கள் எல்லாரையும் பலிகொண்டு விட்டது. பசியும், பிணியும் தாங்க முடியாமல் அவள் அனாதைகள் விடுதிக்கு வந்து சேர்ந்தாள்.

அதற்குமேல் ஏதோ கூற வாயெடுத்த மாணிக்கம் சற்று தயங்கவே, நேதாஜி "சரி, உன் வரலாறு துக்ககரமானதுதான். ஆனால் இப்போது உனக்கு என்ன வேண்டும்?" என்று அன்பு ததும்பும் குரலில் கேட்டார்.

அனாதைகள் விடுதியில் நல்ல சாப்பாடாகப் போடச் சொல்லுங்கள்; தனக்கு நல்ல உடை கொடுக்கச் சொல்லுங்கள் என்று அந்தப் பெண் ஏதாவது கூறுவாள் என்றே பலரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அதற்கு மாறாக அவள் கூறிய விஷயம் எல்லோரையும் திடுக்கிடச் செய்தது.

"என்னை தேசிய ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று மாணிக்கம் கூறியபோது சிலருக்குச் சிரிப்புக்கூட வந்து விட்டது.

எழுதப்படிக்கத் தெரியாத ஒரு பெண்,— தேகத்தில் வலுவின்றி நோயால் வாடி வதங்கியுள்ள ஒரு பெண் தன்னை ராணுவத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறினால் ஆச்சரியமாகத்தானே இருக்கும்?

ஆனால் அந்தப் பெண்ணுக்கு நேதாஜி அளித்த பதில் எல்லோருக்கும் இன்னும் அதிகமான ஆச்சரியத்தைக் கொடுத்தது.

"அப்படியே ஆகட்டும்" என்று நேதாஜி கூறியதுடன், மாணிக்கத்தை ஜான்ஸி ராணிப் பயிற்சிச்சாலையில் சேர்க்கும்படியும், அவளது பயிற்சி விஷயத்தில் அதிகாரிகள் விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்றும் கட்டளையிட்டார்.

அன்றைய தினத்திலிருந்து ஆறே மாதங்களுக்குள் மாணிக்கம் ஒரு புதிய மாணிக்கமாக விளங்கினாள். ஆறு மாதங்களுக்கு முன் குழி விழுந்து கிடந்த கண்களில் ஆரோக்கிய ஒளியும் வீர ஒளியும் ஒருங்கே வீச ஆரம்பித்தன.

அவளுடைய பயிற்சி முடிந்துவிட்டது. ஜான்ஸி ராணிப் படை முகாம் அதிகாரிகள் பெருமையடையக் கூடியவாறு மாணிக்கம் பயிற்சியில் தேறினாள் என்பதைக் காட்டிலும் அதிகமாக என்ன சொல்ல இருக்கிறது!

வைத்திய சிகிச்சை (சர்விஸ்) முதல் துப்பாக்கிப் பிரயோகம், பீரங்கிப் பிரயோகம், வனயுத்தம், வெடிகுண்டு வீச்சு முதலிய சகல அம்சங்களிலும் மாணிக்கம் அபாரமான தேர்ச்சி பெற்றாள். மாணிக்கத்தின் அற்புதமான தேர்ச்சியைக் கண்டு நேதாஜியைக் காட்டிலும் யார் அதிக சந்தோஷம் அடைந்திருக்க முடியும்?

* * *


யுத்தத்தில் காயமடைந்த ஐ. என். ஏ. சிப்பாய்களுக்காக மேமியோவில் ஒரு பெரிய ஆஸ்பத்திரி அமைக்கப்பட்டிருந்தது. அதன் முக்கிய நிர்வாக அதிகாரிகளுள் மாணிக்கமும் ஒருத்தி. காயமடைந்த சிப்பாய்களைப் பார்த்து அவர்களுக்கு ஆறுதல் கூறுவதற்காக நேதாஜி வந்திருந்தபோது, சிப்பாய்கள் ஏகோபித்து மாணிக்கத்தைப் புகழ்ந்தனர். வயதில் இளையவளாயினும் மாணிக்கம் தங்கள் தாயாரைப் போன்று தங்களிடம் அன்பு காட்டி வருவதாக அவர்கள் கூறியதைக் கேட்டு நேதாஜி பேரன் புளகாங்கிதம் அடைந்தார். அவரது கண்களில் கண்ணீர் ததும்பியது.

அங்கிருந்து நேதாஜி விடை பெற்றுக் கொண்டு செல்லுகையில் மாணிக்கத்தைப் பார்த்து, "மாணிக்கம்! அடுத்த தடவை நான் இங்கு வரும்போது உனக்கு ஒரு கௌரவ ராணுவப் பதக்கமொன்று பரிசளிக்கத் தீர்மானித்திருக்கிறேன்" என்றார்.

மாணிக்கம் நேதாஜி போஸை முதலில் சந்தித்தபோது, அவள் கூறுவதை வேறு யாராவது ஆங்கிலத்திலோ அல்லது ஹிந்தியிலோ மொழிபெயர்த்துச் சொல்ல வேண்டியிருந்தது. இனி அந்தக் கஷ்டமில்லை. ராணுவப் பயிற்சி பெற்ற காலத்தில் மாணிக்கம் ஹிந்தியில் நன்றாகப் பேசக் கற்றுக் கொண்டிருந்தாள். நேதாஜியுடன் நேரில் சம்பாஷிக்கும் பாக்கியம் அவளுக்குக் கிடைத்தது!

"இருக்கட்டும்; என்னை எப்போது போர்முனைக்கு அனுப்பப் போகிறீர்கள்?"

அவ்விதம் மாணிக்கம் கூறியதைக் கேட்ட நேதாஜி, ஒரு தகப்பனார் தம்முடைய செல்வப் புதல்வியைப் பார்த்து எவ்வாறு அன்பும் வாத்ஸல்யமும் ததும்பச் சிரிப்பாரோ அவ்வாறு சிரித்துக் கொண்டே விடை பெற்றுச் சென்றார்.



நிருபர் :— இன்ஸ்பெக்டர் அசந்து தூங்குகிறார். இப்போது அவரை எழுப்புவதில் எனக்கு இஷ்டம் இல்லை, ஸார்!

அவர் சென்ற மறுநாள் தான் மேமியோவிலிருந்த மேற்படி ராணுவ ஆஸ்பத்திரி பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டது. இரண்டாயிரம் சிப்பாய்களுக்குமேல் அங்கு சிகிச்சை பெற்று வந்தார்கள். அந்தத் தாக்குதலால் சுமார் பதினைந்து பேர்கள் தான் உயிர் துறந்தனர். எதிர்பார்த்ததை விட உயிர்ச் சேதம் குறைவே என்றாலும், மாண்டவர்களில் மாணிக்கமும் ஒருத்தி என்ற செய்திதான் நேதாஜியைத் துக்கத்தில் ஆழ்த்தியது.

* * *

வெளியே சென்றிருந்த இரண்டு அதிகாரிகளும் மீண்டும் முகாமுக்குள் பிரவேசித்தபோது நேதாஜி ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டு எழுந்தார்.

"குப்பையிலே கிடந்த இந்த அற்புத மாணிக்கத்தை ஏதோ தெய்வச் செயலாகக் கண்டு பிடிக்க முடிந்தது. ஆனால், குப்பையிலே பிறந்து குப்பையிலே வளர்ந்து குப்பையிலே மடியும் கோடிக் கணக்கான மாணிக்கங்கள் இந்தியாவில் வியர்த்தமாகி விடுகின்றன அல்லவா? அது பாரத நாட்டுக்கு ஈடு செய்ய முடியாத பெரும் நஷ்டம் தானே?" என்று நேதாஜி சொன்னபோது தான், அதன் ஆழ்ந்த கருத்தை அந்த அதிகாரிகள் சிந்திக்கலாயினர்.



தேவதையின் சாபம்

பி.எஸ். மணி

★ ★ ★

மகிழபுரி என்னும் தேசத்தை விஷ்ணுவர்மன் என்ற அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் தினந்தோறும் மாலையில் தன் மந்திரிப் பிரதானிகளுடன் அரண்மனைத் தோட்டத்தில் உலாவுவது வழக்கம். ஒரு நாள் மாலை அந்தத் தோட்டத்தில் மயில் ஒன்று தனது தோகையை விரித்து ஆடிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் சேனாதிபதி, "அரசே! இந்த மயில் எவ்வளவு அழகாயிருக்கிறது! ஆயிரங் கண்கள் படைத்த இந்திரன்கூட அழகுக்கு இதனிடம் பிச்சை வாங்க வேணும் போலிருக்கிறதே!" என்று சொல்லி வியந்தான்.

மந்திரி, "இல்லையென்றால் ஆறு முகங்கள் கொண்ட ஆறுமுகனுக்கு இது வாகனமாக வாய்த்திருக்க முடியுமா?" என்றான்.

அரசனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. "என்ன! நீங்கள் ஒரேயடியாய் இந்த மயிலின் அழகைப் பற்றிப் பிரமாதமாகப் புகழ்கிறீர்களே? எனக்கொன்றும் அது அழகாகத் தோன்றவில்லையே!" என்று சொல்லிச் சிரித்தான்.

இந்தச் சமயத்தில், "நீ எதற்காகச் சிரிக்கிறாய்?" என்று யாரோ கேட்டது போலிருந்தது. எல்லோரும் சுற்றுமுற்றும் பார்த்துத் திருதிருவென்று விழித்தனர். என்ன ஆச்சரியம்! மயில், "நான்தான் கேட்கிறேன்!" என்று சொல்லிக்கொண்டே அரசனின் முன்னால் வந்து நின்றது. வியப்புடன் அனைவரும் அதையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றனர்.

"ஏ, அரசே! என்னதான் வர்ண விசித்திரமாயிருந்தாலும் அவற்றை அனுபவிக்க உன்னால் முடியாது! உன்னுடைய கண்களுக்கு எந்த அழகும் அவலட்சணமாகத்தான் தோன்றும்! ஒரு தேவதையின் சாபத்தினால் உங்கள் பரம்பரைக்கு ஏற்பட்ட விபரீத பலன் இது!" என்றது மயில்.

"தேவதையின் சாபமா! என்ன சாபம்?" என்று அரசன் ஆவலுடன் கேட்டான்.

மயில், தேவதையின் சாபத்தைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தது:

பல வருஷங்களுக்கு முன்னால் இந்தத் தேசத்தில் ஒரு குயவன் இருந்தான். அவன் மிகவும் ஏழை. பானைகள் செய்து விற்று ஜீவனம் செய்து வந்தான் அவன். சில நாட்களில் அவன் செய்த பானைகள் அழகாயில்லாததால் விற்காமற் போய்விடும். அதனால் பல நாட்கள் அவன் பட்டினி கிடப்பான். அந்தக் குயவன் வீட்டருகே ஒரு தேவதை வசித்து வந்தது. அவன் படும் கஷ்டத்தைப் பார்த்து அதனால் சகிக்க முடியவில்லை. ஆகவே, அது அவனுக்கு உதவி செய்ய நினைத்தது.

ஒரு நாள் குயவன் பானை செய்வதில் ஈடுபட்டிருந்தான். தேவதை அவனுக்கு முன்னால் வந்து நின்று, அவன் பானைகள் செய்வதைக் கண் கொட்டாமல் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தது. பிறகு, அவன் செய்யும் பானைகளுக்கு அழகாக வர்ணம் பூசும் வித்தையை அவனுக்குக் காதோடு காதாகச் சொல்லிக் கொடுத்துவிட்டுச் சென்றது.

தேவதையின் அருளினால் குயவன் செய்த வர்ணக் கலசங்கள் நாடெங்கும் விற்க ஆரம்பித்தன. எல்லோரும் அவனுடைய பானைகளை வாங்கினர். மகிழபுரி தேசத் தரசனும் நிறைய வாங்கினான். அரசன் வாங்கினதோடு மட்டுமில்லை; பானைகளுக்கு வர்ணம் பூசும் விதத்தையும் அவன் அறிய விரும்பினான். ஆகவே, அரசன் நேரே அந்தக் குயவனிடம் வந்து, வர்ணக் கலசங்கள் செய்யும் விதத்தைத் தனக்கும் கற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டான்.

"இந்த வித்தையை எனக்கு ஒரு தேவதை சொல்லிக் கொடுத்தது. நான் இந்த ரகசியத்தை ஒருவரிடமும் தெரிவிக்க வில்லை என்று அதற்கு வாக்கு கொடுத்திருக்கிறேன்" என்றான் குயவன்.

"நான் யார் தெரியுமா? இந்தத் தேசத்து அரசன். சொல்கிறாயா, இல்லை—சிறைத் தண்டனை அடைகிறாயா?" என்று கோபத்துடன் கேட்டான் அரசன்.

குயவன் மறுத்து விட்டான். உடனே அரசன் தன் சேவகர்களை அழைத்து, "இவனைக் கட்டி இழுத்துச் சென்று சிறையில் அடையுங்கள்!" என்று கட்டளையிட்டான்.

சேவகர்கள் குயவனை இழுத்துச் சென்று சிறையில் அடைத்தார்கள். பாவம்! அவன் சிறையில் அனுபவித்த கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

சில நாட்கள் கழித்து அரசன் மறுபடியும் அந்தக் குயவனை அழைத்து, "நீ இப்பொழுதாவது அந்த வித்தையை எனக்குச் சொன்னால் உன்னை விடுதலை செய்து விடுகிறேன்" என்றான்.



குயவன் அதற்கு இணங்க வில்லை. அரசன் ஆத்திரமடைந்து அவனைச் சவுக்கினால் அடிக்கும்படி உத்தர விட்டான். அவ்வளவு தான்; சேவகர்கள் தங்கள் கை வரிசைகளைக் காண்பிக்க ஆரம்பித்து விட்டார்கள்!

அதற்குள் தேவதை, "நம்மாலல்லவா குயவன் இவ்வளவு துன்பத்துக்குள்ளானான்! அவனை எப்படியாவது விடுவிக்க வேண்டும்" என்று எண்ணி அரச சபைக்கு விரைந்து வந்தது.

அரசன் குயவனைப் படுத்தும் பாட்டைப் பார்த்ததும் தேவதைக்குக் கோபம் கோபமாக வந்தது. ஆகவே, "இனி நீயும் உன் சந்ததியும் அழகையும் வர்ணத்தையும் கண்டு அனுபவிக்கும் சக்தியை யிழப்பீர்கள்!" என்று அரசனைச் சபித்து விட்டுத் தேவதை மறைந்தது.

அந்தத் தேவதையின் சாபத்தினால் தான் அவன் வழி வந்த உனக்கும் எனது அழகை அநுபவிக்கும் ஆற்றல் இல்லாமற் போய் விட்டது. அதற்காக நான் உன்னைப் பார்த்துச் சிரிக்க வேண்டியிருக்க, நீ என்னைப் பார்த்துச் சிரித்தாயே!" என்று சொல்லி, மயில் தன் கதையை முடித்தது.

கதையைக் கேட்ட அரசன் தன் துர்ப்பாக்கியத்தை நினைத்து மிகவும் வருந்தினான். இந்தச் சமயத்தில் எதிர் பாராத ஓர் அதிசயம் நிகழ்ந்தது. மயில் நின்ற இடத்தில் ஓர் அழகான தேவதை தோன்றி, "அரசே! நீ உன் குற்றத்தை நினைந்து வருந்தியதால் இதுவரை உனக்கும் உன் சந்ததிக்கும் இருந்த சாபம் இன்றோடு ஒழியட்டும்; இனி நீ எல்லா அழகையும் அனுபவிப்பாய்!" என்று கூறி மறைந்தது.

அரசன் சந்தோஷத்துடன் தன் அரண்மனைக்குத் திரும்பி, அந்தக் குயவனின் வம்சத்தாருக்கு வேண்டிய வெகுமதிகளை அனுப்பி வைத்தான்.

வளரும் தமிழ்

காந்தி ஆசிரம வெளியீடுகள்

வாழையடி வாழையாக வந்த திருக்கூட்டம் என்று மகான் இராமலிங்க சுவாமிகள் பாடியிருக்கிறார். வாழையடி வாழையாகத் திருக்கூட்டத்தைத் தவிர வேறொன்றும் வருவதுண்டு. அது வாழைத் தோட்டந்தான். வாழையின் அடியில் வாழைக் கன்றுகள் தோன்றி அவற்றின் அடியில் இன்னும் பல வாழைக் கன்றுகள் தோன்றித் தோப்பாகவும் தோட்டமாகவும் கண்ணுக்கினிய காட்சி தருவது போன்ற அதிசயம் உலகத்தில் வேறு என்ன?

வாழைக் கன்று வைத்துப் பயிராக்கி வாழைத் தோட்டம் போடுவதற்கு வேண்டிய சகல விவரங்களுடனும் சர்வஜித்து பொங்கல் தினத்தன்று "வாழைத் தோட்டம்" என்னும் நூல் வெளியாகியிருக்கிறது. தமிழ் நாட்டுக்குரிய முக்கனிகளில் வாழைக்கனி முக்கியமானது. சிலப்பதிகாரம், சிந்தாமணி, பெருங் கதை ஆகிய பழந் தமிழ் நூல்களில் வாழைப்பழத்தைப் பற்றியுள்ள கவிகளைப் பாடிய வாயில் தேன் கதலி மணக்கும். ஏற்கெனவே "காய்கறித் தோட்டம்" என்னும் அருமையான நூலை வெளியிட்ட ஆசிரியர் மூ. அருணாசலம் அவர்கள்தான் இந்த நூலுக்கும் ஆசிரியர். இவர் விவசாய சம்பந்தமாக எழுதும் கட்டுரைகளும் புத்தகங்களும் ஏட்டுச் சுரைக்காய் வர்க்கத்தைச் சேர்ந்தவையல்ல; விவசாய இலாகாவின் வெளியீடுகளைப் போல் தெரியாத விஷயங்களைப் புரியாத தமிழில் ஸ்ரீ அருணாசலம் எழுதுவதில்லை. உண்மை அநுபவத்தில் அறிந்த விஷயங்களை இலக்கிய உணர்ச்சியோடு சேர்த்து எழுதித் தருகிறார்.

வளரும் தமிழுக்கு ஸ்ரீ மூ. அருணாசலம் செய்திருக்கும் மற்றொரு தொண்டு "கல்வியில் வேண்டும் புரட்சி" என்னும் பெயரை உடையது. ஆங்கில அதிகார வர்க்கத்தினர் இந்தியாவில் ஏற்படுத்திய கல்வி முறையைக் கண்டனம் செய்யாத அறிஞர்களோ, தேசத் தலைவர்களோ யாரும் இல்லை. கல்வி இலாகா அதிகாரிகளையும் ஆசிரியர்களில் பலரையும் தவிர மற்றப்படி நமது கல்வி முறையைச் சீர்திருத்த வேண்டும் என்பது எல்லாருக்கும் உடன்பாடு. எந்த முறையிலே கல்வியைச் சீர்திருத்த வேண்டும் என்பது பற்றிப் பல பிரமுகர்கள் தங்களுடைய கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். கல்விச் சீர்திருத்தத்தைப் பற்றி மகாத்மா காந்தியின் கட்டுரைகளைத் தொகுத்து நல்ல தமிழில் மொழிபெயர்த்து ஸ்ரீ மூ. அருணாசலம் நமக்கு அளித்திருக்கிறார். அவருக்கு நமது நன்றி.

"வாழைத் தோட்டம்" விலை ரூபாய் 1—12—0; "கல்வியில் வேண்டும் புரட்சி" விலை ரூ. 2—0—0. கிடைக்குமிடம்: காந்தி ஆசிரமம், கீழுருக்கிலடி, சிதம்பரம்.

அல்லயன்ஸ் பிரசுரங்கள்

தமிழ் நாட்டில் முதன் முதலில் நல்ல தமிழ்ப் புத்தகங்களை நல்ல முறையில் வெளியிடத் தொடங்கினவர் மயிலாப்பூர் அல்லயன்ஸ் கம்பெனியைச் சேர்ந்த ஸ்ரீ வி. குப்புசாமி ஐயர் அவர்கள். பல வருஷ காலம் "விவேக போதினி" என்னும் சிறந்த அறிவுக் களஞ்சியமான மாதப் பத்திரிகையை அவர் நடத்தி வந்தார். கால மாறுதல் காரணமாகப் பத்திரிகை நிறுத்தப்பட்டது. ஆயினும் அல்லயன்ஸ் கம்பெனியார் வளரும் தமிழுக்குச் செய்யும் தொண்டு இன்றுவரை சிறப்பாக நடைபெற்று வருகிறது. அந்த நாளில் "இராமாயண வினா விடை" "ஆரியமத உபாக்கியானம்" முதலிய நூல்களைப் பற்பல பதிப்புகள் வெளியிட்டுப் புகழ்பெற்ற அல்லயன்ஸ் கம்பெனியார் இந்த மறுமலர்ச்சி யுகத்தில் தமிழ்நாட்டுச் சிறு கதைத் தொகுதிகளையும் தேசத்தலைவர் சரிதங்களையும் ராஜாஜியின் "தாவரங்களின் இல்லறம்", "சிசுபாலனம்" என்னும் அரிய நூல்களையும் வெளியிட்டுச் சிறந்த தமிழ்த்தொண்டு ஆற்றியிருக்கிறார்கள்.

அல்லயன்ஸ் கம்பெனியின் சமீபகாலத்து வெளியீடுகளில் "பாரதி"யின் வாழ்க்கைச் சரிதம் முக்கியமான தொன்று. ஆசிரியர் நாரண துரைக்கண்ணன் எழுதிய இந்தப் புத்தகத்தின் முதல் பதிப்பு 1938-ம் வருஷத்தில் ஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்களுடைய முன்னுரையுடன் வெளியாயிற்று. அந்த முன்னுரையில் ஸ்ரீ சத்தியமூர்த்தி சொல்லியிருப்பதைக் கேளுங்கள் :—

"நம் நாட்டில் பிறந்த பெரியார்களையும் அறிஞர்களையும் தியாகிகளையும் புலவர்களையும் போற்றிப் புகழாத நாடு சிறப்படைந்ததில்லை. நம் தென்னாட்டில் பிறந்த பெரியார்களையும் அறிஞர்களையும் மதித்துப் போற்றும் வழக்கம் நம்மவர்களிடம் இல்லாமலிருப்பது வருந்தத்தக்கது. இப்போது தேசம் முழுவதும் பாராட்டப்படும் தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் உயிருடன் இருந்த காலத்தில் அவரது தேசபக்தியையும் கவித்துவத்தையும் நம்மவர் அறிந்து மதிக்கவில்லை. இந்த நிலைமையில் நண்பர் துரைக்கண்ணன் நம் தமிழ் நாட்டு மாபெருந் தலைவரும் தியாகியுமான ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சரித்திரத்தை எழுத முன் வந்ததற்காக அவரைப் பாராட்டுவதுடன் சந்தோஷமும் அடைகிறேன்."

திரு சத்தியமூர்த்தி மேற்கண்டவாறு எழுதி இன்று பத்து ஆண்டுகள் ஆகின்றன. எனினும் அவர் குறிப்பிட்ட குறை நம்மவர்களை விட்டு நீங்கிவிட்டதா என்றால், நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை. ஒரு சமயம் பார்த்தால் தமிழ் மக்கள் தங்கள் பெரியார்களைப் பாராட்டத் தொடங்கி விட்டார்கள் என்று தோன்றுகிறது. மற்றொரு சமயம் அதற்கு மாறாகத் தோன்றுகிறது.

எனினும் "ராஜாஜி" என்னும் இந்த நூல் மூன்றாவது பதிப்பாக சரியாக 1948-ம் ஆண்டில் வெளி வந்திருப்பது ஒரு நல்ல சகுனம் என்றே சொல்ல வேண்டும்.

ஆசிரியர் துரைக்கண்ணன் இந்த நூலை நல்ல முறையில் எளிய தமிழில் எழுதியிருக்கிறார். ராஜாஜியின் பிறப்பில் ஆரம்பித்து, சேலத்தில் வக்கீல் தொழில் செய்து, சமூக சீர்திருத்தம் தொடங்கியது முதலிய வரலாறுகளைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு, ராஜாஜியின் அரசியல் பிரவேசத்திலிருந்து விவரமாக அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளார். 1938-ம் வருஷத்திற்குப் பிறகு சரியாக வரையில் நிகழ்ந்துள்ள பத்து ஆண்டு சம்பவங்களையும் சேர்த்திருக்கிறார். தமிழ் நாட்டுக்கு நல்ல தொண்டு. புத்தகத்தின் விலை ரூபாய் இரண்டு.

தமிழையும் தமிழன்பர் உள்ளத்தையும் தமிழர் தெய்வமான திருமாலையும் ஆள வந்தவள் ஆண்டாள். சூடிக் கொடுத்த அந்த பக்த சிரோமணியின் கதை என்றும் அழியாத அமர கதை. ஆண்டாளின் பாடல்களோ கவி அமுதக் களஞ்சியங்கள்.

ஆண்டாளின் கதையைப் படிப்பதற்கும் நடிப்பதற்கும் உரிய அழகிய நாடகமாக்கித் தந்திருக்கும் ஆசிரியர் செ. வைத்தியநாதன், ஸ்ரீ பி. ஹனுமந்தராவ் இவர்களைப் பாராட்டுகிறோம். இந்த நாடகம் திருவல்லிக்கேணி தேசியப் பெண்கள் பாடசாலை மாணவிகளால் நடிக்கப் பெற்று ரசிகர்களின் பாராட்டைப் பெற்றது. விலை ரூ. ஒன்று.

அல்லயன்ஸ் கம்பெனியின் மற்றொரு பிரசுரம் "ஸ்ரீகண்டனின் புனர் ஜன்மம்". பம்பாயில் வெளியாகும் பிரபல ஆங்கில தினசரியின் உதவி ஆசிரியர் ஸ்ரீ கே. எஸ். எஸ். ராகவன் எழுதியது. இவர் தமிழைச் சிறந்த முறையில் கையாளும் ஆற்றல் பெற்றவர். உயர்ந்த இலட்சியங்களை வைத்துக் கதைகள் புனையும் சக்தி வாய்ந்தவர்.

கிட்டுவுக்கும் ஜானுவுக்கும் கலியாணம் நடக்கும் தினத்தில் ஒரு துர்மரணம் சம்பவித்துக் கலியாணம் தடைப்படுகிறது. கிட்டுவின் நண்பன் ஸ்ரீகண்டன் ஜானுவை மணந்து கொள்கிறான். அது வரையில் நாஸ்திகனாயிருந்த ஸ்ரீகண்டனுடைய உள்ளம் கொஞ்சம் கொஞ்சமாக மாறுகிறது. இல்வாழ்க்கையில் தகராறுகள் ஏற்படுகின்றன. ஜானு ஆற்றில் விழுந்து சாகிறாள். ஸ்ரீகண்டன் ஆஸ்திகனாகிறான்.

கதை வெகு ரசமாகவும் துரிதமாகவும் சென்று கடைசியில் ஆற்றில் குதிப்பது போலவே சட்டென்று முடிந்து விடுகிறது. விலை ரூபாய் 1-4-0.

பிழைக்கத்தான் !



நிற்பவர் :— என்ன ஸார், ஏன் இப்படிப் பிராணனை விட்டுக்கொண் டிருக்கிறீர் ?

உட்கார்ந்திருப்பவர் :— என்ன பண்ணுகிறது ? பிழைக்க வேணுமே, ஸார் !



பரவசம்!

படப் பிடிப்பு துரிதமாய் நடந்து கொண்டிருந்தது. டைரக்டர் ஒரு நடிகருக்கு நடிப்புச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். பிறகு நடிகர் தாமே நடித்துக் காண்பிக்க ஆரம்பித்தார். பலமுறை நடிக்க வேண்டியிருந்தது. கடைசியில் அவர் நடிப்பு நன்று யமைந்தது. டைரக்டர் சந்தோஷத்துடன் தலையசைத்தார். நடிகர் தம் நடிப்பின் முடிவில் பலத்த கரகோஷம் செய்தார்.

"உம்மை யார் கைதட்டச் சொன்னது? அப்படி நான் சொல்லிக் கொடுத்தேனு?" என்று கோபத்துடன் கேட்டார் டைரக்டர்.

"நான் என் நடிப்பில் பரவசமடைந்து விட்டேன். ஆகையால் சினிமா பார்ப்பவரின் ஸ்தானத்தில் நானே கைதட்டி விட்டேன்!" என்றார்.

★

நல்ல இடம்

மில் முதலாளி (மானேஜரைப் பார்த்து):- என் ஸார், எல்லாத் தொழிலாளர்களும் பார்க்கும்படியான இடத்தில் இந்த அறிக்கையை ஒட்ட வேண்டும். எங்கே ஒட்டலாம், சொல்லுங்கள்?

மில் மானேஜர்:—கடிகாரத்தின் மீது ஒட்டிவிட்டால் எல்லோரும் அவசியம் கவனிப்பார்கள்!

★

தேட வேண்டாம்!

மானேஜர் (தலைமைக் குமாஸ்தாவைப் பார்த்து):— என் ஸார், நீங்கள் இன்று நம்ம ஆபீஸ் காஷியரைப் பார்த்தீர்களா?

குமாஸ்தா:—இன்று காலையில் வழக்கத்தைவிட அவர் வெகுசீக்கிரம் ஆபீஸுக்கு வந்தார். ஆனல், அவர் தம் மீசையை எடுத்து விட்டிருந்தார். நம்ம ஆபீஸ் ரயில்வே கால அட்டவணையைக் கேட்டு வாங்கிக்கொண்டு அவசரமாய்ப் போனர்!

கோபமும் சாந்தமும்

குமாஸ்தா (கோபத்துடன் ஆபீஸ் பையனைப் பார்த்து):—என்னடா, முட்டாளாயிருக்கிறாய்! மானேஜரின் மேஜையில் இந்தப் பூக்கொத்தை வைத்திருக்கிறாயே? உன்னை யார் அப்படிச் செய்யச் சொன்னது?

ஆபீஸ் பையன்:— மானேஜர்தான் அந்தப் பூக்கொத்தை அங்கே வைக்கச் சொன்னருங்க!

குமாஸ்தா (அசட்டுச் சிரிப்புடன்):— பூ வைத்த பிறகு அவர் மேஜையே நன்றாயிருக்கிறது, இல்லையா?

★

மன வருத்தமா?

கணவன்:—எனக்கு ஐம்பது ரூபாய்ப் புடவைதான் பிடித்திருக்கிறது என்று நான் சொன்னல், கடைசியில் நீ நூறு ரூபாய்ப் புடவையை வாங்கிக் கொண்டு விட்டாயே!

மனைவி:—உங்களுக்கு மன வருத்தம் எதற்கு? அந்த ஐம்பது ரூபாய் புடவையையும் எடுத்துக் கொண்டு விடுகிறேன்!

★

போதாதுதான்!

மிருக வைத்தியர்:— இந்தப் பசுவுக்கு இந்த மருந்தில் தினம் இரண்டு ஸ்பூன் கொடுத்து வா, சரியாய்ப் போய்விடும்.

இடையன்:—இந்த மருந்து எப்படிங்க போதும்! என் மாடு எதுவானாலும் மாக்கால் கணக்காக அல்லவா நின்று தொலைக்கும்?

★

காரணம்!

"அந்தப் பெண்ணை உன் பிள்ளைக்கு விவாகஞ் செய்து கொள்ள மாட்டேனென்று சொல்லிக் கொண்டிருந்தாயே!"

"ஆமாம், பதின்மூன்று வயதான அந்தப் பெண் ஐந்தரை அடி உயரம் இருக்கிறுள் என்பதற்காக வேண்டாம் என்றேன்!"

"இப்பொழுது எப்படிச் சம்மதித்தாய்? அதற்குள் பெண்ணின் உயரம் குறைந்து விட்டதோ?"

"கையில் ரொக்கமாகப் பணம் கொடுத்து விட்டதால் நூற்றுக்கு இருபது வீதம் உயரத்தில் தள்ளிக் கொண்டேன்!"

ஏப்ரல் 9ந் தேதி

வெளிவருகிறது...

சந்திரலேகா

ஜெமினியின்

அற்புதமான

சிருஷ்டி



கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

20. உனக்கே அடைக்கலம்

மௌனமாக நிற்கும் ராமன் முன்பு, வாலி தன்னுடைய கோபத்தையும் மனக்கசப்பையும், பல்லை நெறு நெறு என்று கடித்துக் கொண்டு கண்ணிலிருந்து நெருப்புப் பொறி சிந்த, சொல்லி முடித்தான்.

> என்று தானும்
> எயிறுபொ டிபடத்
> தின்று, கான்று
> விழிவழித் தீயுக,
> வென்றி வாலி
> இனைய விளம்பினான் ;—
> நின்ற வீரனும்
> தன்சொல் நிகழ்த்தினான்.

[என்று தானும்: மேலே சொன்னபடி; எயிறு பொடிபடத் தின்று: உதிர்ந்து போகும் படியாகப் பல்லைக் கடித்து; கான்று விழிவழித் தீயுக: கண் வழியாகத் தீப்பொறிச் சிதறி விழ; வென்றி வாலி இனைய விளம்பினான்: வெற்றிக்குரிய வாலி இவ்வாறு எல்லாம் பேசி நிறுத்தினான்; நின்ற வீரனும் தன் சொல் நிகழ்த்தினான். எதிரில் நின்ற ராமனும் தான் சொல்ல வேண்டியதைச் சொல்ல ஆரம்பித்தான்.]

"அப்பா, வாலியே! எனக்கு ஒன்றும் பேசத் தெரியவில்லை. நீ பேசியதில் யாதொரு குற்றமும் இல்லை. உனக்குப் பெரிய பாதகத்தையே செய்து விட்டேன். நீ சொன்னது முற்றிலும் உண்மை. என் குலத்துக்கு தீராப் பழியை உண்டாக்கி விட்டேன். இப்போது உன்னையும் உன் உயரிய சீலத்தையும், தெரிந்து கொண்டேன். நீ உயிர் துறக்கும் தறுவாயில் இருக்கிறாய். செய்த தீங்கை அழிக்க வழி இல்லையே. என்னத்தை நான் செய்ய! நீ என்னை மன்னித்தருள வேண்டும்" என்று திக்கித் திக்கிச் சில வார்த்தைகள் ராமன் சொன்னான். ராமனுடைய முகத்தில் ஒரே துன்பமும் ஆற்றாமையும் நிறைந்து நிற்கின்றன.

வாலி ராமனது முகத்தைப் பார்த்தான். இதயம் இடிகிற நிலைமையையும் உணர்ந்தான். வாலிக்கு இரக்கம் வந்து விட்டது. அவனுடைய மதிப்பில் முன்னிலும் அதிகமாக உயர்ந்து விட்டான் ராமன்.

இந்தத் தறுவாயில் அனுமனும் வேறு சிலரும் அங்கு வந்து சேர்ந்தார்கள். அனுமன் சில வார்த்தைகள் பேசினான்:

"எல்லாம் விதி செய்த காரியம். வாலி, தம்பியை எவ்வளவோ அன்பாகப் பார்த்து வந்தான். அப்படியே தம்பி சுக்கிரீவனும், தமையன்மேல் அளவில்லாத அன்பைச் செலுத்தி வந்தான். ஒன்றிலும் குறைவில்லை.

"ஏதோ விதி வசத்தால் வாலி நாட்டைவிட்டு, தூர தேசம் போக நேர்ந்தது. சுக்கிரீவன் அரசியல் பொறுப்பை வகிக்க நேர்ந்தது. முன்னதாக யாதும் சொல்லி விடாமல் திடீர் என்று தமையன் திரும்பி வந்தான். வந்தபோது சில வினையாளர்கள் இனந் தெரியாமல் வாலியை மதியாமல் இருந்து விட்டார்கள்.

"வாலிக்குக் கோபம் வந்தது இயல்புதான். எல்லாம் சுக்கிரீவனது செயல் என்றே எண்ணி விட்டான். தம்பிமேல் ஒரே ஆங்காரம் பிறந்து விட்டது. அந்த ஆங்கார வெறியில் தம்பியைத் தொலைத்துவிட எண்ணி வேலை செய்தான். யார் சொல்லியும் வாலியின் செவியில் உண்மை ஏறவில்லை. சுக்கிரீவன் ஓடி ஒளிந்து பல கஷ்டங்களுக்கெல்லாம் உள்ளானான். என்னவானாலும் தமையன் பாலிருந்த இயற்கையான அன்பு இதயத்தை விட்டுப் போய்விடவில்லை. இதோ மூர்ச்சித்து விழுந்து கிடக்கிறானே! உண்மையை இது புலப்படுத்தவில்லையா!" என்பதாக மிக்க உருக்கத்தோடு பேசி முடித்தான் அனுமான்.

ராமனுக்கும் வாலிக்கும் உண்மை விளங்கி விட்டது. என்ன உண்மை?

விதியின் கொடுமையே எல்லாம்' என்ற உண்மைதான்.

தேக வலிமை நீங்கிய வாலிக்கு "அனுமன் சொல்லியதெல்லாம் உண்மைதான்; தம்பி சுக்கிரீவனைப் பகைத்ததெல்லாம் பிசகுதான்" என்று உணர முடிந்தது.

ராமனிடம் அனுமனைச் சுட்டிக் காட்டி "இவன் உண்மையில் மகா மேதாவி. உயர்ந்த ஆன்ம சக்தி வாய்ந்தவன். இவனைப் போன்ற உண்மையான துணை உலகத்தில் வேறு யாரும் உனக்கு இருக்க முடியாது. அனுபவத்தில் நீயும் அறிந்து கொள்ளுவாய்" என்றான் வாலி.

அடுத்தாற்போல் மூர்ச்சை தெளிந்து துயரத்தில் மூழ்கி நின்ற சுக்கிரீவனைப் பார்த்தான். அவனிடத்திலும் பரிவு உண்டாய் விட்டது வாலிக்கு. அவனிடம் பேசுகிறான்:

"ராமனைச் சாமான்யமாக எண்ணி விடாதே. தெய்வம் என்றே எண்ண வேண்டும். அவனது கருணையைப் பார்த்தாயா? அவனை வழி காட்டியாகக் கொண்டு காரியங்களை நடத்தினால் உனக்கு மாத்திரம் அல்ல நன்மை; நம் இனத்தார் எல்லோருக்குமே நன்மைதான். நம்முடைய முன்னோர் செய்த புண்ணியத்தாலே நம்மிடை வந்தான் ராமன்."

இந்த விதமாகப் பல உறுதி வாக்கியங்களை, ஏங்கி ஏங்கி அழுது கொண்டு நின்ற தம்பி சுக்கிரீவனுக்கு வாலி சொன்னான்.

என்ன இத் தகையவா ய
உறுதிகள் யாவும், எங் கும்
பின்னவற்(கு) இயம்பி, நின் ற
பேரெழி லானைநோக் கி
'மன்னவர்க் கரசன்மைந் த
மற்றிவன் சுற்றத் தோ டும்
உன்னடைக் கலம்' என் றுய்த் தான், —
உயர்கரம் உச்சிவைத் தான்.

[என்ன இத்தகைய வாய உறுதிகள் யாவும்: மேலே சொன்ன நல் மொழிகளை யெல்லாம்; எங்கும் பின்னவற்கு இயம்பி: ஆற்ற முடியாத துயரத்தில் ஏங்கி நின்ற தம்பி சுக்கிரீவனுக்குச் சொல்லி விட்டு: நின்றபேர் எழிலானை நோக்கி: அடுத்து நின்ற பேரழகுடைய ராமனை நோக்கி: மன்னவர்க்கு அரசன் மைந்த: சக்கரவர்த்தித் திருமகனே; மற்றிவன் சுற்றத் தோடும் உன் அடைக்கலம் என்றுய்த்தான்: சுற்றத்தார் எல்லாரோடுமே, இந்தச் சுக்கிரீவன் உன்னுடைய அடைக்கலப் பொருளாக அமைகிறான் — என்று ராமனிடம் ஒப்பித்தான்; உயர் கரம் உச்சி வைத்தான்: அப்படியே தலைமேல் கைகளைக் குவித்தவனாக.]

ராமன் இனிமேல் செய்யப் போகும் உதவிக்காக வாலி கைகூப்பி நன்றி செலுத்துகிறான். ராமனது கருணையை எப்படி அளக்கிறான் வாலி!

கவிதையின் சாரம் ★

காந்திஜி ஒருமுறை லண்டனுக்குப் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது, அதே கப்பலில் பிரயாணம் செய்த ஒரு வெள்ளைக்காரன், நாள்தோறும் வந்து காந்திஜியைத் திட்டி விட்டுப் போவது வழக்கமாயிருந்தது.

ஒருநாள் அவன் காந்திஜியைப் பற்றிச் சில விநோதமான கவிதைகள் எழுதிக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்து "இதைப் படித்துப் பாரும்!" என்று சொல்லிவிட்டுப் போனான். காந்திஜி அவன் கொடுத்த காகிதத்தைக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு, அதிலிருந்த குண்டூசியை மாத்திரம் எடுத்துப் பத்திரமாக ஒரு டப்பியில் வைத்துக் கொண்டார்.

மறுநாள் அந்த வெள்ளைக்காரன் வந்து, "என்ன காந்தி, நான் கொடுத்ததைப் படித்தீரா? அதில் ஏதாவது சாரம் இருந்ததா?" என்று கேட்டான்.

காந்திஜி சிரித்துக் கொண்டே, "ஆம், சாரம் இருந்தது. அதை எடுத்து டப்பியில் பத்திரமாக வைத்திருக்கிறேன்" என்றார்.

அஞ்சலையின்

பெரியமேட்டு வாய்க்காலின் இருபுறமும் கண்ணுக் கெட்டிய தூரம் வரை ஒரே பச்சைப் பட்டாடை விரித்தது போல நெற்பயிர் காணப் பட்டது. இளங் கதிர்கள் காற்றின் ஒவ்வொரு சலனத்துக்கும் நெளிந்து வளைந்தன. அவற்றின் ஒவ்வொரு அசைவும் 'நாங்கள் இருக்கிறோம். கவலைப் படாதீர்கள்!' என்று குடியானவர்களுக்கு உற்சாக மூட்டுவதைப் போல இருந்தது.

இளமையின் முறுக்கில் உச்சி வெய்யிலின் உக்கிரத்தையும் உணராமல் ஓடையின் கரைகளைச் செப்பனிட்டுக் கொண்டிருந்தான் மொட்டையன்.

"என்னப்பா, உச்சி வெய்யில்கூட உனக்கு உறைக்கலையா? நீ என்ன, கல்லு மனுசனா! உன் அப்பன் வீட்டு நிலம் போலப் பாடுபடறாயே! சரி, சரி! போதும். ஒருவாய்க் கஞ்சி குடிச்சிட்டுப் போ!" என்று அன்பும் அதிகாரமும் தொனிக்க மொட்டையனைக் கடிந்து கொண்டு, அஞ்சலை தன் தலையிலிருந்த கஞ்சிக் கலயங்களை ஒய்யார நெளிவுடன் கீழே இறக்கி வைத்தாள்.

மொட்டையன் அஞ்சலையின் குரலைக் கேட்டதும் வேலையை நிறுத்திவிட்டு, நிமிர்ந்து, அவிழ்ந்த முண்டாசைச் சரிப்படுத்திக் கொண்டே அவளை நோக்கி "எங்குட்டி! எங்க ஆயா வல்லையா? நீ பட்டுந்தான் வந்தயா?" என்று கேட்டான்.

"ஒங்க ஆயா வராட்டா ஒனக்குக் கஞ்சியே கிடைக்காதா? இல்லே, வேறே யாராச்சும் கொண்டு வந்தா நீதான் குடிக்க மாட்டாயா? இன்னிக்கி நான் தான் கஞ்சி கொண்டு வந்திருக்கேன். வேணும்னா குடி. இல்லாட்டி நான் திரும்ப எடுத்துக்கிட்டு போறேன்!" என்று மொட்டையன் வாயைக் கிண்டினாள் அஞ்சலை.

அஞ்சலையின் ஒவ்வொரு அங்கத்திலும், கொந்தளிக்கும் இளமையின் வனப்பையும், அவள் கருவிழிகளில் தோன்றிய குறும்புத் தனத்தையும் கண்டு ஆனந்தத்தில் மூழ்கிய மொட்டையன், "என்ன அஞ்சலை, அதுக்காட்டியும் இவ்வளவு கோவமா? நீ கொண்டு வந்தால் நான் குடிக்க மாட்டேனா, என்ன? ஆயா வல்லையான்னு கேட்டேன்; வேறு ஒன்றும் இல்லே" என்று அவளைச் சமாதானம் செய்தான்.

"எனக்குக் கோவமில்லே, மச்சான்! சும்மா கேட்டேன். ஆயாளுக்குக் கால்லே சுளுக்கிக் கிட்டதாம். அது நடக்க முடியல்லேன்னு தான் நான் கொண்டு வந்தேன். சரி, நீ கஞ்சி குடிச்சுட்டுக் கலயத்தை இங்கேயே வச்சுவை. நான் போய் எங்க அப்பனுக்குக் கஞ்சி ஊத்திட்டு வாரேன்" என்று சொல்லிவிட்டுக் கீழே குனிந்து ஒரு கலயத்தைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கையை அலட்சியமாய் வீசிக்கொண்டு போனாள்.

இரண்டு வயல்களுக்கு அப்பால் இருந்த ஒரு மேட்டுப்



கல்யாணம்

கி.ரா.

புளியமரத்தின்கீழ், அவனுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டு அவனுடைய தகப்பன் வீரன் களைப்புடன் உட்கார்ந்திருந்தான். அவள் பக்கத்தில் வந்து கலயத்தை இறக்கிவைத்ததும், "எம்மா, இன்னிக்கு மொட்டையனுடைய ஆயா வல்லையா? நீதான் அவனுக்கும் கஞ்சி கொண்டு வந்தாயா?" என்று அன்புடன் கேட்டான் வீரன்.

"ஆமாப்பா. ஆயாளுக்கு உடம்பு சரியில்லை. அதனாலே நான் கொண்டு வந்தேன்" என்றாள் அஞ்சலை.

அஞ்சலைக்கு மொட்டையன் மேல் உள்ள அன்பு வீரனுக்குத் தெரிந்தது தான். அது மாத்திரம் அல்ல; மொட்டையன் அவளைக் காதலிப்பதும், தலையாரி மகன் கோபால் மொட்டையனுடன் போட்டி போட்டுக்கொண்டு அஞ்சலையை எப்படியாவது தான் கலியாணம் செய்து கொண்டு விடுவது என்று துடித்துக் கொண்டிருப்பதும் அவனுக்குத் தெரியும். ஆனால் இதில் அவன் தலையிட்டுக் கொள்ள விரும்பவில்லை: தன்னுடைய அஞ்சலையின் விருப்பத்துக்கே விட்டு விட்டான். அப்படி அவன் தலையிடாமல் இருந்ததற்கு வேறு காரணங்களும் உண்டு. அதாவது, அவன் மொட்டையனுடைய வெகுளியான குணத்தையும் உண்மையான உழைப்பையும் கண்டு அவனுக்கே தன் மகளைக் கொடுக்க வேண்டுமென்று ஆசைப் பட்டாலும், அதை அவன் வாய்விட்டுச் சொன்னால், பெண்ணுக்கு முறைகாரனை தலையாரி மகன் கோபாலன் கோபித்துக் கொள்வான். அதனால் வீண் விரோதம் உண்டாகும்.

அஞ்சலை மொட்டையனுக்குக் கஞ்சி கொண்டுவந்து கொடுத்ததையும், அஞ்சலையும் மொட்டையனும் பேசிக் கொண்டிருந்ததையும் சிறிது தூரத்தில் வேலை செய்து கொண்டிருந்த தலையாரி மகன் கோபாலன் கவனித்துக் கொண்டிருந்தான். மொட்டையன் தான் அஞ்சலையைக் கட்டிக்கொள்ளப் போகிறானாம் என்று ஊரில் வதந்தி உலவியது அவனுக்குத் தெரியாதது அல்ல. அவன் யோசனை செய்து பார்த்தான். எந்த விதத்தில் அவன் மொட்டையனை விடத் தாழ்ந்தவன்? பணத்திலா, படிப்பிலா? — இல்லவே இல்லை. அதுமட்டுமின்றி, தான் ஒருவன்தானே அஞ்சலையை மணக்க முறைகாரன்! இவ்வளவையும் லட்சியம் செய்யாமல் அவள் மொட்டையனைக் காதலிக்கிறாள் என்பதை நினைக்கும்போதெல்லாம் அவனுக்கு உடலெங்கும் ஊசி கொண்டு குத்துவது போல் இருக்கும். மீசை துடிக்கும். கண்கள் கோபக் கனல் வீசும். ஆனால் இன்று அவன் கோபம் அளவையே மிஞ்சிவிட்டது. ஏதாவது நொண்டிச் சாக்கு வைத்து மொட்டையனை வம்புக்கு இழுத்து, அவனை நன்றாய் அடித்துவிட வேண்டுமென்று அவன் ஆசைப்பட்டான். அதற்கு அவனுக்கு ஒரு வழியும் புலப்பட்டது.

வழக்கம்போல் மொட்டையன் தான் சாகுபடி செய்யும் கீழக் குண்டுக்கு மடையைத் திறந்துவிட்டு நிலத்திலுள்ள களைகளைப் பிடுங்கிக்கொண்டிருந்தான். அரை மணிக்குப் பிறகு தண்ணீரின் ஓட்டமே தென்படாததால் அவனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். பக்கத்து வயல் கரையில் கோபாலனும் அவனுடைய கோஷ்டியும் கும்மாளம் போட்டுக் கொண்டு, தன்னைப் பார்த்துப் பரிகாசம் செய்துகொண்டிருப்பதைக் கண்டான். ஒரு நிமிஷத்தில் அவனுக்கு எல்லாம் விளங்கிற்று. ஒரு தீர்மானத்துக்கு வந்தவன் போல தலையசைத்து விட்டு, மண் வெட்டியைத் தோளில் போட்டுக் கொண்டு கோபாலனை நோக்கிச் சென்றான். இதைக் கண்ட கோபாலனும் அவனுடைய கோஷ்டியும் சட்டென்று தங்கள் பேச்சை நிறுத்திக் கொண்டு அவனுடைய வரவை எதிர்பார்த்துக் கண் கொட்டாமல்



உட்கார்ந்திருந்தார்கள். மொட்டையன் நேராக கோபாலனுக்கு எதிரே நின்று, "என்ன அண்ணே! எனக்குக் கொஞ்சம் தண்ணி பாய்ஞ்சதுக்கப்புறம் மடையை அடைக்கக் கூடாதா?" என்றான்.

"எலே, என் வயல் காயுது; நீ உன் வயலுக்குத் தண்ணி பாய்ச்சறுங்கறே! என் வயல் ரொம்பின பிறகுதான் திறக்க முடியும். உன்னாலே முடிஞ்சதைப் பாத்துக்கோ" என்று இறுமாப்பாகப் பதில் சொன்னான் கோபாலன்.

மொட்டையன் பொங்கி வரும் கோபத்தை அடக்கிக்கொண்டு "என்ன அண்ணே, நான் என்ன சொல்லி விட்டேன். இப்படி நீ ஒரேயடியா கோபிக்கிறியே!" என்றான்.

"டேய், நாக்கை அடக்கிப் பேசு! இல்லாவிட்டால், பல்லு முப்பத்திரண்டும் உதிர்ந்துவிடும்" என்றான் கோபாலன் ஆவேசமாக.

மொட்டையன் பொறுமை யிழந்து "அட, சரிதாங்கறேன்! உன் பாட்டன் வீட்டு வாய்க்காலாட்டமா அடைச்சிப் போட்டியே! மத்தவங்க தண்ணிக்கு என்ன செய்வாங்களாம்?" என்று சற்றுக் கடுமையாகவே கேட்டுவிட்டான்.

கோபால் கண்களில் கோபம் தெறிக்க "பாட்டன் பூட்டன்னு பேச நீ யாருடா, நாயே!" என்று மொட்டையன் கன்னத்தில் ஒரு அறை விட்டான். மொட்டையனும் கோபத்தில் என்ன செய்கிறோமென்பதை உணராமல் தோளிலிருந்த மண்வெட்டியை எடுத்துக் கோபாலின் தலைமீது போட்டான். மண் வெட்டி, வைத்த குறி தவறாமல் கோபாலனுடைய மண்டையைப் பிளந்தது. 'ஐயோ!' என்று அலறியபடி அவன் கீழே சாய்ந்தான். இதற்குள் கோபாலனின் கூட்டாளிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து மொட்டையனைத் தாக்கிக் குற்றுயிராய்க் கீழே தள்ளி விட்டு, ஸ்மரணையற்றுக் கிடந்த கோபாலனைப் பக்கத்து ஊரிலிருந்த ஒரு ஆஸ்பத்திரிக்கு எடுத்துக் கொண்டு போனார்கள்.

நடந்ததை அறிந்து ஓடோடி வந்த மொட்டையனின் தாயும் அஞ்சலையும் மொட்டையனைக் கொண்டுபோய் அதே ஆஸ்பத்திரியில் போட்டார்கள்.

*   *   *

மறுநாள் காலையில்தான் மொட்டையனுக்குப் பிரக்ஞை உண்டாயிற்று.

அவன் கண்ணை விழித்துப் பார்த்தான். பக்கத்திலே, அழுதழுது முகம் வீங்கிய அவன் தாயும் அஞ்சலையும் உட்கார்ந்திருப்பதையும், அஞ்சலையின் தகப்பன் வீரன் அங்கு நின்று கொண்டிருப்பதையும் கண்டான். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. சட்டென்று எழுந்திருக்க முயன்றான்; முடியவில்லை. உடம்பெங்கும் சகிக்க முடியாத ஒருவகை வலி உண்டாயிற்று. ஒருமுறை அவன் தன் உடம்பை உற்று நோக்கினான். கையிலும் காலிலும் பெரிய பெரிய கட்டுக்கள் போடப்பட்டிருந்தன. 'பளிச்'சென்று மொட்டையனுக்கு முதல் நாள் நடந்த சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது. தான் ஆஸ்பத்திரியில் இருப்பதை அவன் தெரிந்து கொண்டான். சற்று நேரம்வரை அவன் மீண்டும் கண்ணை மூடிக்கொண்டே ஏதோ யோசனை செய்து கொண்டிருந்தான். பிறகு வீரனை நோக்கி, "மாமா, டாக்டர் என்ன சொல்கிறார்? நான் பிழைப்பேனா?" என்று கேட்டான்.

"உனக்கு ஒரு ஆபத்தும் இல்லேப்பா. நீ இன்னும் ரெண்டு நாளிலே சுகமாயிடுவேன்னு டாக்டர் ஐயா சொல்றார். பேசாமல் தூங்கு" என்றான் வீரன்.

ஆனால் மொட்டையனுக்கு எப்படித் தூக்கம் வரும்? அவன் மீண்டும் வீரனைப் பார்த்து, "மாமா, கோபால அண்ணனுக்குப் பெரிய காயமா? அதுக்கு எப்படி இருக்கு?" என்று கேட்டான்.



"ஆமாம், ரொம்பப் பெரிய காயம், உன் மண்வெட்டி அவனுடைய மண்டையைப் பிளந்திடுச்சு. அவன் பிழைக்கிறதே அபூர்வமின்னு டாக்டர் சொல்றார். அவனையும் இந்த ஆசுபத்திரியிலேதான் கொண்டு வந்து போட்டிருக்காங்க" என்றான் வீரன்.



அதற்குமேல் வீரன் எதுவும் சொல்லவில்லை; மொட்டையனும் பேசவில்லை.

மொட்டையன் கண்ணை மூடிக்கொண்டான். ஆனால், அவனுடைய சிந்தனையோ வெகு வேகமாக வேலை செய்ய ஆரம்பித்தது. அவனுடைய கண் முன்னால் பல பயங்கரமான காட்சிகள் தோன்றத் தொடங்கின. கோபாலன் செத்துப் போவதாகவும் ஜனங்கள் எல்லோரும் தன்னைத் திட்டுவது போலவும் அவனுக்குத் தோன்றிற்று.

"ஐயையோ, கொஞ்சம் கோபத்தை அடக்கியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! மனுசனுக்குக் கோபம் வந்தா இப்படியா புத்தி பேதலிச்சுப் போகும்? கோபால அண்ணன் என்னுடைய கன்னத்தில் அறைஞ்சாத்தான் என்ன? அது வயசிலே என்னை விட மூத்ததுதானே?—பதிலுக்கு மண்வெட்டியாலே அதை வெட்டலாமா? பெரிய பாவம் அல்லவா செஞ்சுட்டேன்!" என்று அவன் தன்னை நொந்துகொண்டான்.

"என்ன, நல்லாத் தூங்கினையா?" என்ற சத்தத்தைக் கேட்டதும், மொட்டையன் திடீரென்று கண்ணை விழித்துப் பார்த்தான். டாக்டர் வீரனுடனும் மொட்டையனுடைய தாயுடனும் ஏதோ பேசிக்கொண்டிருந்தார். பிறகு மொட்டையன் அருகே வந்து, அவனுடைய உடம்பிலிருந்த கட்டுக்களின் ஒரு பகுதியை அவிழ்த்து, மருந்து வைத்து, மறுபடியும் கட்டுக் கட்டினார்.

மொட்டையன் டாக்டரைப் பார்த்து ரொம்பப் பணிவாக, "எசமான், எங்க அண்ணன் கோபாலுக்கு இப்போ எப்படி இருக்குது? பிழைப்பாரா?" என்று கேட்டான்.

டாக்டர் சிரித்துக்கொண்டே, "நீ கவலைப்படாதே! அவன் பிழைத்துக்கொள்வான்—நீ இன்னும் ஒரு நல்ல பலமான மண்வெட்டி தயார் செய்துகொள்!" என்று தமாஷாகச் சொன்னார்.

மொட்டையன் மீண்டும் டாக்டரைப் பார்த்து. "என் அண்ணனைப் பார்க்க வேணும் என்று எனக்கு ஆவலாக இருக்கு. உத்தரவு கொடுப்பீங்களா?" என்று வணக்கமாய் மேலும் கேட்டான்.

"ஆகட்டும்! பார்ப்போம்" என்று சொல்லிவிட்டு டாக்டர் அடுத்த வார்டுக்குப் போய்விட்டார்.

• • •

தலையைச் சுற்றிப் பெரிய கட்டுகளுடன் முகம் வெளிறிப் போய் கோபாலன் கட்டிலில் கிடந்தான்.

முதல் நாள் வயல் கரையில் நடந்த சம்பவங்களை எல்லாம் அவன் நினைத்துப் பார்த்தான்.

"மொட்டையன் மீது குற்றம் ஒன்றும் இல்லை. நான் செய்ததுதான் தப்பு. அஞ்சலைக்கு அவன்மேலே ஆசையிருக்கும்போது நாம் கட்டாயப்படுத்தினால் முடியுமா?"

தான் செய்த குற்றத்துக்காக மொட்டையனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவேண்டும் என்று கோபாலனுடைய உள்ளம் தவித்தது.

இந்தச் சமயத்தில் 'டக்' 'டக்' என்று பூட்ஸ் சத்தம் கேட்டது. கோபாலனுடைய கட்டிலுக்குப் பக்கத்திலே டாக்டரும் மொட்டையனும் வந்து நின்றார்கள். கோபாலன் இருந்த கோலத்தைப் பார்த்ததும் மொட்டையனுக்குப் 'பகீர்' என்றது. "ஐயோ அண்ணே, என்னால் அல்லவா உனக்கு இந்த கதி வந்தது?" என்று அவன்மீது விழுந்து புலம்பினான்.

கோபாலன் அவனைத் தழுவிக்கொண்டே, "தம்பீ, நீ என்ன செய்வே அப்பா! உன் மீது குற்றம் இல்லை. நான் செய்ததுதான் அநியாயம். அந்த அநியாயத்துக்கு ஒரு பரிகாரமும் கண்டுபிடித்திருக்கிறேன். சொல்லட்டுமா?" என்றான்.

மொட்டையன் மனம் இல்லாதவன் போல, "என்ன, சொல்லு!" என்றான்.

"அஞ்சலையை நீ கல்யாணம் பண்ணிக்கோ. நானும் எங்க அப்பனும் இருந்து உன் கல்யாணத்தை நடத்தி வைக்கிறோம்" என்றான்.

அப்போது மொட்டையனுடைய முகம் பளிச்சென்று மலர்ந்தது.

தட்சிணை கொடுப்பது யார்?

எஸ்.வி.எஸ்

ஜோதிடப்புலி தர்மராஜய்யர் எங்கள் ஊரில் ரொம்பப் பிரசித்தமானவர். கல்யாணமோ கார்த்திகையோ, எதுவானாலும் ஜோசியம் கேட்பதற்காக எல்லா ஜனங்களும் அவரிடம்தான் போவார்கள். ஆரூடம் பார்க்கிற விஷயத்திலும் அப்படியேதான். யாராவது ஒருவருடைய வீட்டில் களவு போய் விட்டதென்று வைத்துக் கொள்ளுங்கள். தர்மராஜய்யர் ஆரூடம் பார்த்து "உங்கள் வீட்டில் உள்ளவர்களிலே யாரோ ஒருவர்தான் திருடியிருக்கிறார்" என்று சொல்லி விட்டால், கட்டாயம் அந்த வீட்டில் உள்ளவர்கள்தான் திருடியிருப்பார்கள் என்று ஜனங்கள் முடிவுசெய்து விடுவார்கள்.

தர்மராஜய்யரைக் கலந்தாலோசிக்க ஜில்லா கலெக்டர்கள் வந்தார்கள். ஸப் ஜட்ஜுகளும் சீப் ஜட்ஜுகளும் அவரைப் பேட்டி காணப் போட்டி போட்டார்கள். சங்கீத வித்வான்கள், 'இத்தனாம் தேதி இந்த ஊரில் கச்சேரி செய்ய ஒத்துக் கொண்டால், அன்று சாரீரம் கெட்டுப் போகுமா, போகாதா?' என்று அவரிடம் ஜோசியம் பார்த்துத் தெரிந்து கொண்டுதான் கச்சேரிபண்ண ஒப்புக்கொள்வார்கள்.

இவ்விதம் அவருடைய புகழ் எங்கும் பரவியிருந்தாலும் 'மனுஷனுக்குப் பெயரையும் புகழையும்விட முக்கியமாக வேண்டியது பணம். பணம் பத்தும் செய்யும்' என்ற முடிவுக்கு வந்தார். ஆகவே தன் வீட்டுக்கு ஜோசியம் கேட்க யார் வந்தாலும் தட்சிணை கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையைச் சொன்னார்.

பிறகு கொஞ்ச நாளில் தம்முடைய ஜோசியத்துக்குத் தட்சிணைகளையும் நிர்ணயித்து விட்டார்.

மூன்று கேள்விகளுக்கு முக்கால் ரூபாய்.

ஆரூடம் பார்த்துச் சொல்ல ஆறு ரூபாய்.

ஜாதகப் பொருத்தம் பார்க்கப் பத்து ரூபாய்.

இம்மாதிரி ஒரு பெரிய அட்டவணையை வீட்டு வாசலில் கட்டித் தொங்கவிட்டார். யாரானாலும் அவருடைய வீட்டுக்கு வந்தால் முதலில் இந்த அட்டவணையைத் தரிசனம் செய்து விட்டுத் தங்களுடைய சட்டைப் பையிலும் கையைவிட்டுப் பார்த்துக் கொண்ட பிறகுதான் தர்மராஜய்யரைப் பார்க்க வேண்டும்.

இதனால் 'ஜோதிடப்புலி தர்மராஜய்யர்' என்ற பெயர் மாறி, 'தட்சிணை தர்மராஜய்யர்' என்ற பெயர் அவருக்கு உண்டாயிற்று.

ஒரு நாள் எதிர்பாராதவிதமாக தட்சிணை தர்மராஜய்யர் வீட்டிலேயே களவு போய் விட்டது. இரண்டாயிரம் ரூபாய் பெறுமான [illegible] நகைகளை யாரோ ஒருவன் அடித்துக் கொண்டு போய் விட்டான்.

இத்தகைய சந்தர்ப்பங்களில், எல்லாருக்கும் ஆரூடம் சொல்லித் துப்புத் துலக்கும் தர்மராஜய்யர், தம்முடைய விஷயத்தில் மாத்திரம் அந்த ஆரூடத்தை மூட்டை கட்டி வைத்துவிட்டு, நேராகப் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று களவு போன விஷயத்தை 'ரிப்போர்ட்' செய்தார்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் சற்று ஆச்சரியமடைந்து "என்ன தர்மராஜய்யர்வாள்! நீங்கள் ஏன் இங்கே வந்தீர்கள்? திருடன் யாரென்று நீங்களே பார்த்து எங்களிடம் சொல்லக் கூடாதா?" என்றார்.

"என்னையே கண்டுபிடிக்கச் சொல்லுகிறீர்களா?" என்று இன்ஸ்பெக்டரைப் பார்த்துக் கோபமாகக் கேட்டார் தர்மராஜய்யர்.




"இல்லை; நீங்கள் ஆரூடம் பார்த்துச் சொல்கிறவராச்சே என்று நினைத்தேன்."

உடனே தர்மராஜய்யர், "எங்க வீட்டு விவகாரத்துக்கு நானே ஆரூடம் பார்த்து விட்டால் தட்சிணை யார் கொடுப்பது? நீங்கள் தருவீர்களா?" என்று கேட்டார்.

இன்ஸ்பெக்டர் பிரமித்துப் போனார்.

"அவர்கள் தேனீரை விரும்பிய போதிலும் நல்ல டீ என்னவென்பது அவர்களுக்குத் தெரியாது. எப்படித்தெரியும்? அவர்கள் பாலை பாண்டத்திலேயே கலந்து, கோப்பையில் ஊற்றுமுன்பாகவே கெடுத்துவிடுகின்றனர். நல்ல டீ தயாரிக்க, பாலை பாண்டத்தில் கலக்கக்கூடாது; கோப்பையிலேயே சேர்த்துக்கொள்ள வேண்டும்."



கோடிக்கணக்கான மக்கள் சோர்வு நீங்கி புத்துணர்ச்சி பெறுவதற்கு டீ அருந்துகிறார்கள். ஆனால் டீ அருந்தும் பலருக்கு நல்ல டீ என்னவென்பது தெரியாமலிருப்பது வருந்தத்தக்கவிஷயம். நல்ல டீ தயாரிக்க எவ்வித அதிகச்செலவும் கிடையாது. ஐந்து சுலபமான விதிகளைப் பின்பற்றினால் போதும். உங்கள் பணத்துக்கு முழு மதிப்பு பெறவும், தேயிலைபானம் நறுமணம் ததும்பியிருக்கவும், இவ்விதிகளை உங்கள் மனதில் பதிய வைத்து, எப்போதும் வீட்டில் இவ்விதிகளைப் பின்பற்றச் செய்வது அவசியம்.

ஐந்து சுலபமான விதிகள்


[illegible]



டீயைப்போன்றது வேறெதுவுமில்லை.

இந்தியன் டீ மார்க்கெட் விஸ்தரிப்புப் போர்டாரால் வெளியிடப்பட்டது.


LIPTONS
WHITE LABEL
TEA
ONE POUND NETT
லிப்டன்ஸ்
என்றால்
முதல்தரமான டீ



பத்மா பாத்திரங்களைத் தேய்த்து அலம்பிக்கொண்டு போய், சமையலறையில் இருந்த பலகையின்மீது ஒழுங்காக அடுக்கி வைத்தாள். பிறகு கீழே கிடந்த சாமான்களை யெல்லாம் ஒருபுறத்தில் எடுத்து வைத்து விட்டு சமையலறையைத் துப்புரவாகச் சுத்தம் செய்தாள். அப்புறம் கிழவியின் அருகில் போய் உட்கார்ந்து அவளுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்தாள். நான் பேசாமல் அவளருகில் நின்றேன். "உனக்கு நேரமாகி விட்டால் நீ போ. நாளைக்குக் கட்டாயம் வா. மறந்து விடாதே!" என்றாள் அவள்.

"இல்லை. உன்னை வீட்டுக்குக் கொண்டு போய் விட்டு விட்டு அப்படியே நான் என் வீட்டுக்குப் போகிறேன்" என்றேன் நான்.

கடைசியில் ஒன்பது மணி சுமாருக்கு அவள் அங்கே யிருந்து புறப்பட்டாள். வழியில் நான், "பத்மா, நீ ஒரு தெய்வம் தான் அம்மா!" என்றேன்.

"அப்படி யெல்லாம் என்னைத் தூக்கி வைத்துத் தெய்வத்தின் பெயரைக் கெடுக்காதே! நான் செய்வது தன்னலமற்ற தியாகம் அல்ல; பண்ணின பாவங்களுக்குப் பிராயச் சித்தமாகும்! என்னைப் போன்ற அபாக்கியவதிகள் இந்த உலகத்தில் யாரும் இருக்க முடியாது; இருக்கவும் வேண்டாம்" என்றாள் அவள்.

நான் ஒன்றும் அறியாதவன் போல, "நீ சொல்லுவது ஒன்றும் புரியவில்லையே, பத்மா!" என்றேன்.

பத்மா சற்று நேரம் வரை எதையோ யோசித்துக் கொண்டிருந்து விட்டு "என்றைக்காவது ஒரு நாள் புரிந்து கொள்ளுவாய். இந்த ஜன்மத்தில் நான் பண்ணின பாவத்துக்குப் பிராயச்சித்தம் தீராது. அது தீருவதற்கு நான் இன்னும் எத்தனை ஜன்மங்கள் எடுக்க வேண்டியிருக்குமோ? யார் கண்டது?" என்றாள்.

"நீ என் மூளையை ஒரேயடியாகக் குழப்பி விடுவாய் போலிருக்கிறதே! நீ சொல்லுவது எனக்கு ஏதாவது விளங்கினால்தானே? நீ புரியும்படி சொல்லாத வரையில் நான் உன்னை விடப்போவதில்லை" என்றேன் நான்.

பத்மா ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டாளே யொழிய ஒன்றும் சொல்லவில்லை. கொஞ்ச தூரம் நாங்கள் இருவரும் பேசாமலேயே நடந்தோம். திடீரென பத்மா நடுங்கும் குரலில், "ஜோஹிரா, 'நான் யார்?' என்பது உனக்குத் தெரிந்துவிட்டால், உனக்கு என்னைப் பிடிக்காது; ஒரேயடியாக வெறுப்பாய்; என்னைக் கண்டாலே உனக்குக் கண்களைப் பொத்திக் கொண்டு ஓடிப் போய்விட வேண்டும் என்று தோன்றும்" என்றாள்.

அந்தச் சொற்களில் தான் என்ன மந்திர சக்தி யிருந்ததோ, எனக்குத் தெரியாது. எனக்கு மயிர்க் கூச்செறிந்தது. அந்த வார்த்தைகள் துயரமும் வேட்கையும் நிரம்பிய உள்ளத்திலிருந்து வெளி வந்தவையாகும். அவை என் நீச வாழ்வை என் கண்கள் முன்பு கொண்டு வந்து நிறுத்தின. என் கண்களில் நீர் நிரம்பியது. 'என் வேடத்தைக் கலைத்தெறிந்து விட்டால் என்ன?' என்றுகூடத் தோன்றிற்று. எத்தனையோ பெரிய பெரிய ஆசாமிகளையும், ஆபீஸர்களையும் கண்களில் விரலைவிட்டு ஆட்டி அழவைத்த எனக்கு அவளிடம் பயபக்தி எப்படித்தான்

உண்டாயிற்றோ, தெரியவில்லை. பிறகு நான் எப்படியோ என்னைச் சமாளித்துக்கொண்டு பேச முயன்றேன். இருந்தாலும் துயரம் தொண்டையை அடைத்தது.

"நீ நினைப்பது தப்பு, பத்மா! உன் காலடிகளில் விழுந்து நான் உன்னைக் கும்பிட்டாலும் கும்பிடுவேன். ஏனெனில் தன்னுடைய குற்றத்துக்காகவோ, தன்னைச் சார்ந்தவர்களுடைய குற்றங்களுக்காகவோ, மாசுமறுவற்ற மனம் படைத்தவர்களால்தான் இப்படி வெட்கி வருந்த முடியும்!" என்றேன்.

"ஆமாம், என்னைப் பற்றிக் கேட்டுத் தெரிந்துகொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்? உலகத்தில் எத்தனையோ ஏழை எளியவர்கள் இல்லையா? அவர்களில் நானும் ஒருத்தி என்று மாத்திரம் உனக்குத் தெரிந்தால் போதாதா?" என்றாள் பத்மா.

இம்மாதிரி பத்மா தன்னைப் பற்றிச் சொல்லாமல் மழுப்பி விடுவதற்கு எவ்வளவோ முயன்றாள். ஆனால் நான் அவளை இலேசில் விடவில்லை. கடைசியில் அவள் வாயிலிருந்தே விஷயத்தை வரவழைத்து விட்டேன் என்று சொல்லி நிறுத்தினாள் ஜோஹிரா.

ஆனால் ரமாகாந், "ஜோஹிரா, எல்லாவற்றையும் விஸ்தாரமாகச் சொல்லு" என்றான்.

"அந்தக் கதையை முழுவதும் சொல்ல யாரால் முடியும்? அதை முழுவதும் சொல்லுவது என்றால் இன்றைக்கும் சொல்ல வேண்டும், நாளைக்கும் சொல்ல வேண்டும். என் பலவந்தம் தாளாமல் அவள் கடைசியில், 'சர்க்கார் தரப்பில் சாட்சி சொல்லிக் குற்றமற்ற கைதிகளுக்குக் கடுந்தண்டனை வாங்கிக் கொடுத்திருக்கிறாரே, அதே ஆசாமியினுடைய மனைவி தான் நான்' என்று சொன்னாள். அதைச் சொல்லும்பொழுதே அவளுக்கு அழுகை வந்து விட்டது. அப்புறம் எப்படியோ அதை அடக்கிக்கொண்டு. 'எங்களுக்குச் சொந்த ஊர் அலகாபாத். அவர் ஊரைவிட்டு ஓடிவந்து விடும்படியான காரியம் ஒன்று நேர்ந்து விட்டது. ஆகவே அவர் யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவந்துவிட்டார். அவர் இருக்கும் இடத்தைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கே இவ்வளவு நாட்கள் ஆகிவிட்டது' என்றும் சொன்னாள்" என்றாள் ஜோஹிரா.


"ஆமாம், ஜோஹிரா! அந்தக் கதை ரொம்ப ரொம்பப் பெரிது. என்றைக்காவது ஒரு நாள் சாவகாசமாக உன்னிடம் சொல்லுகிறேன்" என்றான் ரமாகாந்.

"நீங்கள் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. மறுநாளே எல்லாம் எனக்குத் தெரிந்து விட்டது. இப்பொழுது பத்மா என்னுடைய அந்தியந்த தோழியாக்கும்! அவள் என்னிடம் எதையுமே ஒளிப்பதில்லை.

ஒரு நாள் அவள் சொன்னாள்: 'ஜோஹிரா! நான இப்பொழுது ஒரு பெரிய தர்மசங்கடத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறேன். ஒரு புறம் பார்த்தால், நம்மால் அநேகக் குடும்பங்கள் அழிந்துவிடப் போகின்றனவே என்று கவலையாக இருக்கிறது. இன்னொரு புறம் பார்த்தால் நம்மை நாமே அழித்துக் கொள்ளுவதா என்று தோன்றுகிறது. நான் நினைத்தால் இன்றே அந்தக் குடும்பங்களைக் காப்பாற்றி விடமுடியும். நான் என் கட்சியை நன்றாக எடுத்துரைத்து விட்டேனாகில், 'அப்ரூவர்'ன் பேச்சு கோர்ட்டாரின் காதுகளில் ஏறவே ஏறாது. ஆனால் நான் அப்ரூவரைத் தண்டனையிலிருந்து தப்புவிக்க முடியாதே! இந்தச் சங்கடத்தில் மாட்டிக் கொண்டு தான் நான் நரகவேதனைப்படுகிறேன். நிரபராதிகளை மடியவிடவும் மனம் வரவில்லை; என் கணவரைக் கைவிட்டுத் துன்புறுத்தவும் மனம் துணியவில்லையே! என்ன செய்வது?' என்று சொல்லியழுதாள். பிறகு, 'ஜோஹிரா! நான் என் உயிரை மாய்த்துக் கொள்ளத் தயார். ஆனால் அவருக்குச் சிறிதும் தீங்கிழைக்கத் தயாராயில்லை; நியாயத்தின் பெயரால் அவரைப் பலிகொடுக்கவும் விரும்பவில்லை. தீர்ப்பு என்ன ஆகிறது என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதற்கப்புறம் நான் என்ன செய்வேனோ, தெரியாது. ஹைகோர்ட்டில் கதையனைத்தையும் சொல்லுவேனோ அல்லது விஷம் தின்று உயிரை விடுவேனோ என்று இப்பொழுது சொல்லுவதற்கில்லை' என்றாள்.

அதற்குள் தேவியினுடைய வீடு வந்து விடவே நாங்கள்





பிரிந்தோம். பத்மா மறு நாளும் என்னை வரவேண்டும் என்று வேண்டிக் கொண்டான். பகல் முழுவதும் அவனுக்குப் பேச நேரம் இருப்பதில்லை. மாலை வேளைகளில் தான் சற்றுப் பேசுவான். இனைவரின் குடும்பத்தார் கஷ்டமின்றிக் காலக்ஷேபம் செய்வதற்கு வேண்டிய பணம் சேர்த்து வைத்து விடவேண்டும் என்பது அவனுடைய அந்தரங்க எண்ணம். இதுவரை அவன் இருநூறு ரூபாய் சேர்த்திருக்கிறான். நான்கூட ஐந்து ரூபாய் கொடுத்தேன். நான் இரண்டொரு தடவை, ‘உனக்கு என் இந்தத் தொல்லையெல்லாம்? பேசாமல் ஊருக்குப் போய் நிம்மதியாக இரேன்!’ என்று இலேசாகச் சொல்லிப் பார்த்தேன். ஆனால் உண்மையைச் சொல்லுகிறேன்: ‘நீ ஊருக்குப் போய்விடு’ என்று என்னால் அவனிடம் வற்புறுத்திச் சொல்ல முடியவில்லை. ஆனால் அவனுடைய முகபாவத்திலிருந்து, அவன் அம்மாதிரிப் பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ள விரும்பவில்லை என்பது மட்டும் நன்றாகத் தெரிகிறது — ஆமாம் ஒன்று செய்தால் என்ன?” என்று கேட்டான் ஜோஹிரா.

ரமாநாத் மேலெழுந்த வாரியாக “என்ன? சொல்லேன்!” என்று கேட்டான்.

“டிபுடி சூபரிண்டிடம் சொல்லிப் பத்மாவை மெதுவாக ஊருக்கு அனுப்பி விட்டால் என்ன?—அல்லது உங்களுக்கு வேறு ஏதாவது உபாயம் தோன்றினால் சொல்லுங்கள்” என்றான் ஜோஹிரா.

ரமாநாத் சற்று நேரம் யோசித்துப் பார்த்துவிட்டு “அப்படிச் செய்வது உனக்கு உசிதமாகப் படுகிறதா?” என்று கேட்டான்.

ஜோஹிரா வெட்கிப்போய், “உசிதமாகப் படவில்லைதான்......” என்று இழுத்தான்.

ரமாநாத் சட்டென்று எழுந்து உடை உடுத்திக்கொண்டு “அவன் இப்போது தேவிநினுடைய வீட்டில்தானே இருக்கிறான்?” என்று கேட்டான்.

ஜோஹிராவும் எழுந்து அவனருகில் வந்து, “ஆமாம், இப்பொழுதே அவனைப் பார்க்கப் போகப் போகிறீர்களா என்ன?” என்று கேட்டான்.

“ஆமாம், ஜோஹிரா! இதோ போய்க் கொண்டேயிருக்கிறேன். அவளிடம் போய் இரண்டு வார்த்தைகள் சொல்லி விட்டு, நான் முன்பு போக வேண்டும் என்று முடிவு கட்டி வைத்திருந்த இடத்துக்குப் போய் எல்லாவற்றையும் சொல்லி விடப்போகிறேன்” என்றான் ரமாநாத்.

“ஆனால் நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள், முடிவு என்ன ஆகும் என்று.”

“எல்லாம் நன்றாகச் சிந்தித்துப் பார்த்து விட்டேன். பொய்ச் சத்தியம் செய்தேன் என்ற குற்றத்துக்காக அதிகபட்சம் நாலைந்து வருஷங்கள் சிறைவாசம் செய்ய நேரும். அவ்வளவுதானே? போய் வருகிறேன், ஜோஹிரா! என்னை மறந்து விடாதே! கடவுள் கருணையிருந்தால் நாம் மீண்டும் சந்திப்போம்” என்று சொல்லிக் கொண்டே ரமாநாத் அறையைத் தாண்டி வராந்தாவுக்கு வந்து விட்டான். அடுத்த கணம் வராந்தாவில் இருந்தவன் வாசல் ‘கேட்’டுக் கருகில் இருந்தான். காவலாளி அவனைப் பார்த்ததும், “எசமான், இன்ஸ்பெக்டர் ஐயாவிடம் சொல்லிவிட்டுத்தானே வரீங்க?” என்று கேட்டான்.

“அவரிடம் சொல்ல வேண்டியது அனாவசியம்!”

“எசமான்! சற்று இருங்கள். இதோ நான் ஓடிப் போய்ச் சொல்லிவிட்டு வருகிறேன். இல்லாவிட்டால் எனக்கு ஆபத்து” என்றான் காவலாளி.

ரமாநாத் மறுமொழி யொன்றும் கூறவில்லை. வெகு வேகமாகச் சாலையில் நடக்கலானான். ஜோஹிரா அப்படியே அசையாமல் நின்றுகொண்டு ஆசை தவழும் கண்களுடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு ரமாநாத் மீது இம்மாதிரிப் பற்றுதலும் பிரியமும் இதுவரை ஏற்பட்டதேயில்லை.

காவல்காரன் ஓட்டமாக ஓடிப்போய் ஸப் இன்ஸ்பெக்டரிடம் சமாசாரத்தைத் தெரிவித்தான். அப்பொழுதுதான் அவர் சாப்பிட்டுவிட்டுப் படுத்திருந்தார். உடனே அவர் திடுக்கிட்டு எழுந்து ரமாநாத்தைப் பின் தொடர்ந்தார். “ஸார்! ஒரே ஒரு வார்த்தை! எங்கே போகிறீர்கள் என்பதையாவது தயவு செய்து

சொல்லிவிட்டுப் போங்கள்'' என்று கூவிக்கொண்டே தலைகால் புரியாமல் ஓடினார். திடீரென்று ஒரு கல் தடுக்கிக் குப்புற விழுந்தார். அவர் விழுந்ததைக் கண்ட ரமாகாந்த் திரும்பி வந்து அவரைத் தூக்கிவிட்டு, "காயம் - கீயம் பட்டு விட்டதா?'' என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை. தடுக்கி விழுந்து விட்டேன்—இவ்வளவு நேரம் கழித்து நீங்கள் எங்கே போகிறீர்கள்?''

"இதோ போய்விட்டு ஒரு மணி நேரத்துக் கெல்லாம் திரும்பி வந்து விடுகிறேன். யாரோ சிலர் ஹைகோர்ட்டில் மனு கொடுக்கும்படியாகப் பத்மாவைக் கலைத்து விட்டார்களாம். அவளிடம் போய் அப்படியெல்லாம் செய்து விடாதே என்று சொல்லிவிட்டு வருகிறேன்.''

"ஆமாம், இந்த விஷயம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

"ஜோதிரா எங்கேயோ கேள்விப்பட்டதாகச் சொன்னான்.''


"அப்படியா, உங்கள் மனைவி ரொம்பப் பொல்லாதவளா யிருப்பாள் போலிருக்கிறதே! இம்மாதிரிப் பெண்களைக் கண்டித்து வைக்கவேண்டும், ஸார்!'' என்றார் ஸப் இன்ஸ்பெக்டர்.

"அதற்காகத்தான் போகிறேன். இன்றிரவு வண்டியிலேயே ஏற்றி நான் அவளை ஊருக்கு அனுப்பிவிட்டு வருகிறேன்'' என்றான் ரமாகாந்த்.

"சற்றுப் பொறுங்கள். நானும் வருகிறேன்'' என்றார் ஸப் இன்ஸ்பெக்டர்.

"வேண்டாம் ஸார், வேண்டாம். நீங்கள் வந்தால் காரியம் கெட்டுவிடும். நான் போய்விட்டு இப்பொழுதே திரும்பி வந்து விடுகிறேன்!'' என்று சொல்லி விட்டு நகர்ந்தான் ரமாகாந்த்.

ஸப் இன்ஸ்பெக்டருக்குப் பேச வழியில்லாமல் போகவே ஒரு நிமிஷம் யோசித்துக்கொண்டு நின்றார்.



ரமாகாந்த் இன்னும் கொஞ்ச தூரம் சென்றதும், ஒரு வண்டியை அமர்த்திக் கொண்டு தேவீநின் வீட்டுக்குப் போனான்.

பத்மா அப்பொழுதுதான் ஜோதியின் வீட்டி லிருந்து திரும்பி வந்திருந்தாள். ஜோதி, தேவீநின், பத்மா ஆகிய மூவரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். இதே சமயம் ரமாகாந்த் "தாத்தா, தாத்தா'' என்று கதவைத் தட்டினான். தேவீநின் அவனுடைய குரலைப் புரிந்து கொண்டு, "தம்பி போலிருக்கிறதே!'' என்றான்.

"அவருக்கு இங்கே என்ன வேலை? வந்த வழியைப் பார்த்துக்கொண்டு போகச் சொல்லுங்கள்'' என்றாள் பத்மா.

"அப்படிச் சொல்லக்கூடாது, அம்மா! எதற்காக வந்திருக்கிறானோ, கேட்டுப் பார்ப்போம். ஆமாம், இந்த வேளையில் வெளியே வர அவனுக்கு எப்படி அனுமதி கிடைத்ததோ, தெரியவில்லையே!'' என்றான் தேவீநின்.

"எனக்குப் புத்தி சொல்ல வந்திருப்பார்! வேறென்ன?'' என்றாள் பத்மா.

தேவீநின் எழுந்து போய்க் கதவைத் திறந்தான். ரமாகாந்த் உள்ளே வந்து, "தாதா, இந்த வேளையில் நான் இங்கே எப்படி வந்தேன் என்று உனக்கு ஆச்சரியமா யிருக்கிறதா? நான் செய்த குற்றங்களுக் கெல்லாம் உங்களிடம் மன்னிப்புக் கேட்பதற்காக ஒரு மணி நேரத்துக்கு அனுமதி வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன். பத்மா மாடியில் இருக்கிறாளா?'' என்று கேட்டான்.

"இருக்கிறாள். இப்பொழுது தான் வந்தாள். உட்காரு, ஒரு பிடி சோறு சாப்பிடலாம்'' என்றான் தேவீநின்.

"இல்லை, நான் சாப்பிட்டு விட்டுத்தான் வந்தேன். பத்மாவிடம் இரண்டே இரண்டு வார்த்தைகள் பேச வேண்டும்'' என்றான் ரமாகாந்த்.

"அவள் உன் சொல்லைக் கேட்கப் போவதில்லை. எதற்கு வீணாக வாய் இழக்கிறாய்?'' என்றான் தேவீநின்.

"இல்லை, நான் அவளிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும். அதைக் கேட்க அவளுக்கு இஷ்டமா, இல்லையா என்று கேட்டுச் சொல்லு.''

தேவீநின் மேலே சென்று பத்மாவைப் பார்த்து, "தம்பி உன்னிடம் ஏதோ சொல்ல வேண்டும் என்று வந்திருக்கிறான்'' என்றான்.

பத்மா தலையைக் குனிந்து கொண்டு, "தாராளமாய்ச்

சொல்லட்டுமே! யார் வேண்டாம் என்று தடுத்தார்கள்?" என்று வெகு அலட்சியமாகச் சொன்னான். அவன் சொன்ன சொல் கீழே நின்றுகொண்டிருந்த ரமாகாந்தின் காதுகளிலும் விழுந்தது. அவளுடைய பேச்சில்தான் என்ன நிர்தாட்சண்யம்! அதைக் கேட்டதும் ரமாகாந்துக்கு அவளைக் காண வேண்டும் என்ற ஆசை அடியோடு அடங்கி விட்டது.

ரமாகாந் கீழே இருந்தபடியே, "அவளுக்கு என்னிடம் பேச இஷ்டமில்லையென்றால் நான் ஒன்றும் பலவந்தப் படுத்தவில்லை. நான் ஜட்ஜிடம் சகல விருத்தாந்தங்களையும் ஆதியோடு அந்தமாகச் சொல்லிவிடுவது என்ற முடிவுக்கு வந்து விட்டேன். அதே நோக்கத்துடன்தான் இந்நேரத்தில் புறப்பட்டு வந்தேன். என் காரணமாக அவள் எவ்வளவோ கஷ்டங்கள் அனுபவிக்க நேர்ந்தது. அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். அப்போது என் மூளை மழுங்கிக் கிடந்தது; சபலம் என்னைக் குருடாக்கி விட்டது. உயிர்மேல் உள்ள ஆசை, யோசிக்கும் சக்தியை அபகரித்து விட்டது. அதை என்னுடைய கிரகக் கோளாறு என்று தான் சொல்ல வேண்டும். பத்மா செய்த அனுஷ்டானங்களினால்தான் அது விலகியது. நான் செய்த குற்றங்களுக்கு நான் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டி வரலாம். அதற்காக நான் பயப்படவில்லை. பத்மா, உயிருடன் இருந்தால் நாம் மீண்டும் சந்திப்போம். என் குற்றங்களை மறந்து விடு. என்னையும் மறந்து விடு. தேவீநின் தாத்தா! பாட்டி! நீங்களும் என் குற்றத்தை மன்னியுங்கள். நீங்கள் செய்த உதவியை நான் என்றென்றும் மறவேன். தெய்வத்தைப்போல் கை கொடுத்து உதவிய உங்களையும் எத்தனையோ பொய்களைச் சொல்லி நான் ஏமாற்றியிருக்கிறேன். உயிருடன் திரும்பி வந்தால் உங்களுக்கு ஓடாக உழைப்பேன். என் வாழ்க்கை எதற்குமே உதவாக்கரையாகி விட்டது. அதைக் குட்டிச்சுவராக்கிக் கொண்டவன் நானேதான். பத்மாவிடம் இதையும் சொல்லுங்கள்: அவளுடைய நகைகளை நானேதான் திருடினேன். நகைக்கடைக்காரனுக்குக் கொடுக்கக் கையில் பணம் இல்லாமல் போய்விடவே அவளுடைய நகைகளைத் திருப்பிக் கொடுக்கும்படியாகி விட்டது. ஆகவே அந்தத் திருட்டுத் தொழிலை நான் செய்ய நேர்ந்தது. நான் செய்த அந்தத் தீய செயல்களுக்குத்தான் இன்றுவரை பலன் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். உயிருள்ள வரை அனுபவித்துத்தான் ஆகவேண்டுமோ, என்னவோ? எல்லாவற்றையும் மறந்து நீங்கள் எல்லாரும் என்னை மன்னித்துவிடவேண்டும். இதைச் சொல்லிவிட்டுப் போவதற்காகத்தான் நான் இங்கே வந்தேன்" என்றான்.

இதைச் சொல்லி முடித்ததும் ரமாகாந் 'விடு விடு' என்று படி இறங்கி வெளியேறி விட்டான். பத்மா மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தாள். அதற்குள் ரமாகாந் மறைந்துவிட்டான்.

(தொடரும்)

காந்தி அஞ்சலி - 12

ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலைப் பேராசிரியர் கில்பர்ட் மர்ரே காந்திஜியைப் பற்றிக் கூறியது:—

இந்திரிய சுகங்களைக் கருதாமல் சௌக்கியம், புகழ், அந்தஸ்து, முதலியவற்றைப் புறக்கணித்து விட்டு, தனக்குச் சரியென்று தோன்றுகிறபடி நடப்பது என்று யார் தீர்மானித்து விட்டார்களோ, அவர்களிடம் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். ஏனென்றால், அத்தகையவர்கள் சமாளிக்க முடியாத எதிரிகள். அவர்களுடைய ஸ்தூல தேகத்தை எதிர்த்து வெற்றியடையலாம். ஆனால், அவர்களுடைய ஆன்மாவை விலைக்கு வாங்க முடியாது.

• • •

சட்டத்தையும் சகோதரத்வத்தையும் புறக்கணிக்கும் அரசாங்கங்களிடம் மக்கள் தங்கள் வாழ்க்கையை ஒப்படைத்திருக்கும் இந்தக் காலத்தில், காந்திஜீ ஒரு மகாபுருஷராகவும் எல்லோருடைய இதயத்திலும் வீற்றிருக்கக் கூடியவராகவும் விளங்குகிறார்.

அவர் ஓர் அரசர். லட்சக்கணக்கான ஜனங்கள் அவருக்குக் கீழ்ப்படிகிறார்கள். ஏன்? அவருக்குப் பயப்பட்டுக் கொண்டா? — அல்ல! — அவரிடம் கொண்ட அன்பினாலேதான். ஏராளமான செல்வம் இருக்கிறது. இரகசியப் போலீஸ் இருக்கிறது. இயந்திர பீரங்கிகள் இருக்கின்றன என்பதற்காக அவரை யாரும் பெரியவராக மதிக்கவில்லை; ஆத்ம சக்தி மிக்கவர் என்பதற்காகவே அவரை எல்லோரும் போற்றுகிறார்கள்.

இத்தகைய ஒருவருக்கு அவருடைய சிஷ்யர்கள் பக்தியுடன் சூட்டியிருக்கும் 'மகாத்மா' என்ற பட்டத்தை நானும் சூட்டிப் பணிவோடு வணங்குகிறேன்.



உங்கள் வயது உங்களின் ஆரோக்கியத்தைப் பொறுத்தது!...

தளாவு, சோர்வு, குழி விழுந்த கண்கள் இவைகள் நிஜ வயதை அதிகப்படுத்திக் காட்டுகின்றன. இதற்கு காரணம் தங்கள் குடல் சரிவர வேலை செய்யாமல் மலச்சிக்கல் ஏற்படுவதினால் தான். தித்திப்பான போனேமின்ட் உங்களுக்கு சௌகரியத்துடன் சௌந்தர்யத்தையும் அளிக்கும்.

சுலபமாக
மலமிளக்கும்
உன்னத சஞ்சீவி

போனேமின்ட்
லாக்ஸேடிவ் சூயிங் கம்

ரூ. 1—2—0, ரூ. 0—7—0 ஆகிய இரு சைஸ்களில் எங்கும் கிடைக்கும்

சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜன்டுகள் :

ஓரியண்டல் மர்க்கன்டைல் ஏஜன்ஸி, 99-A, அரமனைக்காரத் தெரு, மதராஸ்

No. 1.

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள். நம்பர் 80 வரை நூல்கள்.

எங்களுடைய விசேஷமான நூல்கள்: ஒற்றை நூல், இரட்டை நூல், பனியன் தேவைக்கேற்ற கோன் நூல், மில் தேவைக்கேற்ற சீஸ் நூல், முறுக்கேற்றிய நூல்.

நாங்கள் சப்ளை செய்வது: கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய வகைகள் நூல்கள், இயந்திர தேவைக்கேற்ற வார்ப்பு நூல்கள் கலந்த வெப்பில், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர தேவைக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள் எங்கள் மிகப்பிரிய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை. நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

தற்போது நூல் விநியோகம் கட்டுப்பாடு செய்யப் பட்டுள்ளதால், நூல் தேவையானவர்கள் தங்கள் மாகாணம் அல்லது சமஸ்தான டெக்ஸ்டைல் கண்ட்ரோல் அதிகாரிகளுக்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

மானேஜர்கள் : ஏ. & எப். ஹார்வி லிமிடெட்.


எப்பொழுதும் எல்லா சீதோஷ்ண நிலைகளிலும்
இருமல்
ஜலதோஷம்
SIROLIN
ROCHE
இவைகளை
குணப்படுத்த
ஸிரோலின்
"ரோச்"
உலகமெங்கும் உபயோகிக்கப்படுகிறது



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



KALKI மார்ச் 14, 1948 **4** அணா

REGD. NO. M. 4392



பம்பாய் ஆபீஸ்: 142, ஓல்டு மோடி ஸ்ட்ரீட், போர்ட். இலங்கைக்கு சோல்டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:
மெஸர்ஸ். துரை, அருள் & கோ., லிட்., 83, கெய்ஸர் தெரு, கொழும்பு